
# கிராம நலம்

டிசம்பர் '66




நிலக்கடலையைத் தாக்கும் சிகப்புக் கம்பளிப் பூச்சியை அழித்து,
பயிரைப் பாதுகாக்க, விமானம் மூலம் மருந்து தெளித்தல்.


[தென் ஆர்க்காடு மாவட்டம், மைலம், ஒலக்கூர் வட்டாரப் பகுதிகள்]

சோவியத் விமானத்தின் மூலம், ருஷ்ய விமானிகளால்,
இப்புதிய பணி நிறைவேற்றப்பட்டது.

# பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டங்கள் குறித்து
## மாநில அளவில் முக்கிய ஆலோசனைக் கூட்டம்....







எல்லா அமைச்சர்களும், அரசாங்கத் தலைமை அதிகாரிகளும், மாவட்டக் கலெக்டர்களும் கலந்து கொண்டனர்..

[24, 25 அக்டோபர் 1966 — சென்னையில்]

# கிராமநலம்

கதிர் 12 டிசம்பர், 1966 நெல் 3

## பஞ்சாயத்துப் பணி சிறக்க . . .

கிராம வளர்ச்சிப் பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கான வழி முறைகளைக் காணவும், நடைமுறைப் பிரச்னைகளை ஆராயவும், நமது பஞ்சாயத்து ஆட்சி முறையில், பல கட்டங்களிலும் வாய்ப்பு தரப்பட்டிருக்கின்றது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், மாவட்ட அபிவிருத்தி மன்றம், மற்றும் மாநில அளவில் பஞ்சாயத்து வளர்ச்சி ஆலோசனைக் குழு ஆகிய இவற்றின் வாயிலாக, மக்கள் பிரதிநிதிகள் தங்களுக்குள் விவாதிக்கவும், அரசாங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசனை செய்யவும், வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் வகுத்துக்கொண்டுள்ள இந்த ஏற்பாடு, தக்க முறையில் பயன்படுத்தப்படுவதால், பஞ்சாயத்து ஆட்சிமுறை மேலும் சீராக நடைபெறவும், மக்களுக்குப் பல்வேறு நன்மைகளை விரிவாகவும் விரைவாகவும் நிறைவேற்றவும் வழியுண்டாகும்.

மாநில அளவிலான பஞ்சாயத்து வளர்ச்சி ஆலோசனைக் குழு, அண்மையில் (அக்டோபர் 24, 25 தேதிகளில்) சென்னையில் கூடியபோது, பஞ்சாயத்து நிர்வாகம், வேலைத்திட்டம், சமூகநலத்திட்டங்கள் ஆகியவற்றைப் பற்றியும், சிறப்பாக உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான வழி முறைகள் பற்றியும் விரிவாக விவாதிக்கப் பட்டது. முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்குழுவின் இருநாள் கூட்டங்களில், பஞ்சாயத்துக்கள்—தல ஆட்சித்துறை அமைச்சர் திரு எஸ். எம். ஏ. மஜீது அவர்களும், மற்ற அமைச்சர்களும், அரசாங்கத்தலைமை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட அபிவிருத்தி மன்றங்களின் பிரதிநிதிகளும், இந்தியப் பாராளுமன்ற—தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் செய்த சிபாரிசுகளும், அவற்றை ஆராய்ந்து அரசாங்கம் எடுத்துக்காட்டிய குறிப்புகளும், நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தன.

### பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம் கட்ட உதவி

வேலைத் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டபோது, ரூ. 6,000 உத்தேச மதிப்பில் அலுவலகக் கட்டிடம் கட்டிக்கொள்ள, பஞ்சாயத்துக்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது. அதற்கு, அரசாங்க மானியம் கிடைக்கும் என்றும், உள்ளூர் நன்கொடைகள் கிடைப்பதையொட்டி, படிப்படியான செயல் திட்டமாக இதை மேற்கொள்ளலாம் என்றும், முதலமைச்சர் யோசனை கூறினார். மதிய உணவுத் திட்டத்திற்கான நன்கொடைகள் பற்றிய ஆலோசனையின்போது, இத் திட்டம் சம்பந்தமான நிதிப் பிரச்னைகளை நிரந்தரமாகச் சமாளிக்க, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் உள்ள கிராம மக்கள் சுமார் ஐந்து ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளிக்கும்படி முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். முக்கியமான இவ்விரு யோசனைகளையும், பஞ்சாயத்து ஆட்சியில் அங்கம் வகிக்கும் அனைவரும் நிறைவேற்றத் தொடங்குவது நலம்.

கிராம வளர்ச்சிப் பணிகளை, குறிப்பாக, உணவு உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில், புதிய கண்ணோட்டம் தேவை என்று, கூட்டத்தில் பல உறுப்பினர்கள் வலியுறுத்தினர். அத்தகைய கண்ணோட்டம் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை, கிராம வளர்ச்சி நெறியாளரும் குழுவின் உறுப்பினர்-செயலாளருமான திரு கா. திரவியம் அவர்கள் விளக்கினார். விவசாயத் திட்டங்களை, எல்லா வட்டாரங்களுக்கும் பொதுவாக அரசாங்கமே வகுத்துத் தந்து, அவற்றைப் பஞ்சாயத்துக்கள் செயல்படுத்துவது என்று முன்பு இருந்த ஏற்பாட்டுக்குப் பதிலாக, ஆங்காங்கு உள்ள உள்ளூர்த் தேவைகள், வசதி நிலைமைகளுக்கு ஏற்ப திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த இப்போது வசதி செய்யப்பட்டு, இப்புதிய ஏற்பாடு செயல்முறைக்கும் வரத் தொடங்கி விட்டது. அதேபோல், பஞ்சாயத்து உறுப்பினர்களல்லாத, ஆனால் விவசாய அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனையையும் பெறத்தக்க வகையில், அத்தகையவர்களின் குழு ஒன்றை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் அமைக்கச் சட்ட பூர்வ ஏற்பாடு செய்யப்படுவதையும், கிராம வளர்ச்சி நெறியாளர் தெரிவித்தார்.

நீலகிரி, கன்னியாகுமரி, தர்மபுரி, இராமநாதபுரம் உட்பட அந்தந்த மாவட்டங்களின் தனித்த பிரச்னைகள் பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மற்றவர்களும் விரிவாக ஆராய்ந்தனர்.

மின்சார உபயோக நெரிசல் உள்ள நேரம் தவிர்த்த இதர நேரங்களில் எல்லாம், விவசாய பம்புசெட்டுகளுக்கு மின்சாரக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுவிட்டதாகக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட செய்தி, மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வரவேற்கப்பட்டது.

ஆக, பஞ்சாயத்து வளர்ச்சி ஆலோசனைக் குழுவின் இருநாள் விவாதத்தில், கீழ்க்கண்ட நான்கு விஷயங்கள் முக்கியமானவைகளாகும்:—

(1) நகரப் பஞ்சாயத்துக்களைப் போன்றே, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், சொந்த அலுவலகக் கட்டிடங்கள் கட்ட, அரசாங்க உதவித் திட்டம்.

(2) உணவு உற்பத்திப் பெருக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் விவசாய அனுபவமுள்ளவர்கள் குழு அமைக்கச் சட்ட பூர்வ ஏற்பாடு.

(3) விவசாய பம்பு செட்டுகளுக்கு, மின்சாரக் கட்டுப்பாடு நீக்கம்.

(4) மாவட்டங்களின் குறிப்பிட்ட பிரச்னைகள் பற்றி விசேடப் பரிசிலனை.

எழுத்தறிவுக்கும் பணியில்

# ஏறுநடை போடும் பாரதம்

(ஒரு கண்ணோட்டம்)

**பாரதத்தில்**

* **பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை :**

| | |
|---|---|
| 1947-ல் | 20 மிலியன் |
| 1966-ல் | 70 மிலியன் |

* **எழுதப்படிக்கத் தெரிந்தோர் :**

| | |
|---|---|
| 1947-ல் | 14·7 சத விகிதம் |
| 1966-ல் | 30 சத விகிதம் |

* **பள்ளிகளின் எண்ணிக்கை :**

| | |
|---|---|
| 1951-ல் | 2,23,000 |
| 1966-ல் | 5,00,000 |

* **1947-ல்**

6 முதல் 11 வயது உள்ள குழந்தைகளில், மூன்றில் ஒருவர்தான் பள்ளியில் படித்தனர்.

**ஆனால் 1966-ல்**

இதே வயதுக்குழந்தைகளில், ஒவ்வொரு நான்கு குழந்தைகளில் மூன்று குழந்தைகள் பள்ளிக்குச் சென்று படிக்கின்றனர்.

* **உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள்:**

| | |
|---|---|
| 1950-ல் | 11 லட்சம் |
| 1965-ல் | 70 லட்சம் |

* **கல்லூரிகளில்**

| | |
|---|---|
| 1950-ல் | 3 லட்சம் |
| 1965-ல் | 18 லட்சம் |

* **தேசிய ஆராய்ச்சிக் ஆய்வுக் கூடங்கள் : 30**

* **பொறியியல் கல்லூரிகள் — தொழில் நுட்பக் கல்லூரிகள் :**

| | |
|---|---|
| 1947-ல் | 45 |
| 1966-ல் | 140 |

* **பொறியியல்—தொழில் நுட்பக் கல்லூரிகளில் மாணவர்கள் :**

| | |
|---|---|
| 1951-ல் | 4,120 |
| 1966-ல் | 24,700 |

* **தொழிற் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள் :**

| | |
|---|---|
| 1947-ல் | 43 |
| 1965-ல் | 274 |

* **தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் :**

| | |
|---|---|
| 1951-ல் | 5,900 |
| 1966-ல் | 49,900 |

* **விவசாயக் கல்லூரிகளில் மாணவர்கள் :**

| | |
|---|---|
| 1951-ல் | 1,000 |
| 1966-ல் | 9,000 |

* **கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் மாண வர்கள் :**

| | |
|---|---|
| 1951-ல் | 434 |
| 1965-ல் | 1,319 |

* **கல்விக்காக நபர் ஒன்றுக்கு ஆன செலவு :**

| | |
|---|---|
| 1951-ல் | ரூ. 3 |
| 1965-ல் | ரூ. 12 |

கல்லூரி மாணவர்களில் ஆறில் ஒரு பங்கினர், உபகாரச் சம்பளமும் நிதி உதவியும் பெற்று படிக்கின்றனர்.

* தொழில் நுட்பக்கல்வி வளர்ச்சியில், இந்தியாவில் பிரம்மாண்டமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது, இந்தியா போன்ற வளர்ச்சி பெறும் எந்த நாடும், இவ்வளவு பெரிய முன்னேற்றத்தை, இத்துறையில், சமீப கால வரலாற்றில் அடையவில்லை.

** கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் ஏழு விவசாயப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

*** ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்த பட்சம் ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் இருக்கவேண்டு மென்பது அரசின் குறிக்கோள்.

**** ஆராய்ச்சித் துறைக்காக (Research and Development) செலவான தொகை :

| | |
|---|---|
| முதல் 5 ஆண்டு திட்டத்தில் | ரூ. 20 கோடி. |
| இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தில் | ரூ. 67 கோடி. |
| மூன்றாவது 5 ஆண்டுத் திட்டத்தில் | ரூ. 145 கோடி. |

***** நான்காவது திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 1,210 கோடி ரூபாய்.

****** 1, 2, 3-வது ஐந்தாண்டுத் திட்டங்களில் செலவிடப்பட்ட மொத்தத் தொகையைவிட, இது 20 சத விகிதம் அதிகம்.

******* மூன்றாவது திட்டத்தில் செலவிடப்பட்டதை விட, இத்தொகை இரண்டு மடங்கு அதிகம்.

******** நான்காவது திட்ட முடிவில், மதிய உணவு பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை இந்த நாட்டில் 2 கோடியாக இருக்கும்.

[ஆதாரம் : மத்திய அரசாங்க செய்தி ஒலிபரப்புத் துறை வெளியிட்டுள்ள 'செய்தி விளக்கக் குறிப்புகள், (TALKING POINTS)].

## தமிழ்நாட்டில்

# விவசாய உற்பத்திப் பெருக்கம்

[திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., செயலாளர், விவசாயத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்]

தமிழ்நாட்டின் தலையாய தொழில் விவசாயம். பல்லாயிரம் ஆண்டுகளாக நம் மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆனால், கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வரை, இப் பழம் பெருந் தொழிலை நவீன முறையில் திருப்புவதற்கோ அல்லது திட்டமிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கோ, சரியான முயற்சிகள் தீவிரமாக கைக்கொள்ளப்படவில்லை. நாடு சுதந்திரம் பெற்று, ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பெற்ற பின்புதான், திட்டமிட்ட விவசாய சகாப்தமும் தொடங்கியது.

நமது முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் 1951–52-ல் ஆரம்பமாயிற்று. அச்சமயத்தில், அப்போதிருந்த சென்னை மாநிலத்தில் மொத்த உணவு உற்பத்தி 30·94 லட்சம் டன்கள். சராசரியாக, ஏக்கருக்கு 1,016 ராத்தல் அரிசியும், 536 ராத்தல் சோளமும், 400 ராத்தல் கம்பும் உற்பத்தியாயிற்று

### முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயம்

வெகு வேகமாக பெருகிவரும் ஜனத்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், இறக்குமதியைக் குறைக்கவும் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பருவ நிலையும் சாதகமாக அமைந்தது. இதன் விளைவாக திட்டக் குறியீடான 9 லட்சம் டன் உபரி உணவுப் பொருள்களின் உற்பத்திக்குப் பதிலாக, பரப்பில் சுருங்கிவிட்ட தற்போதைய சென்னை மாநிலத்தின் உற்பத்தியே 31·63 லட்சம் டன்னிலிருந்து 45·36 லட்சம் டன்னுக்கு உயர்ந்தது.

[விவசாயத் துறையில், தமிழ்நாட்டில், கடந்த 15 ஆண்டுகளில் நடைபெற்று வந்துள்ள வளர்ச்சி வேலைகள் பற்றியும், அடைந்துள்ள சாதனைகள் பற்றியும், விவசாயத்துறைச் செயலாளர், வானொலி மூலம் உரை நிகழ்த்துகையில் தெளிவாகவும், புள்ளிவிவர ஆதாரங்களுடனும் கூறியுள்ளார். விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில், எதிர்பாராத சில இடையூறுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இயற்கையை நம்பி வாழும் தொழில் விவசாயம். நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, விவசாயத் துறையில் சரியான முயற்சிகள் தீவிரமாகக் கைக்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக, இத்துறையில் கிராம மக்களிடையேயும், பஞ்சாயத்து நிறுவனங்களிடையேயும் நல்ல விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. பாடுபட்டால் நிச்சயம் பலன் உண்டு என்ற நம்பிக்கையுடன், உணவு உற்பத்தியை, தலையாயப் பிரச்னையாகக் கருதி ஆர்வத்துடன் பணியாற்றினால், இன்றுள்ள சிறு கஷ்டங்கள் தானே பறந்தோடிவிடும்—ஆசிரியர்.]

### இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்—புதிய கருத்து

நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1956–57-ல் தொடங்கியது. இத்திட்டத்தில், விவசாய உற்பத்திப் பெருக்கக் கோட்பாடுகளில் ஒரு புதிய கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது, திட்டத்தின் நோக்கம், உற்பத்தித் திறனை (Production Potential) குறிப்பிட்ட அளவுகோல்களுக்குத் தகுந்தாற்போல் பெருக்குவதாக அமைய வேண்டும். நம் கட்டுப்பாட்டுக்கு அடங்காத பருவ நிலைகள், பூச்சி நோய்களால் ஏற்படும் தொல்லைகள், உற்பத்திச் சாதனங்களை உள் நாட்டிலிருந்தும் அயல் நாட்டிலிருந்தும் காலா காலத்தில் போதிய அளவில் பெற்றுச் சரியான முறையில் விவசாயிகளுக்கு வழங்குவதில் ஏற்படும் எதிர்பாராத இடைஞ்சல்கள் ஆகியவற்றினால் உற்பத்திச் சாதனை (actual production) பாதிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே, திட்டமிடப்பட்ட உற்பத்தித் திறனுக்கும் உண்மையில் அடையக்கூடிய உற்பத்திச் சாதனைக்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். இந்த உண்மையை நன்றாக ஆய்ந்தறிந்த நமது மாநில உணவு உற்பத்திக் குழு, 1959-ம் வருடத்திய அறிக்கையில், பருவ நிலை நன்றாக அமைந்த ஒரு வருடத்தின் உற்பத்திக்கும், பருவ நிலை தவறிவிட்ட ஓர் ஆண்டின் உற்பத்திக்கும், சுமார் 10 லட்சம் டன்கள் வேறுபாடு இருக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

இரண்டாவது திட்டத்தின் குறிக்கோள் 12·79 லட்சம் டன் கூடுதல் உணவு உற்பத்தித் திறன் என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அடைந்த சாதனையோ, 8·85

லட்சம் டன்கள்தான். இவ்வாறு குண்டு விழுந்ததற்கு முக்கிய காரணம், திட்டமிடப்பட்ட அளவிற்கு ரசாயன உரங்கள் கிடைக்காமல் போய்விட்டதுதான்.

### மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம்—பாதகமான நிலைமை

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் 1961–62-ல் ஆரம்பமாயிற்று. இத் திட்டத்தின் குறிக்கோள் உணவுப் பொருள்கள் உற்பத்தித் திறன் 53·14 லட்சம் டன்னிலிருந்து 69·64 லட்சம் டன்ஞக உயர்த்தவேண்டுமென்பது. ஆனல் திட்டத்தின் இறுதி ஆண்டாகிய 1965–66-ல் பருவ நிலை மிகவும் மோசமாகப்போய்விட்டது. இதைத் தவிர, ரசாயன உர விநியோகத்திலும் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டது. இக்காரணங்களால், மூன்ருவது திட்டத்தில் நாம் அடைந்த கூடுதல் உற்பத்தித் திறனின் அளவு 12·80 லட்சம் மட்டும்தானென்றும், கடைசி வருடத்தில் கிட்டிய மொத்த உற்பத்திச் சாதனை 52·60 லட்சம் டன்கள் தானென்றும் இப்போது முடிவாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது, இரண்டாவது திட்டத்தின் முடிவில் அடைந்த மொத்த உற்பத்தியை விட, 54,000 டன் குறைவு என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

### ஒவ்வொரு நபருக்கும் 18 அவுன்ஸ் உணவு தானியம்

நாம் இப்போது நான்காவது திட்டத்தின் முதலாண்டின் மத்தியில் இருக்கிரேம். நான்காவது திட்டத்தின் இலக்குகளும் முதலீடுகளும் இதர விவரங்களும், இன்னும் தீர்மான மாக முடிவு செய்யப்படவில்லை. எனினும், இத் திட்டத்தின் முடிவில் உற்பத்தித் திறனை 65·94 லட்சம் டன்னிலிருந்து 80 லட்சம் டன்னுக்கு உயர்த்தவேண்டுமென்பது குறிக்கோள். 1970–71-ல் நமது உணவு உற்பத்தி 80 லட்சம் டன் அளவை எட்டிவிட்டால், அப்போதிருக்கக்கூடிய ஜனத்தொகையில் வயதுவந்த ஒவ்வொரு நபருக்கும் தினசரி 18 அவுன்ஸ் உணவு தானியங்களை வழங்க முடியும். தவிரவும், விதை, ஓரளவுக்கு இதர மாநிலங்களுக்கு ஏற்றுமதி, பருவநிலை மாறுபாடுகளால் ஏற்படக்கூடிய உற்பத்தி நஷ்டத்திற்கு ஈடு, ஆகியவற்றுக்காக சுமார் 10 லட்சம் டன்களை ஒதுக்கியும் வைப்பது சாத்தியமாகும்.

### பதினைந்தாண்டுக்கால சாதனைகள்

இனி, கடந்த பதினைந்து ஆண்டுகளில் வேளாண்மைத் துறையில் நம் மாநிலம் நிகழ்த்தியிருக்கும் சில முக்கிய சாதனைகளை வேறு சில கோணங்களிலிருந்து காண்போம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் சாகுபடியான பரப்பு 169·67 லட்சம் ஏக்கர். இதில் பாசன வசதி பெற்றது 73·07 லட்சம் ஏக்கர். இரண்டாவது திட்ட முடிவில், 6·86 லட்சம் ஏக்கர் புதிதாக பாசன வசதி பெற்றது. மூன்ருவது திட்ட காலத்தில், சிறிய பாசன திட்டங்களின் உதவியால் மட்டும் 4·12 லட்சம் ஏக்கருக்கு உறுதியான பாசன வசதியும், 3·50 லட்சம் ஏக்கருக்குப் புதிதாகப் பாசன வசதியும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தார்கள், இனும்தார்கள் ஆதிக்கத்தில் வெகுகாலமாக மராமத்து செய்யப்படாமல் சீரழிந்து கிடந்த ஏரிகளும் வரவுகால்களும் பெருஞ் செலவில் செப்பனிடப்பட்டு இப்போது நன்னிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. பூமிக்கடியில் இருக்கும் ஊற்றுநீரை வெளிக்கொணர்ந்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்காக, திறந்த கிணறுகள் கடன் மானயத் திட்டம்—வடிமூனைக் குழாய்க் கிணறுகள் கடன் திட்டம், ஆழமான குழாய்க் கிணறுகள் கடன் திட்டம்—ஆகியவை அமுலாக்கப்பட்டு வருகின்றன. தண்ணீர் இறைப்பதற்கு எண்ணெய் எஞ்சின்கள், மின்சார மோட்டார் பம்புசெட்டுகள் வாங்குவதற்காகவும் விவசாயிகளுக்கு பெருந்தொகை கடஞக வழங்கப்பட்டு வருகின்றது. இன்று இம் மாநிலத்தில் வேலைசெய்யும் மின்சார பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 2·65 லட்சத்திற்கும் மேலாகும்.

நோய்களை எதிர்த்து நின்று நல்ல விளைச்சலைத் தரக்கூடிய புதிய ரக விதைகளை உற்பத்தி செய்வதிலும் நாம் நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிரேம். இவற்றில் புதிய நெல் வித்துக்கான கோ. 25, கோ. 29, ஏடிடி. 27, குறிப்பிடத்தக்கவை. ஏடிடி. 27 மட்டும் குறுவை விளைச்சலை சுமார் 2,000 ராத்தலிலிருந்து 4,000 ராத்தலாக உயர்த்தவல்லது. ஷி. ஹெச். எஸ். 1 என்ற கலப்பின சோள விதையும், ஹெச். பி. 1 என்ற கலப்பின கம்பு

[10-ம் பக்கம் பார்க்க]

---

### புதிய ரக நெல் வகைகள் அதிக மாசூலைத் தந்துள்ளன :

## எஸ். வி. நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி

அதிக மாசூல் தரும் நெல் ரகங்களைச் சேர்ந்த டெய்சுங் 65, டெய்னுன் 3 ஆகியவை, பொதுவாக தென் இந்திய நிலைகளுக்கு ஒத்து வருவதில்லையென்றும், அதிக மாசூல் அளிப்பதில்லையென்றும் ஒரு கருத்து நிலவி வருகிறது. இக் கருத்து தவருன அடிப்படையில் எழுந்தது என்பதை நிரூபிக்கும் வகையில், அண்மையில் இந்த புதிய ரக நெல் வகைகள் எஸ். வி. நகரத்தில் பிரமாதமான பலனைத் தந்துள்ளன. எஸ். வி. நகரம் கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத்தார், இந்த நெல் ரகங்களை விதைத்து சாகுபடி செய்து அதிக மாசூல் கண்டுள்ளனர். டெய்சுங் நேடிவ் I–ரகம் ஓர் ஏக்கருக்கு அதிக பட்சமாக 3,402 கிலோ கிராமும், டெய்சுங் 65 ஓர் ஏக்கருக்கு அதிக பட்சமாக 3,100 கிலோ கிராமும் டெய்னுன் 3 , இதுவரை அறுவடைசெய்ததில் ஒரு சென்டுக்கு 36 அல்லது 37 கிலோ கிராமும் பயன் கண்டுள்ளது. இந்த அபாரவிளைச்சலுக்கு எஸ். வி. நகரம் கிராம வளர்ச்சி பயிற்சி நிலையத்தார், தகுந்த முறையில் இரசாயன உரத்தைப் பயன்படுத்தியதும், அக்கறையுடன் அவ்வப்போது வேண்டிய சாகுபடி முறைகளைக் கையாண்டதும், முக்கிய காரணங்களாகும். மேற்கொண்டு, இந்தபுதியநெல்சாகுபடி பற்றியவிவரம் தெரிந்துகொள்ள விரும்புவோர் ''தலைவர், கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம், எஸ். வி. நகரம் வட ஆர்க்காடு மாவட்டம்'' அவரிடமிருந்து வேண்டிய தகவல்களை பெறலாம்.

# நான்காவது திட்டத்தில்



# மீன் வளர்ச்சிக்கு 113 கோடி ரூபாய்

**“மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மீனளத் திற்கென 29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 4-வது திட்டத்தில், இதற்காக 113 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.” இந்தத் தகவலை, மத்திய அர சாங்க உணவு-விவசாய அமைச்சர் திரு. சி. சுப் பிரமணியம் சென்னையில் 29—10—66-ல், மத்திய மீன் தொழில் போர்டின் ஆருவது கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் வெளியிட்டார்.**

மீன் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் பிரதிநிதி களும், மீன் தொழில் நுட்ப நிபுணர்களும், ராஜ்யங் களின் மந்திரிகளும் அரசாங்க பிரதிநிதிகளும் அடங்கிய இந்தக் கூட்டத்தில், திரு சுப்பிரமணியம், மீன் தொழில் அபிவிருத்திக்கென அரசாங்கம் செய்ய உத்தேசித்துள்ள பல்வேறு காரியங்களை எடுத்துச் சொன்னுர்.—“ 4-வது திட்டத்தில் ஒதுக்கப்படும் 113 கோடி ரூபாயில், 52 கோடி ரூபாய் கடல் மீன்பிடிப்புக்காகவும், 17 கோடி ரூபாய் உளநாட்டு நீர்நிலைகளில் மீன் பிடிப்புக்காகவும், பாக்கி 44 கோடி ரூபாய் ஆராய்ச்சி-பயிற்சி முதலிய நடவடிக்கை களுக்காகவும் செலவிடப்படும். உள்நாட்டு உபயோகத் துக்கு மட்டுமின்றி ஏற்றுமதிக்கும் வாய்ப்பாக இயன்ற அளவு அதிகமாய் மீன்பிடிக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம் ” என்றுர் அவர்.

### விரைவாகப் பயன்தரும் திட்டங்கள்

“நமது நோக்கம் நிறைவேறவேண்டுமானால், விரைவாகப் பலன் தரும் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியமாகும். நெடுங்கால இயல்பு கொண்ட திட்டங்களைவிட, இவையே அதிக முக்கிய மானவை ” என்று அவர் சொன்னுர். “ சென்னை, தூத்துக்குடி, மங்களூர் ஆகிய பெரிய துறைமுகங் களுக்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாராகிவிட்டன என்றும், பம்பாய், கொச்சி துறைமுகங்களுக்கான திட்டங்கள் சீக்கிரமே தயாராகிவிடும் ” என்றும் அவர் கூறினுர்.

“ மீன்பிடிப்புத் துறைமுகங்களின் அபிவிருத்தி வேலையை சீக்கிரமே ஆரம்பித்து இரண்டு மூன்று ஆண்டுகளில் முடித்தால்தான், பிடிக்கும் மீன்களை கலங் களில் கொண்டு வந்திறக்குவதற்கும், விநியோகிப்பதற்கும் வசதியாக இருக்கும். மீன்பிடிப்புக் கப்பல்களைக் கட்டு வதில் உள்நாட்டு நிறுவனங்கள் இப்போது அதிக அக்கறை காட்டுவதால், அரசாங்கம் இந்த நிறுவனங் களிடம் தனது ஆர்டர்களைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்துவருகிறது. மீன்வள ஆராய்ச்சிக்கான கப்பல்களைக் கட்டுவதற்கு அவற்றின் மாதிரிகள் சிலவற்றை இங்கே வரவழைத்துக் கொள்ளுவது அவசியமாகும். அவற்றைக் கொண்டு இங்கே ஆராய்ச்சி நடத்தி அம்மாதிரியான கப்பல்களை இங்கேயே வர்த்தக ரீதியில் கட்டுவது சாத்தியமா என்பது முடிவு செய்யப்படும் ” என்றுர் அவர்.

### பயிற்சி வசதிகளின் முழுமையான உபயோகம்

“ மீன் பிடிப்பதற்கு சிறிய யந்திரப் படகுகள் உபயோ கிக்கும் மீனவர்களைப் பயில்விப்பதற்கு சில ராஜ்யங்களில் அதிகப்படியான நிலையங்கள் அமைக்கப்பட்டன. மத்திய மீன் தொழில் பயிற்சிக் கழகமும் புதிய வகுப்புக்கள் ஆரம்பித்து இந்த ஆண்டு தமிழ்நாட்டில் ஒரு புதிய நிலை யத்தையும் நடத்துகிறது. அடுத்த ஆண்டு குஜராத்தில் ஒரு நிலையம் ஆரம்பிக்கப்படும். மீன தொழில் அபி விருத்தி திட்டங்களுக்கு ஏற்றவாறு போதிய தொகையில், பயிற்சி பெற்ற மீனவர்கள் கிடைத்தால்தான், மீன்பிடிப்பு கப்பல்கள் கட்டியவுடனேயே அவற்றை உபயோகத்துக்குக் கொண்டுவர முடியும். இதற்கு மாநில அரசாங்கங்கள் முன்கூட்டியே திட்டமிட்டுக் கொள்வது அவசியம் ” என்றுர் திரு சுப்பிரமணியம். “ இப்போதுள்ள பயிற்சி வசதிகள் பூராவாக உபயோகித்துக்கொள்ளப்படவில்லை. மீனவர்களுக்கு சரியான பயிற்சி கிடைக்கச் செய்வதில் அலட்சியம் இருப்பதாகக்கூட நான் கருதுகிறேன். ராஜ்ய அரசாங்கங்கள் பயிற்சி வசதிகளை இன்னும் சிறப்பாக உபயோகித்துக் கொள்ளவேண்டும் ” என்று அவர் கேட்டுக் கொண்டார்.



G.N. 2

**அரசாங்கத்தின் கடனுதவி**

"அரசாங்க நிறுவனங்களிடமிருந்தோ, ஓரளவு அரசாங்கச் சார்புள்ள நிறுவனங்களிடமிருந்தோ பண உதவியும், கடனுதவியும் பிரதானமாகப் பெறும் தொழில்களில் மீன் தொழிலும் ஒன்ருகும். மீன் பிடிப்புப் படகுகள், சாதனங்கள், மீன் பதம் செய்யும் ஆலைகள், போக்கு வரத்து சாதனங்கள் முதலியவற்றின் விஷயத்தில் அரசாங்கம் மீனவர்களுக்கு பண உதவி அளிக்க நிச்சயித்திருக்கிறது. மேம்பாடு குன்றிய இந்தியா போன்ற ஒரு நாட்டில், மீன் பிடிப்புத் தொழிலுக்கு இந்த வசதிகள் நிச்சயம் கிடைக்கவேண்டும்" என்ருர் அவர்.

திரு சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில், "மீன், மக்களுக்கு துணை உணவாக மட்டுமின்றி, நாட்டிற்கு அன்னியச் செலாவணி சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய ஒரு முக்கிய சாதனமாகவும் விளங்குவதாகும். மீன் வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு பல திசைகளில் உறுதியுடன் முயற்சி மேற்கொண்டாக வேண்டும்" என்றும் "நீடித்த நோக்குடன் இதில் திட்டமிட வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்திற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசிய தமிழ்நாடு அரசாங்க செய்தித்துறை அமைச்சர் திரு பூவராகன் "மீன் தொழிலின் அபிவிருத்திக்கு அதிக கவனம் அளிக்கவேண்டும்" என்று வற்புறுத்தினுர். ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு பெரிய கலங்கள் கிடைக்க வேண்டும் என்று அவர் முக்கியமாக வற்புறுத்தினுர். தமிழ்நாடு மீன்தொழில் இலாகா இந்நாட்டிலேயே மிகப் பழமையானது என்றும் 1907-ம் ஆண்டு இது அமைக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டு, இந்த ராஜ்யத்தில் மீன் தொழில் அபிவிருத்திக்கென நடைபெற்று வந்திருக்கும் பல்வேறு காரியங்களையும் விளக்கினுர். மீன் தொழிலுக்கென 11 ஆராய்ச்சி நிலையங்கள் உட்பட, பல வசதிகளை அரசாங்கம் அமைத்திருக்கிறது. மீனவர்களைப் பயில்விப்பதற்கென ஆறு நிலையங்களும், போதகர்களைப் பயில்விப்பதற்கென ஒரு கழகமும், மீன்பிடிப்பு படகுகள் கட்டுவதற்கென மூன்று கூடங்களும், மராமத்துக்கென ஐந்து நிலையங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மீன்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கென குளிர்ப் பதன நிலையங்களும், மீன்களை டப்பாக்களில் அடைப்பதற்கான ஆலையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ராஜ்யத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் யூனியன்களுமாகச் சுமார் "400 இயங்கி வருகின்றன" என்ருர். மண்டபத்தில் நிறைவேறிவரும் இந்தியா-நார்வே திட்டத்தை அவர் குறிப்பிட்டு, "இந்தத் திட்டதின் விளைவாக, 1950–51-ல் 78,000 டன்னுக இருந்த மீன் உற்பத்தி, 1965-66-ல் 2,52,000 டன்னுக உயர்ந்து விட்டது" என்று தெரிவித்தார். "ஜனத்தொகை விரைவாகப் பெருகி வருவதைக் கருதி, மீன் தொழில் அபிவிருத்தியின் விஷயத்தில் மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும் இன்னும் தீவிர கவனம் செலுத்தவேண்டும்" என்று அவர் கருத்துத் தெரிவித்தார். "ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு ஏற்பாடு செய்வதில், மத்திய அரசாங்கம், ராஜ்யங்களுக்கு உதவியளிக்கவேண்டியது அவசியமென்றும்" திரு பூவராகன் வற்புறுத்தினுர்.

## களக்காடு வட்டாரம் சமாதான அரங்கமாகத் தேர்ந்தெடுக்கப்படலாம்

—o—

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காடு வட்டாரம், "சமாதான அரங்கமாக" (Island of Peace) தேர்ந்தெடுக்கப்படலாம். பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த டாம்னிக் பிரே பாதிரியார் (Rev. Father Domnique Pere) இத்திட்டத்தை உருவாக்கியவர். சமாதானத்திற்காக நோபல் பரிசு பெற்றுள்ள இந்தப் பெரியார், அண்மையில் பாரத அரசாங்க உணவு-விவசாய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களுடன், இத்திட்டம் பற்றி கலந்து பேசினுர்.

அமைதி அரங்கத் திட்டம் என்பது, ஐந்து அல்லது ஆறு வருடங்கள் நீடிக்கும் குறுகிய காலத் திட்டமாகும். இது, பின்தங்கிய கிராமப் பகுதிகளில், மக்கள் தங்களுடைய சுயமுயற்சியின் பேரில், பொருளாதார சமூக அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையான நோக்கத்தைக் கொண்டதாகும்.

1960-ல், பெல்ஜியத்தில் பிரே பாதிரியார் சமாதான பல்கலைக் கழகத்தை (University of Peace) தோற்றுவித்தார். உலகத்தின் பல்வேறு நாட்டு மக்களையும் இப் பல்கலைக் கழகம் கவர்ந்தது. இப்பாதிரியாரினுல், முதல் 'சமாதான அரங்கம்', கிழக்குப் பாகிஸ்தானில் அமைக்கப்பட்டது. இப்பொழுது, இந்தியாவில், திருநெல்வேலி மாவட்டம், களக்காடு வட்டாரம் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

களக்காடு வட்டாரம், 190 கிராமங்களையும் குக்கிராமங்களையும் கொண்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்களின் சார்பில் அமைந்துள்ளது. இந்தக் கிராமங்கள் அனைத்தும் 'கிராமதான'மாகக் கொடுக்கப்பட்டவை.

இவ்வாண்டு அக்டோபர் மாத இறுதியில், பிரே பாதிரியார் தன்னுடைய ஆலோசகர் திரு டிராசூஸாப் (Drochousoff) அவர்களுடன், தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்து, களக்காடு வட்டாரத்தைப் பார்வையிட்டார்.

[சிறப்புக் கட்டுரை அடுத்த இதழில்]

# கூட்டலும் பெருக்கலும்

[ திரு எம். சங்கரநாராயணன், புள்ளி விவர அதிகாரி, கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகம், சென்னை–9.]

உணவுப்பஞ்சம், பற்ருக்குறை, பங்கீடு என்ற பேச்சு இன்று எங்கும் ஒலிக்கின்றது. பற்ருக்குறை என்பது ஓரளவுக்கு உணவைப் பொருத்த அளவில் உண்மை என்ருலும், நிலைமை நம்மை நிலை குலையச் செய்யு மளவுக்குத் தடுமாறிவிடவில்லை. உணவுப் பற்ருக்குறை நாட்டில் தற்போதிருந்த போதிலும், உணவு உற்பத்தி பெருமளவிற்கு உயர்ந்துள்ளது.

உணவு உற்பத்தி உண்மையில் உயர்ந்திருந்தால் பற்ருக்குறை என் ஏற்பட்டது என்ற வினு எழுவது இயற்கையே. உண்மைக்காரணம் திட்டத்திலுள்ள குறை பாடுகள் அல்ல; நமது தேவை உயருவதற்கேற்றவாறு, உணவு உற்பத்தி உயரவில்லை என்பதுதான் இந்தப் பற்ருக்குறைக்குக் காரணம்.

நமது தேவையான உணவின் அளவு ஒரு நிலை யான குறிப்பிட்ட அளவில் இல்லை. மக்களின் எண் ணிக்கை உயர, உயர நமது தேவையின் அளவும் உயருகிறது.

### கூட்டலும் பெருக்கலும்—

உணவு உற்பத்திக்கும் மக்களின் பெருக்கத்திற்கும் ஓர் ஓட்டப்பந்தயமே நடக்கிறதென்று கூறலாம். ஓட்டத் தில் பங்கெடுப்போர் அனைவரும் ஓடுவர். ஆனல், இந்தப்போட்டியில் ஒன்று ஓடுகிறது. மற்றென்று ஊருகின்றது. மக்கள் எண்ணிக்கை முயல் வேகத்தில் முன்னேறும்போது, உணவு உற்பத்தி ஆமை வேகத் தில்தான் அதிகரிக்கின்றது. இந்த ஓட்டத்திற்கும் ஊர் தலுக்குமிடையே பெரியதோர் இடைவெளி. இந்த இடைவெளிதான், பற்ருக்குறையின் உண்மை உருவ மாகும். இந்த இடைவெளி நாளடைவில விரிகின்றது. மக்கள் எண்ணிக்கையின் முயல் வேகத்தையும் ஆமை யின் ஊர்தலையும்தான் பொருளாதார வல்லுனர்கள், பெருக்கலும் கூட்டலும் என்று கூறுகின்றனர். பெருக் கலுக்கும் கூட்டலுக்கும் உள்ள வேறுபாடு தெரிந்த தொன்றே.

இந்த இடைவெளி இப்படியே விரிந்து சென்ருல் முடிவு என்ன என்ற கேள்விதான் எல்லோரையும் எதிர்நோக்கியுள்ளது. இந்த வினுவிற்குரிய விடை எது? நாடோறும் விரிவடையும் இந்த இடைவெளியை அடைத்து இல்லாமல் செய்வதெப்படி என்பதுதான் நாட்டிலுள்ள இன்றைய முதல் பிரச்சினை.

### போர்முனையும் ஏர்முனையும்:—

இவ்வினுவிற்குரிய ஒரே விடை, உணவு உற்பத்தியை மென்மேலும் உயர்த்தவேண்டும் என்பதே.

இந்த ஓட்டப் போட்டியில் உணவு உற்பத்தியின் ஆமை வேகத்தை நடையாக அதிகரித்து, மக்களின் முயலோட்டத்தை நடையாகக் குறைக்கவேண்டும். அதா வது கூட்டலைப் பெருக்கலாக விரித்தும், பெருக்கலைக் கூட்டலாகக் குறைக்கவும் வேண்டும். இவ்விதம் செய் தால்தான், உணவு உற்பத்தி தேவையின் அளவை எட்டிப்பிடித்து, இரண்டும் இணைந்து செல்லும்.

### ஊக்கமும் ஆக்கமும்:—

உணவுற்பத்திப் பெருகவேண்டுமென்ருல், நீர்வளமும், நிலவளமும், ஆள்பலமும் அதிக அளவில் தேவை. நிலவளத்தை, மண்வளம், இடவளம் என்று இரண் டாகப் பிரிக்கலாம். ஆகவே மக்கள் வளம், நீர்வளம், மண்வளம், இடவளம் என்ற நான்கும் விரிந்த அளவில் வேண்டும். மக்கள் வளத்தைப்பற்றி நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஏனென்ருல இன்று நம்மை எதிர் நோக்கியுள்ளதே இந்த அதிக அளவில் உள்ள மக்கள் பிரச்சினைதானே! எஞ்சியுள்ளவற்றில், நீர்வளமும், மண்வளமும், இயற்கை அளித்தபோதிலும், விஞ்ஞா னத்தின் துணைகொண்டு, மனிதன் இவ்விருவளங்களை மேலும் அபிவிருத்தி செய்யலாம். ஆனல், எவ்வளவு தான் மண்வளத்தை உயர்த்தினலும், ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் உயர்த்த முடியாது என்பது தெரிந்த உண்மை. ஆகவே உணவு உற்பத்தியின் அளவு உயர

வேண்டுமென்றால், இடவளத்தைப் பெருக்கவேண்டும். ஆனால் இதிலும் ஓர் இடையூறுள்ளது. ஏனெனில் இயற்கையன்னை இடவளத்தை ஒரு குறிப்பிட்ட அளவில் தான் கொடுத்துள்ளாள். நாம் இடவளத்தை எல்லை யின்றி அனுபவிக்க முடியாத நிலையில் உள்ளோம். இடவளமில்லையேல், இதர வளங்கள் இருந்தும் இல் லாதது மாதிரிதான்.

நிலப்பாகுபாடு :—

இடவளம் உணவு உற்பத்திக்கு மாத்திரமில்லாமல், இதரத் துறைகளுக்கும் தேவையாகின்றது. மக்களின் உணவிற்காகவும், நெல் போன்ற தானியங்கள் பயிர் செய்வதற்கும், கால் நடைகளுக்குப் புல் வளர்ப்பதற்கும், குடியிருக்க வீடுகள், அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவ தற்கும், ஆலைகள் ஏற்படுத்தவும், சாலைகள் போடவும், அணைகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், கிணறுகள் அமைப்பதற்கும் நிலம் தேவைப்படுகின்றது. நிலத்தின் பரப்பை, பயன்படும் முறையின் அடிப்படையில், எட்டுப் பிரிவுகளாகப் பகுக்கலாம். அவையாவன :—

1. வானம் பொழிவதற் கேற்ற, வனங்கள்

2. பயிர் செய்வதற்குத் தகுதியற்ற காடுமுரடான கட்டாந்தரை.

3. மேய்ச்சல் பகுதியும், நிரந்தரப் புல்வெளியும்.

4. இன்சுவைக் கனிகள் ஈயும், பலவகை மரச்சோலை களடர்ந்த இடம்.

5. குளம், குட்டை, ஏரி, கட்டிடம், சாலை இதுபோன்று விவசாயத்திற்கின்றி இதர வகைகளுக்குப் பயன்படும் இடம்.

6. பயிர் செய்வதற்கேற்றதும், ஆனால் இதுவரை யில் பயிர் செய்யப்படாததுமான பாழ்நிலம்.

7. முன்பு ஒரு தடவை பயிர் செய்யப்பட்டு இன்று தரிசாக உள்ள இடம்.

8. தற்போது பயிர்செய்யப்பட்டுள்ள இடம்.

நமது சூழ்நிலை —

ஒரு நாட்டின் மொத்த நிலபரப்பில், முதல் நான்கு பிரிவுகளில் அடங்கிய இடத்தின் பரப்பில், எவ்வித மான மாறுதலும் ஏற்படாமல், முன் இருந்தபடியே இருக்கக் காணலாம். இவைபோக, எஞ்சியுள்ள இடம் தான், பயிர் செய்வதற்குப் பயன்படும். ஆனால் எஞ்சி யுள்ள எல்லா இடமும் விவசாயத்திற்கு மாத்திரம் கிடைப்பதில்லை. ஏனெனில் வீடு கட்டுவதற்கும், விளை யாட்டரங்கிற்கும், ஆலைகள் கட்டுவதற்கும், சாலைகள் போடுவதற்கும், அணைகள் கட்டுவதற்கும், வாய்க்கால் வெட்டுவதற்கும், குளங்கள் வெட்டுவதற்கும், குட்டை கள் தோண்டுவதற்கும், பள்ளிக்கூடங்கள் அமைக்கவும், தொழிற்கூடங்கள் ஏற்படுத்தவும், விடுதிகள் கட்டவும், வீதிகள் போடவும் ஒரு பகுதி இடம் சென்றுவிடுகிறது. தமிழ்நாட்டில் மாத்திரம், திட்டங்கள் ஆரம்பித்த முதல் பதின்மூன்று வருடங்களில் மாத்திரம், சுமார் இரண்டு இலட்சம் ஏக்கருக்கும் அதிகப்படியாகவே மேற்கூறிய வகைகளில் நிலம் பயன்பட்டுள்ளது. 1950–51-ல் சுமார் 31 இலட்சம் ஏக்கரில் அடங்கியுள்ள இப்பகுதியின் பரப்பு, 1963–64-ல் சுமார் 33 இலட்சம் ஏக்கருக்கு உயர்ந்துவிட்டது.

இதனால், விவசாயத்திற்குப் பயன்பட்டதும், பயன் படக்கூடியதுமான இடத்தின் பரப்பு, சுமார் இரண்டு இலட்சம் ஏக்கர் அளவிற்கு குறைந்துவிட்டது. இது தவிர்க்க முடியாததொன்று. ஏனெனில், திட்டங்களின் பலனால், விவசாயமல்லாமல் இதரத் துறைகளும் அபிவிருத்தி யடைகின்றன. இந்த அபிவிருத்தியின் அறிகுறிதான், விவசாயத்திற்கல்லாமல் இதர வகைகளுக்குப் பயன்பட் டுள்ள இடப்பரப்பின் அள வில் இரண்டு இலட்சம் ஏக்கர் உயர்வு.

[நம் நாட்டை இன்று எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகள், இரண்டு. உணவு உற்பத் தியைப் பெருக்குதல்; பெருகி வரும் மக்கள் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துதல். உணவு உற்பத்தியை ஆமை வேகத்துக்கும், மக்கள் தொகைப் பெருக்கத்தை, முயல் வேகத்திற்கும் ஒப்பிட்டுக் கூறும் கட்டுரை ஆசிரியர், “பெருக் கலும்—கூட்டலும் போல் உள்ளன இவை இரண்டும்” என்கிறார். இப்பிரச்னையைத் தீர்க்க முடியாதா? “முடியும்” என்று புள்ளி விவரங்களுடன் முடிவு கூறுகிறது, இக்கட்டுரை.]

இடவளமும் சாதனையும்:

1950-51ல் சுமார் 127·3 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிர் செய்யப்பட்டது. இது 1963-64ல் சுமார் 154·5 இலட்சம் ஏக்கராக உயர்ந் துள்ளது. அதாவது பதின் மூன்று வருடங்களில். சுமார் 27 இலட்சம் ஏக்கர் நிலம் அதிகப்படியாக விவ சாயத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. இந்த உயர்வின் அளவு, சுமார் 21 சதவிகித மாகும். ஆண்டொன்றுக்கு, சுமார் 2 இலட்சம் ஏக்கர் நிலம் புதிதுபுதிதாக ஏர்முனைக்கு இலக்காகியுள்ளது. இந்த நிலை, இனியும் தொடர்ந்து நீடிக்குமா என்றால் முடியாது என்று தான் முன்பு கூறியதிலிருந்து தெரியவரும். மேலும், இனித் தேவைப்படும் இடம் எங்கிருந்து கிடைக்கும்? கட்டாந்தரையாகவும், தரிசாக வும் உள்ள இடங்களிருந்துதானே எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது?

இந்த முயற்சியில், நாம் எவ்வாறு முன்னேறியுள் ளோம் என்றும் காண்போம். 1950-51-ல் சுமார் 75·5 இலட்சம் ஏக்கராக காட்சியளித்த கட்டாந்தரை யும், தரிசும், 1963-64-ல் சுமார் 56 இலட்சம் ஏக்க ராகக் குறைந்துள்ளது. இவ்விதம் குறைக்கப்பட்ட சுமார் 19·5 இலட்சம் ஏக்கர் நிலம். எங்கு சென் றுள்ளது? எங்கும் செல்லவில்லை. இங்குதான் உள்ளது.

உருவத்தோற்றத்தில் வேறுபாடு. அதாவது, தரிசாகக் கிடந்த இடம் தானியக் களஞ்சியங்களாக மாறிவிட்டது. கட்டாந்தரையாயிருந்த இடம் கலைக்கூடங்களாகிவிட்டது. விவசாயத்திற்கும் வேறு வகைகளுக்கும் பயன்பட்டுள்ளது. இனி எஞ்சியுள்ள கட்டாந்தரையும், தரிசும் சேர்ந்து, தற்போது சுமார் 56 இலட்சம் ஏக்கர் தான் உள்ளது. நமது தொழில்த் துறைகளும் இதரத் துறைகளும் முன்னேறும் வேகத்தில், இந்த 56 இலட்சம் ஏக்கர் நிலம் அதிக வருடங்களுக்குத் தாக்குப்பிடிக்காது என்று திண்ணமாகக் கூறலாம்.

**நீர்வளம்:**

விரிந்த அளவில் விவசாயம் செய்ய, இடவளத்திற்கேற்றாற்போல் நீர்வளம் வேண்டும். தமிழ் நாட்டில் நீர்வளத்திற்காகக் கூடுமான வரையில் எல்லாப் பெரிய நீர்த்தேக்கங்களும் கட்டியாகிவிட்டன. இனி பெரிய நீர்த்தேக்கங்களுக்குப் பதிலாக, ஏரி, குளம், குட்டை, கிணறு, வடிமுனைக்கிணறு போன்ற சிறிய திட்டங்களில் தான் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. 1963-64 முடிய உள்ள பதின்மூன்று வருடங்களில், பாசன வசதி பெற்றுள்ள இடத்தின் பரப்பு, 56 இலட்சம் ஏக்கரிலிருந்து 79 இலட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. அதிகப்படியாக உயர்ந்துள்ள 23 இலட்சம் ஏக்கர் நிலத்தின் பெரும்பகுதி, குளம், கிணறுகளால் பாசனம் பெற்றவையாகும்.

**மண்வளம்:**

இடவளத்திற்கும், நீர் வளத்திற்கும் அடுத்தபடியாக அமையவேண்டியது மண்வளம். மண்வளமில்லையேல் நமது முயற்சிகள் யாவும் விழலுக்கிறைத்த நீராகத்தான் முடியும். ஆனால் மண்வளம் குன்றாத நிலை பெற்றிருப்பதில்லை. நாளாக, நாளாக நலிவடையும். வளம் குறைந்த மண்ணிற்கு உகந்த உரமும், தகுந்தத் தழையும், தரமான எருவும் தேவை. தமிழ் நாட்டில் மண்வளம் பொலிவு குன்றாத விளங்கி வருகின்றது என்பது, சராசரி விளைச்சலிலிருந்து விளங்குகின்றது. 1950-51ல் சராசரி 1,319 இராத்தல் நெல் விளைந்த ஓர் ஏக்கர் நிலத்தில் 1963-64ல் சுமார் 1,996 இராத்தல் நெல் விளைந்துள்ளது. இது போன்று, இதரத் தானியங்களான சோளம், கம்பு, இராகி முதலியவற்றின் விளைச்சலும் உயர்ந்துள்ளது.

**மொத்த உற்பத்தி:**

நமது தமிழ் நாட்டில் உணவாகப் பெரும் அளவிற்குப் பயன்படும் நெல், சோளம், கம்பு, இராகி என்ற நான்கு தானியங்களை மாத்திரம் தற்போது கவனிப்போம். 1950–51ல் சுமார் 86 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிர் செய்யப்பட்ட இந்த நான்குத் தானியங்களும் 1963-64ல் சுமார் 108.5 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ளது. இது எதைக் காட்டுகின்றது? இந்நாட்டில், நீர்வளம், இடவளம் எல்லாம் இணைந்து முன்னேறியுள்ளன என்பதை தவிர வேறு என்னவாகயிருக்க முடியும்? இதில், மூன்றில் இரண்டு பங்கு நமது முக்கிய உணவான நெல்லையே சாரும்.

**உற்பத்தி வேகம்:**

1963-64ல் அரிசியின் மொத்த உற்பத்தி, 1950-51ல் உள்ள உற்பத்தியைப் போல இரு மடங்காக உயர்ந்துள்ளது. இது போன்று தான், இதரத் தானியங்களின் உற்பத்தியும் உயர்ந்துள்ளது. உணவு உற்பத்தி இந்த அளவிற்கு உயர்ந்துள்ளபோது, ஏன் இந்தப் பற்றாக்குறை? ஏன் இந்தத் தட்டுப்பாடும் கட்டுப்பாடும் என்ற கவலை ஏற்படுவது இயற்கையே. கட்டுப்பாட்டிற்கும் தட்டுப்பாட்டிற்கும் காரணம், உணவின் மொத்த உற்பத்தியின் அளவு உயர்ந்துள்ளதே ஒழிய, அந்த அளவிற்கு, உயர்வின் வேகம் உயரவில்லை. இன்னும் சிறிது விளக்கமாக நோக்குவோம்.

நமது முதல் திட்டம் செயல்படுவதற்கு முன் உள்ள நிலையோடு ஒப்பிடும்போது, 1963-64ல் உள்ள உணவின் உற்பத்தி உயர்வு, பெரிதாகத் தோன்றுகிறது. ஆனால் இதே விகிதாச்சார உயர்வு, திட்டம் நடைமுறையிலுள்ள ஆண்டோடு ஒத்துநோக்கும்போது உண்டாவதில்லை. அதாவது 1963-64ல் உற்பத்தி, 1962-63 உள்ள அளவோடு ஒப்பிடும்போது, விகிதாச்சார உயர்வுப் பெரிதாகத் தோன்றுவதில்லை. இரண்டாவது திட்டத்தின் இறுதி ஆண்டில் உள்ள உயர்வு, விகிதாச்சாரம், முதல் திட்ட இறுதி ஆண்டில் உள்ள விகிதாச்சார உயர்வை விடக் குறைவாகவேத் தோன்றுகிறது. இதுபோன்று, மூன்றாம் திட்ட இறுதி ஆண்டில் உள்ள விகிதாச்சார உயர்வு, இரண்டாவது திட்ட இறுதி ஆண்டில் உள்ள விகிதாசார உயர்வைவிடக் குறைவாகவேக் காணப்படுகின்றது. மொத்த உணவு உற்பத்தியின் வேகம், ஒரே நிலையில் இல்லை. குறைந்து கொண்டே வருகிறது. நீர்வளமும் நிலவளமும் ஏர்வளமும் இடவளமும் இதர வளங்களும் உயர்ந்தபோது, மொத்த உற்பத்தியின் வேகம் அந்த அளவிற்கு உயரவில்லை. இயற்கையின் இன்னல்களாலும் இதரத் தொல்லைகளாலும் இது ஏற்படுகின்றது.

1950-51ல், சுமார் 28 இலட்சம் டன்னாக இருந்த முன்னம் கூறிய நான்குவகை தானியங்களின் உற்பத்தி, ஐந்து வருடங்களில் (1955-56ல்) 40.5 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. ஆண்டொன்றுக்கு சுமார் 2·5 இலட்சம் டன் அதிகமாக உயர்ந்துள்ளது. உயர்வின் விகிதாச்சாரம் ஆண்டொன்றுக்கு 9 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 1955-56ல் 40·5 இலட்சம் டன்னாக இருந்த தான்ய உற்பத்தி இரண்டாம் திட்ட இறுதி ஆண்டில் (1960-61-ல்) 48·5 இலட்சம் டன்னை எட்டியது. இரண்டாவது திட்ட காலத்தில் ஆண்டொன்றிற்கு 1·6 இலட்சம் டன் என்ற அளவில்தான் உயர்ந்துள்ளது. உயர்வின் விகிதாசாரமும் ஆண்டொன்றுக்கு 4 சதவிகிதத்திற்குக் குறைந்துள்ளது. இரண்டாவது திட்ட இறுதியாண்டில் 48·5 இலட்சம் டன்னை எட்டியுள்ள தான்ய உற்பத்தி, மூன்றாவது திட்ட மூன்றாவது ஆண்டின் இறுதியில், 51.5 இலட்சம் டன்னாகத்தான் உயர முடிந்தது. ஆண்டொன்றுக்கு ஓர் இலட்சம் டன் என்ற அளவில்தான் உயர்ந்துள்ளது. உயர்வின் விகிதாச்சாரமும் பகுதியாகக் குறைந்து இரண்டு சதவிகிதத்திற்கு இறங்கி விட்டது. [12-ம் பக்கம் பார்க்க.]

## விவசாய உற்பத்திப் பெருக்கம் :

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

விதையும் இப்பொழுதுள்ள மகசூலை நான்கிலிருந்து ஆறு மடங்குவரை அதிகமாக்கக் கூடியவை. தாய்வான் நெல் வித்துக்களான டி.எஸ். 1, டி.என். 65, தய்ஞன் 3, என்ற ரகங்களும் நல்ல பயனளிக்கக்கூடியவை.

உற்பத்தியை துரிதகாலத்தில் கணிசமாகப் பெருக்கு வதற்கு ரசாயன உர உபயோகம் ஒரு மிகச்சிறந்த சாதனம். எனவே, நமது திட்டங்களில் ரசாயன உர உபயோகத்தை விரிவாக்குவதற்கு முதலிடம் தரப் பட்டது. நான்காவது திட்டகாலத்தில், ரசாயன உர உபயோகத்தை இன்னும் விரிவாக்கத் திட்டமிடப்பட் டிருக்கிறது.

### மண்வளப் பாதுகாப்பு திட்டம்

மழையினாலும், காற்றினாலும் ஏற்படும் மண் அரிப்பைத் தடுத்து, பூமியிலுள்ள ஈரத்தைப் பாதுகாத்து, மண்வளத்தை உயர்த்துவதே, மண்வளப் பாதுகாப்பு திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், முதல் திட்டத்தில் 17,000 ஏக்கரும், இரண்டாவது திட்டத்தில் 1·30 லட்சம் ஏக்கரும், மூன்றாவது திட்டத்தில் 3·23 லட்சம் ஏக்கரும் சீர்திருத்தம் செய்யப்பட்டு அதன் விளைவாக வேளாண்மை பெருகி இருக்கிறது. உதாரண மாக, கரை போடப்பட்ட பகுதிகளில் சோளம் கண்டு முதல் 37 சதவிகிதமும், கம்பு விளைச்சல் 27 சதவிகிதமும் உயர்ந்திருக்கின்றன. நீலகிரி மாவட்டத்தில், மண்வளப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட நிலங்களில் உருளைக்கிழங்கு உற்பத்தி 22 சதவிகிதத்திற்கும் மேலாகப் பெருகியிருக் கிறது. நான்காவது திட்ட காலத்தில் சுமார் 10 லட்சம் ஏக்கருக்கு மண்வளப் பாதுகாப்பு அளிக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது. இதுதவிர, சுமார் 70 லட்சம் ஏக்கருக்குப் பயிர்ப் பாதுகாப்பு அளிக்கவும் உத்தேசித்திருக்கிறோம்,

வேளாண்மைப் பெருக்கத்திற்கு நவீன யந்திரக் கருவி களும், ஓர் அளவிற்குத் தேவைதான். நமது மாநிலத்தில் 1951–ல் 259 டிராக்டர்களே உபயோகத்திலிருந்தன· 1956-ல் 822 ஆகவும், 1961–ல் 934 ஆகவும் இவ்வெண் ணிக்கை உயர்ந்தது. இவ்வருட ஆரம்பத்தில், இம் மாநிலத்தில், மொத்தம் 2,100 டிராக்டர்களுக்கு மேல் இயங்கி வந்தன.

டிராக்டர்கள், சமன்செய்யும் யந்திரங்கள் (புல்டோ சர்கள்) ஆகியவற்றின் உதவியால், இரண்டாவது திட்ட காலத்தில் 74,000 ஏக்கர் நடைமுறைத் தரிசு நிலங் களையும் 36,000 ஏக்கர் இதுவரைசாகுபடி செய்யப்படாத தரிசு நிலங்களையும் சீர்திருத்தி, வேளாண்மைக்குக் கொண்டுவந்திருக்கிறோம். மூன்றாவது திட்டத்தின் சாதனை, 132 ஆயிரம் ஏக்கர் நடைமுறை தரிசு நிலங்களும் 118 ஆயிரம் ஏக்கர் நிரந்தர தரிசுகளு மாகும்.

சிறந்த வேளாண்மைக்கு போதிய கடன்வசதியை காலாகாலத்தில் விவசாயிகளுக்கு அளிப்பது மிக மிக அவசியமென்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக் கிறது. கூட்டுறவுக் கடன்களும். தக்காவிக் கடன்களும் சென்ற மூன்று திட்டங்களில் மிகவும் பெருகியிருக் கின்றன. அரசாங்கமும், கூட்டுறவு நிறுவனங்களும் சேர்ந்து இப்பொழுது விவசாயிகளுக்கு அளிக்கும் மொத்தக் கடன் தொகையின் மதிப்பு சுமார் 50 கோடிக்கு உயர்ந்திருக்கிறது. நான்காவது திட்டத்தில் இத்தொகையை 80 கோடி ரூபாயாக உயர்த்த திட்டமிட் டிருக்கிறோம்.

### தீவிர சாகுபடித் திட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் சென்ற ஐந்து ஆண்டுகளாக அமுலாக்கப்பட்டுவரும் தீவிர சாகுபடித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் ஒவ்வொரு விவசாயிக்கும் தனிப்பட்ட பண்ணைத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. அவருடைய தேவைகள், வசதிகள், வாய்ப்புகள் யாவும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை அடைவ தற்கு வழிவகைகள் செய்யப்படுகின்றன, வேளாண்மை, கூட்டுறவு, சமுதாய நலத் துறை ஆகிய இலாக்காக்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடி நன்முறையில் பணியாற்றி உற்பத்தியை 20 சதவிகிதத்திற்கு மேலாகப் பெருக்கி யிருக்கின்றனர். இதே கொள்கையை அனுசரித்து செங்கற்பட்டு, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் தீவிர சாகுபடி வட்டார திட்டத்தை 1965-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து அமுலாக்கி வருகிறோம். குறிப்பிட்ட பிரதேசங்களில் வேர்க்கடலை, பருத்தி, தென்னை, கரும்பு, வாழை ஆகிய பயிர்களுக்கும் தீவிர சாகுபடித் திட்டம் மத்திய அரசாங் கத்தின் உதவி நிதியோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் மொத்தத்தில் திருப்தி அளிக்கக்கூடியதாகவே இருக்கிறது.

தமிழகத்தில் சென்ற 15 ஆண்டுகளில் திட்டமிட்டு பணியாற்றியதன் பலனாக, நமது வேளாண்மை நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது. நடைமுறையில் திட்டங் களைச் செயலாக்குவதில் அவ்வப்பொழுது சில குறைபாடு களும் தவறுதல்களும் நேர்ந்திருக்கலாம். இதுவரை பெற்ற அனுபவத்தைக் கொண்டு, தமிழக அரசாங்கமும் விவசாயப் பெருங்குடி மக்களும் இன்னும் சீரிய முறையில் வருங்காலத்தில் வேளாண்மையைப் பெருக்க முற்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

[வானொலிப் பேச்சு—10-10-1966]

# மணல் பரப்பு

**கடற்கரையை அடுத்துள்ள மணல் பிரதேசம். இங்கும் அங்குமாக பனைகளும், முள் அடர்ந்த உடை மரங்களும் தவிர, வேறெதையும் காண முடியவில்லை. பாடுபட்டுப் பயிர் செய்ய முனைந்தாலும், பாய்ச்சும் நீரெல்லாம், பார்த்துக்கொண்டிருக்கும்போதே மணலுக்குள்ளே போய்விடுகிறது. இத்தகைய நிலம் இருந்து என்ன செய்ய?**

முயற்சி திருவினையாகியது.

திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, உடன்குடி வட்டாரத்தைச் சேர்ந்த சில முன்னேற்ற விவசாயிகள், ஒன்றும் விளையாத மணல் பிரதேசத்தில் நெல் விளையச் செய்யும் மகத்தான வித்தையை, இதோ நம் கண் முன்னே செய்து காட்டியுள்ளனர்!

# நெல் விளையும் வயலாகுமா?

முன்னோர்களின் காலந்தொட்டே, புல் பூண்டு கூட முளைக்காத வறண்ட மணல் வெளி, தீவிர விவசாயிகள் முனைந்து நின்று முயற்சி செய்தபோது, இன்று முப்போகம் விளையும் வயல் வெளியாகியுள்ளது. உணவு பெருக்கத்திற்கான திட்டங்களுக்கு முதலிடம் தரப்படும் இந்நாளில், இம்முயற்சி போற்றுவதற்குரியதாக இருப்பதோடு, பயன் தரும் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது.

மணல் பரப்பிலே—எப்படித்தான் நெல் விளைவிக்க முடிகிறது?

மேல் மட்டத்திலிருந்து சுமார் $1\frac{1}{2}$ அடி ஆழத்திற்கு மணலைத் தோண்டியெடுத்துவிட்டு, சமதளப் படுத்திக்கொண்டு, அதில் 2 அங்குலக் கனத்துக்கு, கூழைக் கற்களையும், சுண்ணும்பையும் கலந்து கான்க்ரீட் தளம் போட்டு, சுற்றிலும் $1\frac{1}{2}$ அடி உயரம் $\frac{1}{2}$ அடி அகலத்துக்கு வரப்புச் சுவர் கட்டியிருக்கிறார்கள். இப்போது இந்த நிலமானது, ஒரு தொட்டி போல்ஆகிறது. இதில்குளத்து வண்டல் உரமான மண் கொண்டுவந்து, சுமார் ஓர் அடி உயரத்திற்கு நிரப்பி, சமன் செய்து, அதில் அளவாக உரம் போட்டு, உழுது பயிரிடுகிறார்கள். இதில் பாய்ச்சப்படும் தண்ணீர் மணலால் உறிஞ்சப்படாமலும், பக்கங்களில் கசிந்து வீணாகாமலும் தடுக்கப்படுகிறது. இந்த மணல் பிரதேசத்தில் கிணறுகள் நிறைய உள்ளன. சுமார் பத்து முதல் பதினைந்து அடி தோண்டினால் போதும், வற்றாத கிணறு ஒன்று உண்டாகிவிடுகிறது. கிணற்றுத் தண்ணீரை இறைத்து வருஷம் முழுதும் பயிர் செய்யலாம்.

இவ்விதம் அமைக்கப்படும் கான்க்ரீட் தொட்டி வயல்களில், வருடத்திற்கு மூன்று போகம் நெல் பயிரிடுகிறார்கள். சிலர் இரண்டு போகம் நெல்லும், இடைக்காலத்தில், காய்கறியும் பயிரிடுகிறார்கள்.

இந்த கான்க்ரீட் தொட்டிகள் அமைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5,000 வரையிலும் செலவாகிறது. இந்த முறையில் நெல் பயிரிடுவது மிகுந்த லாபகரமாகவும் இருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 590 நிகர லாபம் கிடைப்பதாக, அனுபவத்தில் தெரிகிறது. ஒரு வருடத்தில் மூன்று போக நெல் விளைச்சலில் ரூ. 1,770 கிடைக்கிறது. தொட்டியமைக்கச் செலவழிக்கப்பட்ட தொகையை மூன்று ஆண்டுகளில் எடுத்து விடலாமல்லவா?

இப்புதிய—பயனுள்ள முறை திருச்செந்தூர் தாலுகா முழுவதிலும் பரவினால், சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதுடன், இதர தாலுகாக்களுக்கும் நெல் அனுப்பி உதவ முடியுமெனக் கூறப்படுகிறது. மணற்பாங்கான நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள், இம்மாதிரியான கான்க்ரீட் தொட்டிகள் அமைத்துக் கொள்வதற்குத் தேவையான முதலீட்டுத் தொகைகளை, அரசாங்கத்திலிருந்து கடனாகக் கொடுத்துதவ ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. திருச்செந்தூர் தாலுகா விவசாயப் பெருமக்களின் அயராத முயற்சியின் பயனாகக் கண்டெடுக்கப்பட்ட இப் புதிய முறை, மற்ற மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படுமானால், 'இல்லை' என்ற சொல்லே இல்லையாகிவிடும்!

**கூட்டலும், பெருக்கலும் :**

[9-ம் பக்கத் தொடர்ச்சி]


உணவு உற்பத்தியின் உயர்வின் வேகம், ஆண்டுதோறும் குறைந்து கொண்டுதான் வருகின்றது. இதைத்தான் ஆமை வேகம் என்பது.

ஆனால், நமது தேவையான உணவின் அளவு பெருகிக்கொண்டே போகிறது. இந்த தேவை அளவு மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்துள்ளது. மக்களின் எண்ணிக்கை ஒரு நிலையான நிலையில் இல்லை, அது முயல் வேகத்தில் ஓடுகிறது.

இந்த நிலை இப்படியே நீடித்தால், சொல்லொணாத் தொல்லைகள்தான் வரும். ஆகவே தான், ஓடிச்செல்லும் மக்களின் எண்ணிக்கை வேகத்தை நடையாக மாற்றி, ஊர்ந்து செல்லும் உணவு உற்பத்தியின் வேகத்தை ஓட்டமாக மாற்ற வேண்டும்.

விரிந்த அளவில் பயிர் செய்யப் போதுமான இடமில்லாத காரணத்தால், இருக்குமிடத்தில் தீவிரமாகப் பயிர் செய்ய வேண்டும். இது "அகல உழுவதைவிட ஆழ உழு" என்பதற்கொப்பாகும். இதனால்தான், தமிழ் நாட்டின் தானியக் களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்றாவது திட்டத்தில் முதல் வருடத்திலேயே தீவிர விவசாயத் திட்டம் தீவிரமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது மக்கள் எண்ணிக்கையின் வேகத்தை கட்டுப்படுத்துவதே, குடும்பக்கட்டுப்பாடு. தீவிர விவசாயத் திட்டமும், குடும்பக் கட்டுப்பாடும் கூடிச் செயல் பட்டால், தட்டுப்பாடும், கட்டுப் பாடும், நாட்டில் இருக்காது. நாட்டின் நலனிலும், நம் பின் சந்ததிகளின் நலனில் நாட்டமுள்ளோர் அனைவரும் செய்ய வேண்டிய முதற் கடமை இதுவேயாகும்.

—x—



திருநெல்வேலி மாவட்டம், உடன்குடி வட்டாரம், விஜயநாராயண கிராமம், சிவந்திக்கண் நாடார் தேரி மணலில், கான்க்ரீட் தளம்போட்டு நெல் விளைவிக்கும் பகுதியை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் பார்வையிடுகிறார்கள்.

# எல்லாம் ஏதனால்?

கல்லூர் பஞ்சாயத்து யூனியன், ஆந்திராவிலுள்ள கம்மான் மாவட்டத்திலிருக்கிறது. இந்த யூனியனில் 48 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. யூனியனின் மொத்த மக்கள் தொகை 1,08,801. சாகுபடியில் உள்ள மொத்த நிலம் 1,34,116 ஏக்கர்கள்.

## வேளாண்மை

இவ்வளர்ச்சி வட்டாரம் துவக்கப்பட்டதிலிருந்து, விவசாய அலுவலர்கள், விவசாயத்துறையில் மிகுந்த ஆர்வம் காட்டி, மக்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஊட்டி வருகிறார்கள். இந்த பஞ்சாயத்து யூனியன் 6,557 மணு பொறுக்கு விதைகள், 1,15,669 மணு உரங்கள், இரும்பு கலப்பை, தெளிப்பான்களில் 367, 9,474 பவுண்டு கிருமி நாசினிகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. கிராம சேவக்குகளிடம் ஒரு டிராக்டரும், 60 தெளிப்பான்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 812 குடும்பங்கள் பயன் பெறும் பொருட்டு ரூ. 1,15,000 கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகள் கிணறுகள் வெட்டிக்கொள்வதற்கென ரூ. 1,93,500 கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனால் 141 ரயத்துக்கள் பயனடைந்துள்ளனர். 317 பாசன குளங்களை பஞ்சாயத்து யூனியன் பராமரித்து வருகிறது. 78 ரயத்துக்களுக்கு தங்களின் நிலங்களை சீரமைத்துக் கொள்வதற்காக ரூ. 1,70,600 வழங்கப்பட்டுள்ளது.

## கல்வி

ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பரப்புவதில் பஞ்சாயத்து யூனியன முக்கிய பங்கு வகிக்கிறது. இங்குள்ள 131 ஆரம்பப்பள்ளிகளில் 7,706 மாணவர்கள் கல்வியறிவு பெற்று வருகின்றனர். கட்டாயக் கல்வி முறை இங்கு தீவிரமாக அமுலாக்கப்பட்டு வருகிறது. 87 பள்ளிகளில் 4,210 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. 18 இடைநிலை பள்ளிகளும் 11 உயர்நிலைப் பள்ளிகளும் இந்தப் பஞ்சாயத்து யூனியனில் இருக்கின்றன. 37 பள்ளிக்கூடக் கட்டடங்களை யூனியன் கட்டி முடித்திருப்பதுடன், 32 பள்ளிக்கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## கூட்டுறவு

யூனியன் முழுவதும் கூட்டுறவின் கீழ்க்கொண்டு வரப்பட்டுள்ளன. தற்போது இங்கு 71 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கமும், 9 தானியப் பாங்குகளும் இருக்கின்றன. 6,671 குடும்பங்கள், அதாவது 1570 கிராமக் குடும்பங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளன.

## மகளிர் நலம்

மகளிர் நலம் புறக்கணிக்கப்பட்டால் எவ்வகையிலும் முன்னேறவே முடியாது என்பதை கல்லூர் பஞ்சாயத்து யூனியன் நன்றாக உணர்ந்துள்ளது. தங்களுடைய குடும்ப வருவாயை பெண்கள் உயர்த்திக் கொள்வதற்கு, யூனியன் எல்லா வகையிலும் உதவி செய்கிறது. யூனியன் பிரதேசத்தில் 46 மஹிள மண்டல்கள் (மாதர் சங்கங்கள்) இயங்கி வருகின்றன. இவற்றில் 764 உறுப்பினர்களிருக்கின்றனர். 16 தையல் இயந்திரங்கள், மாதர் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. தையல் பணியில் பயிற்சியளிப்பதற்காக ஆசிரியைகளும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அம்பர் சர்க்கா பயிற்சித் திட்டத்தின்கீழ் 10 நிலையங்கள் துவக்கப்பட்டுவிட்டன. இவ்வாறு பயிற்சி பெற்ற பெண்கள் மாதம் 22 முதல் 30 ரூபாய் சம்பாதித்து வருகின்றனர்.

## போக்குவரத்து

யூனியனிலுள்ள கிராமங்களெல்லாம் ஒன்றுக்கொன்று சாலை வசதியின்றி தொடர்பற்று இருந்தன. இக்கிராமங்களெல்லாம் ஒன்றாக இணையும் வகையில் சாலைகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு திட்டத்தின் கீழ் 127 மைல் நீள சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## குடும்பக் கட்டுப்பாடு

வைத்திய வசதியையொட்டி கல்லூரில் ஒரு ஆதார சுகாதார நிலையமும், சென்னூர், லங்கப்பள்ளி, வெம்சூர் ஆகிய இடங்களில் மூன்று துணை நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந் நிலையங்களில் நாளொன்றுக்கு சராசரியாக நூறு நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்கு யூனியன் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. கடந்த இரு ஆண்டுகளில், அறுநூறு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் நடந்துள்ளன. குடிதண்ணீர் வசதிக்காக 195 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

இந்த யூனியனிலுள்ள எல்லா பஞ்சாயத்துத் தலைவர்களின் ஒற்றுமை, உற்சாகத்தாலும், யூனியன் தலைவரான திரு ஒய். ரங்காரெட்டி, துணைத்தலைவர் திரு எம். சீதாராமச்சந்திர ராவ் ஆகிய இருவரின் தளராத உழைப்பினாலுமே, இவ்வளவு காரியங்களையும் கல்லூர் பஞ்சாயத்து யூனியன் சிறப்பாக செய்ய முடிந்தது.

இம் முயற்சி, சேவை யெல்லாம் வீண்போகவில்லை. ஆந்திராவின் தெலுங்கான பிராந்தியத்தில், 1963–64-ம் ஆண்டில், கல்லூர் பஞ்சாயத்து யூனியன் தான் சிறந்த யூனியன் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, மாநில அரசாங்கத்தால் ரூ. 25,000 பரிசளிக்கப்பட்டுள்ளது.

# பரிசு பெறும் ஆர்வம்

## கிராம சேவிகாக்களுக்கு கோழிப் பண்ணை

உத்தரப்பிரதேசத்திலுள்ள ஒன்பது கிராம சேவிகா பயிற்சி நிலையங்களிலும் ஒவ்வொரு கோழிப்பண்ணை நிறுவப் பட்டுள்ளது. இந்நிலையங்களில் பயிற்சி பெற்று வரும் கிராம சேவிகாக்களுக்கு கோழிப்பண்ணை சம்பந்தப்பட்ட எல்லா வற்றிலும் பயிற்சியளிக்கப்படுகிறது, கோழியை அடைகாக்க வைத்தல், கோழிக் குஞ்சுகளை வளர்த்தல், தீனி போடுதல், கோழிமுட்டைகளைப் பாதுகாத்தல் போன்றவை இப்பயிற்சி யில் அடங்குபவன.

இவ்வேலை திட்டத்திற்கென ஒவ்வொரு பயிற்சி நிலையத்திற்கும் ரூ. 1,500 அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்காளத்திலுள்ள 'உத்தமர் மஜீத்காணு' என்ற கிராமம்—நாட்டிலுள்ள ஏனைய கிராமங்களைப் போன்றே—பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகிறது, பஞ்சாயத்து ஆட்சி நம் நாட்டில் துவங்கியதிலிருந்து கிராமங்களின் பழைய வாழ்க்கை முறையெல்லாம் படிப்படியாக மறைந்து புதிய சமுதாயம் உருவாகி வருவது எல்லோரு அறிந்ததே. அதற்கு ஒரு சான்று உத்தர் மஜீத்காணு கிராமம்.

எவ்வகையிலும், எல்லாத் துறைகளிலும் முழு மூச்சுடன் ஈடுபட்டு, கிராமத்தை வளம்பெறச் செய்து, அதற்கு அழகூட்டி "சிறந்த கிராமம்" என்ற மாநிலப் பரிசை அடைந்துவிடவேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு செயலில் இறங்கிவிட்டது, உத்தர் மஜீத்காணு.

### பரிசு பெற உழைப்பு

விஞ்ஞான முறைகளைக் கையாண்டு நெல், சணல் பயிரிடுதல், அறியாமையை அடியோடு ஒழித்துக் கட்டுதல், இணைப்பு சாலைகள் அமைத்தல், சாலைகளை புதுப்பித்தல், கோழிப்பண்ணைகளை அமைத்தல், விருத்தி செய்தல் போன்றவை யெல்லாம், உற்சாகத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழமையனவற்றை ஒழித்துக் கட்டி, வாழ்க்கையை வளம் பெற செய்ய, அவர்கள் எதையும் செய்ய தயாராகி விட்டார்கள்.

உத்தர் மஜீத்காணுவிலுள்ள கிராமத் தொண்டர்படை, எல்லா வளர்ச்சி வேலைகளிலும் ஈடுபட்டு அரும்பணியாற்றி வருகிறது. சமீபத்தில் மூன்று மைல் நீள சாலையை அவர்கள் அமைத்துள்ளனர்.

சமூகவாழ்க்கை, கலாச்சார நிகழ்ச்சி ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குழந்தைகள் தினம், சுதந்திர தினம், குடியரசு தினம் போன்றவை சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

நாட்டிற்கு அவர்கள் ஆற்றவேண்டிய பணியை அவர்கள் நன்கு உணர்ந்துவிட்டார்கள். அதற்காக பொறுப்பேற்கவும் அவர்கள் தயாராகி விட்டார்கள். எந்த திட்டம் அல்லது வேலையைப் பற்றியும், அதன் நன்மைகளைப் பற்றியும் நன்கு விளங்கும்படி அவர்களுக்கு தெளிவாகக் கூறிவிட்டால் போதும். பிறகு காரியம் நடந்து முடிந்தது மாதிரிதான். "முன்னேசெல், பின்னால் திரும்பாதே" என்றசொல், இம்மக்களின் செயலில்தெளிவாகத் தெரிகிறது.

# இப்பழியும் ஒரு பஞ்சாயத்து!

**"பஞ்சாயத்து ராஜ்" என்ற ஆங்கில இதழின் நிருபர் பஞ்சாபிலுள்ள 'பாலாம்பூர்' கிராமத்தில் தங்க நேரிட்ட போது, அந்தப் பஞ்சாயத்துத் தலைவரை பேட்டி காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பஞ்சாயத்தைப் பற்றிய பல விவரங்களை, இக் கட்டுரை விவரிக்கிறது.**

"மன்னிக்க வேண்டும்; நீங்கள் இரவெல்லாம் இங்கேதான் தங்க வேண்டியிருக்கும், உங்கள் ஜீப் நாளைக்காலை 10 மணிக்குத்தான் தயாராகும்" என்று கூறினார் என் ஜீப்பை பழுது பார்த்து வந்த மெக்கானிக்.

"சரி இருக்கட்டும்; ஆனால் நான் எங்கே தங்குவது? இந்தப் பாலாம்பூரில் எனக்கு யாரையுமே தெரியாதே?"

"அதோ பாருங்கள்; ஒரு பெரிய கட்டிடம் தெரிகிறதல்லவா அது ஒரு பிரயாணிகள் தங்கும் பங்களா; அங்கே சென்று தங்குங்கள். காலையில் கிராமத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வாருங்கள்" என்று யோசனை கூறினார் மெக்கானிக்.

அவருக்கு நன்றி கூறிவிட்டு அப் பங்களாவை நோக்கிப் புறப்பட்டேன் நான். வேறென்ன செய்ய முடியும்?

அந்த பங்களா மிகவும் வசதியாக இருந்தது. இரவு பூராவும் அங்கே சுகமாகக் கழித்து விட்டு, மறுநாள் காலை கிராமத்தைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினேன். கிராமத்தைப் பார்த்துக் கொண்டே வருகையில், சில பர்லாங் தூரத்தில் அரண்மனை போன்ற ஒரு கட்டிடம எனக்குத் தெரிந்தது. என்னையறியாமலே அதை நோக்கிப் புறப்பட்டுவிட்டேன் நான்.

"யார் அங்கே வசிக்கிறார்கள்?" ஒரு வழிபோக்கரை நான் கேட்ட கேள்வி இது.

"கிராமப் பஞ்சாயத்துத் தலைவரை உங்களுக்குத் தெரியாதா? – இது வழிப்போக்கரின் எதிர்க்கேள்வி.

உள்ளே சென்று தான் பார்ப்போமே என்ற ஆவலுடன், கதவைத் திறந்து கொண்டு, உள்ளே சென்றேன். அங்கே பஞ்சாயத்துத் தலைவரான திரு குன்ச் பிஹாரிலால் அவர்களைச் சந்தித்து, என்னை நானே அறிமுகம் செய்து கொண்டேன்.

"இப்பஞ்சாயத்திற்கு என் தந்தை தான் தலைவராகயிருந்தார்; அந்தப் பதவி பிறகு எனக்கு வந்து விட்டது. நகரத்திற்கு அருகிலேயே நாங்கள் இருக்கிறோம்" என்று அவரே பேச்சை துவக்கினார்.

பஞ்சாபிலுள்ள கங்க்ரா மாவட்டத்தில் ஒரு பெரிய பணக்காரராக இருப்பவர் திரு குன்ச் பிஹாரிலால். இவருக்கு மிகப்பெரிய தேயிலைத் தோட்டங்களும், சில நெல், எண்ணெய் ஆலைகளும் இருக்கின்றன.

அவருடன் பலவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கையில் அவர் கூறினார், "பஞ்சாயத்தா? நான் தான் அந்தப் பஞ்சாயத்து" என்று. அவர் ஏன் இப்படிக் கூறினார் என்று எனக்குப் பிறகு தான் தெரிந்தது.

பஞ்சாயத்து குடிநீர்த்திட்டத்திற்காக, பஞ்சாயத்தின் பங்குத்தொகையான ரூ. 5,000-ஐயும் இவரே தனிப்பட்ட முறையில் கொடுத்திருக்கிறார். அது போலவே இரண்டு மைல் வாகனச்சாலையை அமைப்பதற்கும், பஞ்சாயத்து பங்கை அவரே அளித்திருக்கிறார்.

"பஞ்சாயத்துப் பங்குத் தொகையெல்லாம் நீங்களே ஏன் கொடுக்கிறீர்கள்? கிராமவாசிகள் கொடுக்க மாட்டார்களா?" – என்னால் இந்தக் கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"அவர்களெல்லாம் மிகவும் ஏழைகள்; முதியோர்கள் மட்டுமே இங்கே இருக்கிறார்கள்; ஏனைய இளைஞர்கள் எல்லாம் இராணுவத்தில் சேர்ந்து விட்டார்கள்."

"இவர்களின் முக்கிய தொழில்களென்ன?"

"ஆடு வளர்ப்பதே முக்கிய தொழில்....கம்பளி நூல் தயாரிக்கும்



G.N.—4A

தொழிற்சாலை ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்து வருகிறோம்" என்றார் பஞ்சாயத்துத் தலைவர்.

"அதையும் நீங்கள்தான் பஞ்சாயத்திற்காக ஏற்படுத்தப்போகிறீர்களா?"

"அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினார், திரு குன்சன் பிஹாரிலால் "பஞ்சாயத்து முழுவதையும் என் சொந்தச் சொத்தாக மாற்றிவிட்டேன் என்று நினைக்காதீர்கள். முசுக்கட்டை செடிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. சாலைகள் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது; பஞ்சாயத்துக் கட்டிடம், துவக்கப் பள்ளிக் கட்டிடங்கள் இரண்டு, ஆசிரியர்கள் குடியிருப்புக்கள் எல்லாம் கட்டப்பட்டுள்ளன. கிராமத்திற்கு மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. ஒரு மைல் சுற்றளவிலேயே மூன்று உயர்நிலை துவக்கப்பள்ளிகள் இருக்கின்றன. கல்வி ஒரு பிரச்னையே அல்ல; இவை மட்டுமல்ல, நவீன முறைகளைக்கொண்டு, ரசாயன உரங்கள், கிருமி நாசினிகளைப் பயன்படுத்தி விவசாயம் நடந்து வருகிறது."

"என்ன விவசாயம் செய்யப்படுகிறது ?

"முக்கியமாக நெல், பிறகு பார்லி, சோளம், சோயாபீன், கோதுமை போன்றவை"

"உங்களுக்குத் தேயிலைத் தோட்டம் இருக்கிறது; அத்துறையில் நிறைய அனுபவமும் இருக்கிறது; இவர்களும் தேயிலையைப் பயிரிட நீங்கள் ஏன் உதவக்கூடாது?" என்றேன் நான்.

சிறிது யோசித்து பிறகு கூறினார், "பாருங்கள், தேயிலைத் தோட்டம் என்பது சாதாரண விஷயமல்ல; அவை வளர்ந்து பலன் தர ஐந்தாண்டுகள் ஆகும். இங்குள்ள ஏழை மக்களால் எப்படி அத்தனை ஆண்டுகள் பொறுத்திருக்க முடியும்? மேலும் அதற்கு அதிகச்செலவாகும்."

"கூட்டுறவு அடிப்படையில் அதைச் செய்யலாமே?"

"நம்முடைய மக்கள் மிகவும் ஏழைகள்; கூட்டுறவு பற்றி பேசும் போது, எனக்கு நினைவு வருகிறது; இங்கே ஒரு விவசாய சேவைக் கூட்டுறவும் இருக்கிறது" என்று பேச்சின் போக்கை திருப்ப முயன்றார் பஞ்சாயத்துத் தலைவர்.

"மன்னிக்க வேண்டும்......நான் வேறொரு இடத்திற்குச் செல்ல வேண்டியிருப்பதால் விடைபெற்றுக் கொள்கிறேன்" என்றார் அவர்.

இப் பஞ்சாயத்துத் தலைவரின் தந்தையையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. "பஞ்சாயத்தால் அநேக அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டுள்ளன; ஆனால் மக்களின் கலாச்சார, சமூக வாழ்க்கை இன்னும் மாறவில்லை; அவை அப்படியேதான் இருக்கின்றன" என்றார் அவர். "ஆனால் ஒன்று, நமக்கு வேண்டியதை நாமே செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் நாளுக்குநாள் மறைந்து வருவதோடு, எல்லாவற்றையும் அரசாங்கமே செய்யவேண்டும் என்ற எண்ணம் இப்போது எங்கும் நிலவி வருகிறது".

"இந்த மக்களின் இயற்கையான உற்சாகத்தை, அவர்களின் சுய முயற்சியை கெடுத்தது யார்" என்ற கேள்வி எனக்கு அப்போது அங்கே பிறந்தது.

---

"ஜனநாயகம், நாகரீக மக்களுக்கானது; நாகரீகமற்றவர்களுக்கல்ல. அடிப்படையிலேயே மக்கள் நாகரீகமற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கு ஜனநாயகம் பிரயோஜனப்படாது. அவர்களுக்கு ஏகாதிபத்யமோ வேறு ஏதாவது முறையோதான் சரி. நாம் நாகரீகமடைந்தவர்களாக நடிப்பதில்லை. எப்போதுமே நாம் நாகரீமடைந்தவர்களாய் இருப்பதுமில்லை. அவ்வப்போது, தீய சக்தி நம்மைக் கவ்விக்கொள்கிறது. குறிப்பாக, தேர்தல் சமயத்தில் இது எங்கும் நிலவுவதாய்த் தோன்றுகிறது. ஆதலால், நாகரீக சமூகத்தில் பேசக்கூடாதவற்றை மக்கள் பேசுகிறார்கள், செய்யத்தகாதவற்றைச் செய்கிறார்கள். ஆனால் தேர்தல் முடிந்தவுடன், இதுவும் பறந்தோடிவிடுகிறது."

* * *

"முடிவுகளைத் திருத்திக்கொள்ளும் பெருந்தன்மை எதையும் ஆய்ந்தறியும் திறன், உளவொழுக்கம் —இவையனைத்தும் தேவைப்படுகின்றன. விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும் அதன் பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் கூட, அவை தேவைப்படுகின்றன. விஞ்ஞானக் கண்ணோட்டமும், உணவும் வாழ்க்கை முறையோடு இணைந்து விடவேண்டும்"

—அமரர் நேருஜி

## சிறப்புக் கட்டுரை:

நரிக்குறவர்கள் :

பரம்பரையாக நாடோடிகளாக நாடெங்கிலும் சுற்றி வரும் மலைவாழ் மக்கள். பிழைப்புக்காக, வளர்ச்சியுறும் சமுதாயத்தினிடையே பழகினாலும், அவர்கள் தங்களது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள எண்ணுவதே இல்லை.


'நிலையான இடத்தில், மனைவி மக்களோடு, குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டும்' என்ற எண்ணமே அவர்களுக்கு ஏற்படாதா ?

நாடோடிகளாகத் திரிவதிலேயே சுவை கண்டு, அதிலேயே மூழ்கிப்போனவர்களுக்கு, வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையை, நாமே தான் உண்டாக்க வேண்டும்.

சற்று சிரமமான காரியம்தான். ஆனால் செங்கல்பட்டு மாவட்டத்தில், உத்திரமேரூர் வட்டாரத்தில் உள்ள வயலூர் நரிக்குறவர் காலனியைப் பார்த்த பிறகு, 'முனைந்தால் முடியாதது ஒன்றுமில்லை' என்ற எண்ணம் தான் தோன்றும். 'கிராமதான'க் கிராமம் என்ற புகழ் பெற்ற 'வயலூர்' கிராமமும், 'மாதிரிக்கிராமம்' என்று பாராட்டுப் பெறும் 'களியாம்பூண்டி'யும் இக்காலனிக்கு அண்மையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"இன்று இங்கே—நாளை எங்கேயோ" என்ற விதத்தில், சுற்றியலைந்து பிழைப்பவர்கள். அவர்களுக்கென நிலையான தங்குமிடமென்று எதுவுமே இருந்ததில்லை. பிச்சை எடுப்பது, காடுகளில் நரிகளையும். காட்டுப்பறவைகளையும் வேட்டையாடுவது, மருந்தாகப் பயன்படும் வேர்களையும், மூலிகைகளையும் சேகரித்து நகர்ப் புறங்களிலே விற்பதன் மூலமாக வாழ்வைக் கழிப்பது—இது நரிக் குறவர்களின் அன்றாட வாழ்க்கை..

# நரிக் குறவர்களின் நல் வாழ்வு



நாகரீகம் முதிர்ந்துவரும் நாளில் இவர்களைக் காணும் போது, 'இவர்களுக்கும் நிலையான, முறையான வாழ்வு அமையாதா?" என்று எண்ணவே தோன்றும்.

இத்தகையதொரு கூட்டம், உழுதுண்டு வாழும் பெருங்குடி மக்களாக வாழத்தொடங்கி விட்டார்கள் என்பது வியப்பிற்குரியதல்லவா?



G.N.—5

## விந்தையான மாற்றம்—சிந்தனைக்கு மருந்து

செங்கல்பட்டு மாவட்டம், உத்திரமேரூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த, வயலூர் கிராமத்தில், சுமார் 40-க்கும் மேற்பட்ட நரிக்குறவர் குடும்பங்கள் 1962-ல் சர்க்காரால், ரூ. 15,000 செலவில் கட்டித்தரப்பட்ட 20 வீடுகளில் 'நிதஞ்சோறு தேடித்தின்று' வாழும் நாடோடிகளாக அல்லாமல், நிரந்தரமாக மற்ற குடிமக்கள் போலவே வாழ்கிறார்கள். அவர்கள் செய்யும் தொழில் விவசாயம். அருகாமையிலேயே, சர்க்கார் புறம்போக்கில், சுமார் 40 ஏக்கர் நிலத்தை விளைநிலமாகச் செப்பனிட்டு, நிலக்கடலை, நெல் சாகுபடி செய்கிறார்கள். சமீபத்தில் வருவாய்த் துறையினர், அவர்களில் 11 நபர்களுக்கு, சாகுபடி செய்யும் நிலங்களின்பேரில் பட்டா வழங்கியுள்ளனர். அவர்களுக்கென குடிநீர்க் கிணறு ஒன்றும் கட்டித் தரப்பட்டுள்ளது.

மரங்களை நட்டு வளர்ப்பதில் அவர்களுக்கு தனி ஈடுபாடு இருக்கிறது. அவர்களின் குடியிருப்பைச் சுற்றிலும் பசுமையைக் காண முடிகிறது. 42 தென்னங்கன்றுகளும், 17 மாங்கன்றுகளும், பப்பாளிக் கன்றுகளும், பலவித பழச் செடிகளும் நிறைந்துள்ளன. பழமரங்கள் இன்னும் இரண்டே ஆண்டுகளில் பலனளித்துவிடும்!

### பள்ளி செல்லும் குழந்தைகள்

அந்தக்காலனியில் பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் 25 பேர் இருக்கின்றனர். மிகுந்த பிரயாசையின் பேரில், அவர்களில் எட்டுக் குழந்தைகள் வயலூர் பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் சேர்க்கப்பட்டு, ஆரம்பக் கல்வி பயிலுகிறார்கள். மற்ற குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவர்களின் தலைவராகக் கருதப்படும் பழனிசிங் என்பவருக்கு, சர்க்காரிலிருந்து இரு உழவு மாடுகளும், விவசாயக் கருவிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

அருகிலுள்ள களியாம்பூண்டி கூட்டுறவு விவசாயப் பேங்கில் நரிக்குறவர்களில் 25 பேர், உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் செலுத்தியுள்ள மொத்த பங்குத்தொகை ரூ. 190. வாங்கியுள்ள கடன் தொகை ரூ. 2,025–ல் திரும்பச் செலுத்திவிட்ட தொகை ரூ. 1,536. வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்துவதில், இவர்களிடம் காணப்படும் அக்கறை குறிப்பிடத்தக்கதாகும்.

தங்களது நிலத்தை சீர்படுத்தும் பொருட்டு கிராமத்திலுள்ள பெரிய விவசாயிகளிடம் கடன் தொகை பெறும் அளவுக்கு, நம்பிக்கையோடு ஒன்றிப் பழகுகிறார்கள்.

### வருங்காலத்தைப் பற்றி நம்பிக்கை

எதிர்காலத்தைப் பற்றி எந்த விதமான சிந்தனையுமின்றி, நாகரீக மற்ற நாடோடிகளாக வாழ்ந்தவர்களாதலால், ஆரம்பத்தில் இவர்களிடையே தங்களுடைய எதிர்கால வாழ்க்கை பற்றி நம்பிக்கை குறைவு தான் இருந்தது. ஆனால், அவர்களுக்கென்று நிலம் ஒதுக்கி, நிலப்பட்டாக்கள் வழங்கியது, அவர்களிடையே ஓர் உறுதியை தோற்றுவித்துள்ளது. இன்று அவர்கள் தங்களது வருங்காலத்தைப்பற்றித் திட்டமிடத் தொடங்கிவிட்டார்கள். தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தைப் பண்படுத்துவதிலும், பயிர் விளைவிப்பதிலும், ஆர்வத்தோடு பாடுபடவும் ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களிடையே புது வாழ்வு மலர்ந்துவிட்டது, நாட்டுக்குப் பயன்படும் பிரஜைகளாக, 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற தமிழ் மறைக்கேற்ப, விவசாயப் பெருங்குடி மக்களாக, இந்த நரிக்குறவர்கள் வாழத் தொடங்கிவிட்டார்கள்.

" பஞ்சாயத்து ஆட்சி முறை " பற்றி

## பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டி —முடிவு விவரம்—

1965–66-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், உயர் செகண்டிரிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்காக கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. எதிர்காலச் சிற்பிகளான இந்த இளைஞர்கள் நாட்டின் முன்னேற்றத்திலும், நல்வாழ்வுத் திட்டங்களிலும் எந்த அளவுக்கு அக்கறை கொண்டுள்ளனர் என்பதைக் கண்டறியவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. "பஞ்சாயத்து ஆட்சிமுறை" பற்றி நடந்த கட்டுரைப் போட்டியில், ஏராளமான மாணவர்களும், மாணவிகளும் கலந்துகொண்டனர். போட்டியில் கலந்துகொண்டோரின் எழுத்தோவியங்களிலிருந்து சுவையான பகுதிகள் "மழலை மொழி" என்ற தலைப்பில் "கிராமநலம்" ஆகஸ்ட் சிறப்பிதழிலும், செப்டம்பர் '66 இதழிலும் வெளிவந்ததை, அனைவரும் அறிவார்கள்.

மாநில அளவில் இக்கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:—

முதல் பரிசு : — பரிசு ரூபாய் 150.

(1) திரு S. இராமமூர்த்தி, பத்தாவது ஸ்டாண்டர்ட், "இ" பிரிவு, நகர்மன்ற உயர்நிலைப் பள்ளி, ஈரோடு, கோயமுத்தூர் மாவட்டம்.

2–வது பரிசு . — ரூ. 100.

திரு S. முத்து, XI ஸ்டாண்டர்ட், "A" பிரிவு, செங்குந்தர் மகாஜன உயர்நிலைப் பள்ளி, குருசாமிப்பாளையம், ராசிபுரம் தாலுக்கா, சேலம் மாவட்டம்.

3–வது பரிசு. — ரூபாய் 50.

திரு முகம்மது அப்துல் காதர், XI ஸ்டாண்டர்ட், "A" பிரிவு, தவசுமுத்து நாடார் உயர்நிலைப் பள்ளி. பொறையாறு அஞ்சல், மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம்.

## பதினைந்தாண்டுகளில்

# தமிழ்நாட்டில் மின்சார வளர்ச்சி

கிராமங்களுக்கு மின்சார வசதி அளிப்பதிலும், பாசனக் கிணறுகளுக்கு விசை ஏற்றம் (Pump set) பொருத்துவதற்கான மின்சாரம் வழங்குவதிலும், தமிழ்நாடு மகத்தான முன்னேற்றம் கண்டு வருகிறது. இத்துறையில் அகில இந்தியாவிலும் தமிழ்நாடு சிறப்பிடம் பெற்றுள்ளது எனலாம்.

கடந்த பதினைந்தாண்டுக் காலத்தில், அதாவது முதல், இரண்டாவது, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்—1951 முதல் 1966 ஆண்டு வரையில்—இத்துறையில் தமிழ்நாட்டில் கண்டுள்ள வளர்ச்சி பிரம்மாண்டமானது. கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குகின்ற வேலையானது, மிகவும் துரிதமான முறையில் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு மாநில மின்சார போர்டு, இத்துறையில் செய்துள்ள பணி அனைவரின் பாராட்டுதலுக்குரியதாகும். மின்சார வசதி பெறாத கிராமமே தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலை வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிட முடியும் என்று கூறலாம்.

கிராம மக்களுக்கு நவீன வசதி ஒன்றையளிப்பது என்பது மட்டும் தான் இதன் நோக்கமல்ல. உற்பத்திப் பெருக்கத்திற்கு உறுதுணையான முக்கியமான திட்டம் இது என்ற முறையிலும், கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் பணியிலும், தமிழ்நாடு மிகுந்த அக்கறை காட்டுகிறது.

இத்துறையில் தமிழ்நாடு சாதித்துள்ளது என்ன என்பதை புள்ளி விவரங்கள் விளக்குகின்றன.—

மூன்றுவது திட்ட முடிவில், மின்சார வசதியைப் பெற்றுள்ள பாசனக் கிணறுகளின் எண்ணிக்கை 2,56,466 ஆகும். 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் தேதியில் இந்த எண்ணிக்கை மேலும் உயர்ந்து, 2,62,931 ஆகப் பெருகியுள்ளது. அதேபோல், மூன்றுவது திட்ட முடிவில் (1965–66 இறுதியில்) மின்சார வசதி பெற்ற நகரங்கள், பெரிய-சிறிய கிராமங்களின் எண்ணிக்கை 22,137. 1966 ஜனவரி 1-ம் தேதி வரை இந்த எண்ணிக்கை 21,206 ஆகும்.

### 15 ஆண்டுகளில் முன்னேற்றம்

முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் [1951—1956] :

| | | 1951—52 | 1952—53 | 1953—54 | 1954—55 | 1955—56 |
|---|---|---|---|---|---|---|
| I | மின்சார வசதி பெற்ற ஊர்கள். | 2,020 | 2,181 | 2,293 | 2,602 | 3,543 |
| II | மின்சார இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள். | 15,904 | 18,481 | 21,733 | 24,654 | 32,440 |

| | | | |
|---|---|---|---|
| முதலாண்டுத் திட்ட முடிவில் : | மின்வசதி பெற்ற ஊர்கள் | 3,543 | .. |
| | மின்சார இணைப்புபெற்ற பாசனக் கிணறுகள் | 32,440 | .. |



G.N.—5A

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலம் [1956—61]:**

| | 1956—57 | 1957—58 | 1958—59 | 1959—60 | 1960—61 |
|---|---|---|---|---|---|
| I மின்சார வசதி பெற்ற ஊர்கள் | 5,257 | 6,637 | 8,096 | 9,299 | 10,760 |
| II மின்சார இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகள் | 45,173 | 62,726 | 79,773 | 97,476 | 1,17,695 |

**இரண்டாவது திட்ட முடிவில்** மின் வசதி பெற்ற ஊர்கள் .. .. .. 10,760
மின்சார இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகள் .. 1,17,695

**மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்காலம் [1961 —66]:**

| | 1961—62 | 1962—63 | 1963—64 | 1964—65 | 1965—66 |
|---|---|---|---|---|---|
| I மின்சார வசதி பெற்ற ஊர்கள் | 12,653 | 15,060 | 16,831 | 19,439 | 22,137 |
| II மின்சார இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகள் | 1,40,601 | 1,65,561 | 1,92,424 | 2,25,192 | 2,56,466 |

**மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில்** மின் வசதி பெற்ற ஊர்கள் .. .. 22,137
மின்சார இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகள் 2,56,466

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன்னுல் 1950—51-ல்

மின்சார வசதி பெற்ற ஊர்கள் 1813
மின்சர இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகள் 14,373

மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் (1951 முதல் 1966 வரை) தமிழ் நாட்டில் மின் வசதி பெற்ற ஊர்களின் எண்ணிக்கை 1,813–லிருந்து 22,137 ஆகவும் மின்சார இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகளின் எண்ணிக்கை 14,373–லிருந்து 2,56,466 ஆகவும் உயர்ந்துள்ளது.

மேலும் 1–8–66–ல் மின்சார இணைப்பு பெற்ற பாசனக் கிணறுகளின் எண்ணிக்கை மேலும் உயர்ந்து, 2,62,931 ஆகிவிட்டது.

விவசாயம், தொழில் துறைகளின் வளர்ச்சிக்கு மின்சாரம் மேன்மேலும் தேவைப்படுவதால், மின்சார உற்பத்தியைப் பெருக்கும் முயற்சி தமிழ்நாட்டில் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அண்மையில் இரண்டு லட்சம் கிலோ வாட் ஆற்றல் உள்ள மேட்டூர் குடை வரை நீர் மின் நிலையம் பூர்த்தியாகி இயங்கத் தொடங்கி விட்டதைச் சிறப்பாகக்குறிப்பிடவேண்டும்.மேலும்,"ஆனைமலைநீர்மின்சாரத் திட்டம், குந்தா திட்ட மூன்றும் நிலை, கோதையாறு திட்டம், பாண்டியாறு-புன்னப்புழா திட்டம், மற்றும் எண்ணூர், தூத்துக்குடி அனல் மின்சார திட்டங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

---

## மரங்களின் பாதுகாப்பு—பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புகள்

''பஞ்சாயத்துக்களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகள் பலவற்றில், பஞ்சாயத்து யூனியன் வசமுள்ள, அல்லது அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மரங்களைப் பாதுகாத்து, நல்லமுறையில் பராமரித்து வருதல், மிக அத்தியாவசியமானது. பஞ்சாயத்துக்களிடம் முழுவதுமாக ஒப்படைக்கப்பட்ட பொது நிலங்களிலும், அவற்றினிடம் பராமரிப்புக்காக ஒப்படைக்கப் பட்டுள்ள நிலங்களிலும், விறகு, தீவனம், உரம் போன்ற ஆதாரங்களைப் பெருக்கும்வகையில், பஞ்சாயத்துக்கள் அதிக அளவில் மரங்களை நட்டு, அவை மூலம் கிராமத்தின் உணவு உற்பத்தியைப் பெருக்க தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இம்மாதிரியான காரியங்களில் ஈடுபடுவதினுல், கிராம மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படுவதுடன், அச் சொத்துக்களெல்லாம் தங்கள் கிராமத்தைச் சார்ந்தவையே என்ற நல்லெண்ணம் உண்டாகி, அதன் காரணமாக அவை, அழிக்கப்படாமல் பாதுகாக்க ஏதுவாகும்; மரங்களின் மூலம் கிடைக்கும் வருவாயைப் பஞ்சாயத்துக் களின் நிதியோடு சேர்த்துக்கொள்வதினுல், பஞ்சாயத்துக்களின் வருமானமும் பெருகும்..''

[கிராம வளர்ச்சி துணை நெறியாளர் (பணித்துறை) திரு எஸ். சுப்பையன் அவர்களின் " மரங்களின் பாதுகாப்பு-பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புகள் " என்ற கட்டுரையிலிருந்து-இச்சிறப்புக் கட்டுரையின் விவரம், அடுத்த இதழில்]


படம் 1:—சென்னையில், 7-10-66 அன்று, பாரத அரசாங்க உணவு-விவசாய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்களுடன், தமிழ்நா ஆந்திரா, மைசூர் மாநிலங்களின் முதலமைச்சர்களும், கேரள மாநிலக் கவர்னரும் உணவுப் பிரச்னை பற்றி விவாதித்தனர்

படம் 2:—மத்திய மீனள போர்டின். ஆருவது கூட்டத்தை, சென்னையில், 29-10-66-ல், உணவு-விவசாய அமைச்சர் திரு சி. சுப்பிரமணிய துவக்கி வைத்தார்.

படம் 3:—கூட்டுறவு சூபர் மார்க்கெட்டான "காமதேனு"வை சென்னையில், 14-10-66-ல், தமிழக முதலமைச்சர் திறந்து வைத்தார்.

















படம் 1:—மத்திய அரசாங்க அலுவலகங்களுக்கான புதிய பிரம்மாண்டமான அலுவலகக் கட்டிடத்தை, தமிழக முதலமைச்சர் 20-10-66-ல், சென்னையில் திறந்து வைத்தார்.

படம் 2:—புதிய கட்டிடத்தின் எழில் தோற்றம்.


படம் 3:—கிண்டி தொழில் பேட்டையில் சிறுதொழில் கண்காட்சி 6-10-66-ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

படங்கள் 4-5:—இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கையில் தொழில் பேட்டையை, (Industrial Estate) தொழில் அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் 30-9-66-ல் துவக்கி வைத்தார்.

படம் 5:—தொழில் பேட்டையின் எழில் தோற்றம்.





படம் 1 :—திருநெல்வேலி மாவட்டத்தில், ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டாக்களையும், சாகுபடி நிலப்பட்டாக்களையும், முதலமைச்சர், அண்மையில் வழங்கினார். இம்மாவட்டத்தில் இது வரை 3635 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.


படங்கள் 2-3 ;—12-வது தேசியப் பள்ளிகள் விளையாட்டுப் போட்டிகள் பரிசளிப்பு விழா, சென்னையில், 20-10-66-ல் நடைபெற்றது. திருமதி ஞானசுந்தரம் பக்தவத்ஸலம் பரிசுகளை வழங்கினார்.



படம் 3 :—விளையாட்டுப் போட்டியை 15-10-66-ல் துவக்கிவைத்த தமிழ் நாடு அரசாங்கத் தலைமைச் செயலாளர் திரு ஸி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ. ஸி. எஸ். அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.

படங்கள் 4-5 :—தர்மபுரி மாவட்ட அமைப்பு முதலாண்டு நிறைவு விழா—அக்டோபர் 2 லிருந்து 6 தேதி வரை நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. திருமால், பொருட் காட்சியைத் திறந்து வைத்தார். மாவட்ட விளம்பர அதிகாரி திரு ராஜாராம், தக்க ஏற்பாடுகள் செய்து, எல்லா துறைகளின் பணிகளையும் பொது மக்கள் அறிய வழிவகுத்தார்.

படம் 5 :—அக்டோபர் 5-ம் தேதி, மாதர் தினமாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் திருமதி சரோஜினி வரதப்பன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.



















## மதுரை மாவட்ட கல்லூரி மாணவர்கள்-மாணவியர் பயிற்சி முகாம்கள்

மாணவர் பயிற்சி முகாம், 1966 செப்டம்பர் 17 முதல் 23 தேதி வரை, வைகை அணையில், நடை பெற்றது. ஏழு கல்லூரிகளிலி ருந்து. 37 மாணவர்கள், பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.







படம் 1 :—மாணவர்களின் அணிவகுப்பை, உள் துறை அமைச்சர் திரு கக்கன் அவர்கள், பார்வையிட்டார்.

படங்கள் 2-3 :—கிராம நல ஊழியரின் ஈராண்டுப் பயிற்சிப் பொதுத் தேர்வில் முதன்மையாகத் தேறிய கிராம சேவக் பயிற்சியாளரான திரு முருகேசனுக்கு, உள்துறை அமைச்சர், 'சைகிள்' பரிசு வழங்கினர்.

படம் 4 :—மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனாருடன், கல்லூரி மாணவர்கள் . . . .

படம் 5 :—மாவட்டக் கலெக்டர் திரு டி. என். சேஷன், மாணவர்களிடையே உரை ஆற்றுகிறார்.

படம் 6 :—கிராமத் தலைவரின் பேச்சு.

படங்கள் 7–8 :— கல்லூரி மாணவிகள் பயிற்சி முகாம், 26·9·66 முதல் 2·10·66 வரை தே. கல்லுப்பட்டியில் நடைபெற்றது. மாவட்டக் கலெக்டரின் மனைவியார் திருமதி ஜெயா சேஷன், சான்றிதழ் வழங்குகிறார். மாணவிகளின் கொடி வணக்கம்.

## பொதுப் பணிகளில் அக்கறை கொண்டுள்ள பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள்

தமிழ்நாட்டில், பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள் வெறும் நிர்வாக இயந்திரங்களாக மட்டுமல்லாமல், தேசிய உணர்வுடன், நாட்டு நலனில் அக்கறை கொண்டு பொது நல வேலைகளிலும், ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பாடுபடுகின்றன. சிறு சேமிப்பு, தங்கப்பத்திர முதலீடு, ஜவான்கள் நலநிதி, தேசியக் கடன் பத்திரங்கள் ஆகியவற்றில் பெரும் ஆர்வத்துடன் செயலாற்றி வருவாயைக் கொண்டுவந்து சேர்க்கும் நிறுவனங்களாக அவை திகழ்வதுடன், காந்தி ஜெயந்தி விழா, சுதந்திர தின விழா, தேசிய ஒருமைப்பாடு தினம், ஐக்கிய நாடுகள் தினம், குழந்தைகள் தினம் போன்ற சிறப்பு விழாக்களை எல்லாப் பஞ்சாயத்துக்களுமே நல்ல முறையில் கொண்டாடுவதிலும் பின்வாங்குவதில்லை. தமிழ்நாட்டு கிராம மக்களிடையே புதிய பஞ்சாயத்து ஆட்சி ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்ச்சியும், பொது வாழ்வில் அக்கறை கொள்கின்ற உணர்வுமே, இதற்கெல்லாம் காரணம். மக்கள் பிரதிநிதிகள்—பஞ்சாயத்து ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் கிராம மக்களின் தலைவர்கள்—இப்படிப்பட்ட நல்ல காரியங்களில் தீவிரப் பங்கேற்று பணியாற்றிவருவது, பெரிதும் பாராட்டுதலுக்குரியது. இவ்வார்வமும், அக்கறையும் மேன்மேலும் பெருகி வளரவேண்டுமென விழைகிறோம்.

கவிதை

## உயிர் நாடி

(உதயை மு. வீரையன்)

“ இந்நாட்டின் உயிர்நாடி கிராமம் ” என்றே
  இயம்பிட்டார் நம்நாட்டின் அண்ணல் காந்தி !
செந்நீரைப் பாய்ச்சுகின்ற போர்க்க ளத்தின்
  சிறப்பான உயிர்நாடி ஏர்மு னையைத்
தந்நிலத்தின் உயிர்நாடி யாகக் கொண்டு
  தழைத்துயர்ந்து நிற்பதுதான் கிராமம் அன்றோ ?
அந்நிலத்தை உயர்த்திடவே முனைந்து நிற்போம் ;
  அவனியிலே சிறந்துயர வாழ்த்து வோமே !

மாந்தர்க்கும் உயிர்நாடி மானம் ; சுற்றும்
  மதிமுதலாம் கோள்கட்கும் உயிரே வானம் ;
நீந்துகின்ற மீனுக்கும் பயிர்க ளுக்கும்
  நிகரில்லா உயிர்நாடி தண்ணீர் ; பொல்லா
ஆந்தைக்கும் உயிர்நாடி இருளே ! வெல்லும்
  ஆடவர்க்கும் உயிர்நாடி வீரம் ; நல்ல
காந்தமென நாட்டோரை ஈர்க்கும் சிற்றூர்
  காசினிக்கே உயிர்நாடி ! வெல்க ! வாழ்க !

ஒற்றுமைதான் உழைப்போரின் உயிரின் நாடி !
  உடலுழைப்பே உயர்வுக்கும் உயிரின் நாடி !
கற்றோரே வழிகாட்டும் உயிரின் நாடி !
  காந்தியம் கிராமத்தின் உயிரின் நாடி !
முற்போக்கு மிகுபலனுக் குயிரின் நாடி !
  முன்னேற்றம் உலகத்தின் உயிரின் நாடி !
பிற்போக்கு வறுமையினை ஓட்டி விட்டு
  பெருமையுடன் கிராம நலம் கிடைக்கச் செய்வோம் !

---

### முதல் அட்டைப்பட விளக்கம் :

தென் ஆர்க்காடு மாவட்டத்தில், திண்டிவனம் தாலுகாவில், மைலம், ஒலக்கூர் வட்டாரப் பகுதிகளில், நிலக்கடலையைத் தாக்கும் சிகப்புக் கம்பளிப் பூச்சியை ஒழிப்பதற்காக, விமானம் மூலம் மருந்து தெளிக்கப் பட்டது. செய்தித் துறை அமைச்சர் திரு பூவராகன் அவர்கள், ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதி, மருந்து தெளிப்பதைத் துவக்கிவைத்தார். சோவியத் விமானத்தின் மூலம், ரஷ்ய விமானிகளாலேயே இம்முறை மருந்து தெளிக்கப்பட்டது, சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டிய செய்தியாகும். துவக்க நாளன்று, ருஷ்யப் பிரதிநிதி திரு ஜி. ஐ. கோவரின் அவர்களும், கலந்துகொண்டார். விமான தள வேலைகள், பராமரிப்பு, மருந்துவைத்து விமான டாங்கிகளில் நிரப்புதல், விமானம் மருந்து தெளிக்கவேண்டிய இடத்தைக் கொடிகள் பிடித்துக் காட்டுதல் போன்ற வேலைகள், மாவட்ட விவசாய அதிகாரியின் மேற்பார்வையில் செய்து தரப்பட்டது. மேற்சொன்ன இரண்டு வட்டாரப் பகுதிகளிலும், சுமார் 18,000 ஏக்கர் பரப்பளவில் மருந்து அடிக்கப்பட்டது.



(படத்தில் : செய்தித்துறை அமைச்சர் திரு. பூவராகன், ருஷ்ய கான்சல் ஜெனரல் திரு கோவரினும், மற்றவர்களும்.)

**சிறுகதை**

# முன்வினை முந்திவர...

[திரு சோம மகாதேவன்]

வாசல் திண்ணையிலேயே உட்கார்ந்து, சொல்ல வேண்டியவற்றையெல்லாம், குமுறலோடு சொல்லித் தீர்த்துவிட்ட செல்லையா புறப்பட்டுவிட்டான்.

“இன்னம்......என்னமும் பாக்கி வச்சிருக்கியா ?” என்று உள்நடையில் பலகையில் உட்கார்ந்திருந்த நாகலிங்கம் கேட்டதுதான், செல்லையாவின் ஆவேசத்தைக் கிளறி விடுவதாக இருந்தது.

“நான் பாக்கி வச்சிருந்து உங்களை என்னங்க செய்திட முடியும். நீங்கதான் எட்டாத உயரத்திலே இருக்கிங்களே ! எல்லாத்துக்கும் மேலே ஆண்டவன் ஒருத்தன் இருக்கான். அவன் கேட்பான்” என்று சொல்லிப் பொருமினான் செல்லையா.

நாகலிங்கத்திற்கும் கோபம் வந்துவிட்டது

“நல்லா கேட்கட்டும். இதுக்கு மேலே இங்கே நின்னு பேசினா...... நடக்கப்போறது வேறேதான் ?”

“இனிமே என்னங்க நடக்கப்போகுது. எல்லாந்தான் நடந்துபோச்சே. இந்த வருசமும் லோன்பணம் கிடைக்கும்ங்கிற நம்பிக்கையிலே, போனவருசம் வாங்கின கடன் பூராவையும் கட்டியிருக்கேன். இப்ப உனக்குக் கடன் தொகையே கிடைக்காதுன்னு சொல்றீங்களே—இந்த அநியாயம் அடுக்குமா ?”

நாகலிங்கம் எழுந்து நிலைப்படியோரமாக வந்து நின்றார்.

“கூச்சல் போட்டு—நாலு பேரை கூட்டினா மட்டும் எதுவும் நடக்காதடா செல்லையா ?” என்றார்.

“நீங்க தலைவரா இருக்கிற மட்டும் இந்த கூட்டுறவுச் சங்கம் உருப்படுமா ?” என்று கடைசியாகக் கேட்டுவிட்டு செல்லையா போய்விட்டான்.

நாகலிங்கம் திரும்பவும் பலகையில் வந்து உட்கார்ந்தார்.

நாகலிங்கம்—அந்தக் கிராமத்துக் கூட்டுறவு நாணயச் சங்கத்தின் தலைவர். பொதுக் காரியங்களைத் தலையில் தூக்கிச் சுமக்கும் உழைப்பாளிதான். இந்தத் தலைவர் பதவிக்கு படியா அளக்கிறார்கள் ? 'வசை'க்குத்தான் குறைவே இருக்காது.

நேற்றுப் பிறந்தவன் செல்லையா—தலைவரையே மதியாமல் பேசியபோது, அதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், இங்கே வந்து பக்குவமாக எடுத்துச் சொல்லியபோது, வெட்டிவிடும் மனோபாவமும் குறுக்கிடத் தானே செய்கிறது.

நாகலிங்கம் மேல் துண்டால் வழுக்கைத்தலையை அழுத்தித் துடைத்துக்கொண்டார்.

நாலு காசைக் கண்ணிலே பார்த்தவுடன்—பயல்களுக்கு நெஞ்சுரம் வந்துவிடுகிறது. இல்லையென்றால், வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில் ஏற்பட்ட தகராறில், நாலு பேர் அறிய அவ்வளவு திமிராகப் பேசுவானா செல்லையா ? மனிதனுக்குக் கொம்பா முளைத்துவிடும் ! அது முட்டிப் பார்க்கும்போதுதானே தெரியும். இந்தப் போகத்துக்குத் திண்ணையிலே துண்டை விரித்துப் படுக்கவைத்தால்—எல்லாமே ஒடுங்கிப்போகும்...

நாகலிங்கத்துக்கு இருப்புக் கொள்ளவில்லை.

செல்லையா ஆத்திரத்தோடு பேசிவிட்டுச் சென்றதை நினைத்து அவருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

“என்னங்க ?” என்ற குரல் கேட்டு நாகலிங்கம் திரும்பினார். பின்னால் அவரது மனைவி பாக்கியத்தம்மாள் நின்றுகொண்டிருந்தாள்.

“என்ன ?” என்று எரிச்சலோடுதான் கேட்டார் நாகலிங்கம்.

“இந்தச் செல்லையாவோட சம்சாரம் காலையிலே இங்கே வந்து .....ஒருபாட்டம் அழுதுட்டுப்போச்சு ? தசகூலிச் செலவுக்குக்கூட கையிலே பணமில்லாம........ ........லோன் பணத்தைத்தான் நம்பிக்கிட்டு இருக்காங்களாம். கண்ணீர் வடிக்குது அந்தப் பொண்ணு !”

நாகலிங்கம் திரும்பினார்.

“இப்பத்தான் தெரியுதாம்மா. மனுசனை மதிக்காமப் பேசுறப்ப இந்தப் புத்தி எங்கே போயிருந்திச்சு. இந்தத் நடவை தலைகீழா நின்னாலும் அந்தப் பயலுக்குக் காலணா கடன் கிடைக்காது....” ஆத்திரத்தோடு பொரிந்தார் அவர்.

“இந்தப் பாவத்தை நீங்க ஏன் கட்டிக்கிறீங்க” என்று கேட்டு விட்டாள் பாக்கியம்.

செல்லையாவின் மீது திரும்பி இருக்கவேண்டிய கோபம் திசைமாறிவிட்டது. அவர் துண்டை உதறி மேலே போட்டுக்கொண்டு எழுந்தார்.

"யார் யார்கிட்ட எப்படி நடந்துக்கணும்ன்னு.... எனக்கு நீ எடுத்துச் சொல்லணுமா? உனக்குண்டான வேலையைப் பாரு" என்று கோபத்தோடு கேட்டுவிட்டு வெளியே கிளம்பிவிட்டார்.

o o o

பொழுது சாயும் நேரத்தில் தான் நாகலிங்கம் வீடு திரும்பினார்.

தெருவின் முனையில் அவர் திரும்பிய போதே, எதிர் பார்த்திருந்ததேபோல் அவரது எட்டு வயது பையன், முன்னால் ஓடிவந்து செய்தி சொன்னான்.

வீட்டிலே விருந்தாக அத்தையம்மா வந்திருக்காளாம்!

தன் அக்காள் வந்திருக்கும் செய்தி நாகலிங்கத்துக்குப் பரபரப்பைத்தான் கொடுத்தது. பக்கத்து கிராமத்திலே தான் இருந்தாலும், காரணமில்லாமல் அவள் தம்பி வீடு தேடி வருவதே இல்லை.

அக்காளுக்கு ஒரே மகன். அவனுக்குக் குழந்தைகளுக்கு குறைவில்லை. குத்தகை விவசாயம் தான். இருந்தாலும் உருண்டு பிரண்டு எப்படியோ நிம்மதியாகத்தான் பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது.

நாகலிங்கத்தைக் கண்டதும், கூடத்தில் உட்கார்ந்திருந்த தமயந்தியம்மாளும், பாக்கியமும் எழுந்து ஒதுங்கி நின்றார்கள்.

"வாங்க அக்கா" என்று வாய் நிறைய கேட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தார் நாகலிங்கம்.

"ஆமா தம்பி... ஒரு அவசரமாகத்தான் வந்தேன்."

நாகலிங்கம் பலகையில் உட்கார்ந்தார்.

"முன்னே பின்னே சொல்லாம புறப்பட்டுவந்திருக்கிங்க, சொல்லி அனுப்பியிருந்தா நான் வந்திட்டுத் திரும்புறேன். முருகேசன் நல்லா இருக்கானில்லா."

தமயந்தியம்மாள் ஆரம்பித்தாள்.

"அதைத் தானே தம்பி சொல்லவந்தேன். அங்கே கிராமத்திலே நல்லது செய்யிறதுக்கே நாதி இல்லாமப் போச்சு. முருகேசன் வாயில்லாப் பிள்ளை. இப்பப் பாரு.. இந்த வருஷம் அவன் சொசைட்டியிலே கடன் வாங்குறதுக்கும் வகை இல்லாமச் செய்திருக்காங்க."

"ஏன் அவன் தான் ஒழுங்கா..கடனைத் திருப்பிச் செலுத்திப் போடுவானே?" என்று இடையில் கேட்டார்.

"அந்த..சொசைட்டி தலைவருக்கும் உன் மருமகனுக்கும் என்னமோ தகராறும். அதை மனசிலே வச்சுக்கிட்டு இல்லாத வக்கணையெல்லாம் சொல்லி லோன் பணத்தை நிறுத்தி வச்சிருக்காங்க!"

நாகலிங்கம் ஒன்றும் பேசவில்லை. அவரது நினைவு சட்டென்று செல்லையாவின் மீது திரும்பியது.

"தனிப்பட்ட முறையிலே தகராறு இருந்தா.. அதுக்கு சங்கத்துப் பணத்தை நிறுத்திவைக்கிறது இங்கேயும் தான் இருக்கு!" என்று சொல்லிவிட்டு நாகலிங்கத்தைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே உள்ளே போய்விட்டாள் பாக்கியம்.

அவர் முகத்தில் அரும்பி நின்ற வியர்வையைத் துடைத்துக்கொண்டார். அவருக்கு என்ன சொல்வதென்றே தோன்றவில்லை.

தமயந்தியம்மாள் மேலும் சொன்னாள்.

"அது என்னமோ தம்பி—இந்தப் போகத்துக்கு கடன் தொகை கிடைக்கலையின்னு.. அங்கே ஒண்ணுமே நகராது. பணம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையிலே கையிலே இருந்ததையெல்லாம் போட்டு—ரெண்டு மாடுகளை ஓட்டியாந்திருக்கான் உன் மருமகன். நீ வந்து தான் சொல்லறதைச் சொல்லி ஆகப் பண்ணணும்."

"உள்பகை இருந்தா அதையேன் சொசைட்டியிலே திணிக்கிறாங்க. இது என்ன தனிப்பட்டவன் சொத்தா?" என்று மெதுவான குரலில் கேட்டார் நாகலிங்கம்.

தமயந்தியம்மாளுக்கு ஆத்திரமாக வந்தது

"அதைக் கேட்கிறதுக்குத்தான் அங்கே ஆளே இல்லாமப் போச்சே. நீ வந்து என்ன ஏதுன்னு கேட்டு கடன் பணம் கிடைக்கிற வழியைச் செய்திட்டு வா."

"நாளைக்கே போகலாம் அக்கா" என்று சொல்லி விட்டு இருப்புக்கொள்ளாமல் எழுந்தார் நாகலிங்கம்.

திண்ணையிலே வந்து தனியாக உட்கார்ந்த மனிதருக்கு —நினைவுகள் அத்தனையும் செல்லையாவைச் சுற்றியே வந்தன.

மருமகனை நினைத்து பச்சாதாபப்படுகிறது மனது. ஆனால் செல்லையாவின் மனது என்ன பாடு பட்டிருக்கும். அவனுக்குக் கெடுதலைச் செய்ததனால்—யாருக்கு என்ன லாபம் கிடைத்துவிட்டது? ஒரு சங்கத்தின் தலைவராக இருந்து, இங்கே இந்த அநீதியைச்செய்துவிட்டு, வெளியூரிலே, யாரிடம் எந்த முகத்தோடு நியாயத்தைப் பேசிவிட முடியும்?

நாகலிங்கம் யோசித்துக்கொண்டே இருந்தார். அவர் தலை நிமிர்ந்தபோது, தூரத்திலே செல்லையாதான் தெருவோடு வந்து கொண்டிருந்தான்.

அவரிடமிருந்து, தூரவே விலகிச் செல்லுவது போல, தெருவின் எதிர்சாரியை ஒட்டி நடந்து வந்தவன், இந்தப் பக்கமாகத் திரும்பவே இல்லை.

'பார்ப்பதே பாவம்'—என்ற முடிவுக்கே வந்துவிட்டானா?

"செல்லையா" என்று கூப்பிட்டார் நாகலிங்கம்.

திடுக்கிட்டவனைப்போல அவன் நின்று திரும்பினான்.

"இங்கே வந்திட்டுப்போ..!" என்று அழைத்தார் அவர்.

அந்தக் குரலில் ஒரு புதுக்கனிவு இருப்பதை உணர்ந்து, மெதுவாக நடந்து வந்தான் செல்லையா.

"என்னங்க."

"காலையிலே சொசைட்டிக்கு வா. லோனுக்கு ஏற்பாடு செய்து போடலாம்."

செல்லையாவுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை.

"என்னென்னமோ சொன்னிங்களே" என்றான், ஏற்பட்ட உற்சாகத்தில் தன்னை மறந்தவனாக.

"பொதுவுக்காக எவ்வளவோ பாடுபடுறோம். எத்தனையோ பேர் குறை சொல்றதையும் தாங்கிக்க வேண்டியிருக்கு. நீயே சொல்லு செல்லையா..எங்களுக்கும் இடையிலே விருப்பு வெறுப்புன்னு ஒண்ணு வரத்தானே செய்யுது" என்று சொல்லி குழந்தையைப் போலச் சிரித்தார் நாகலிங்கம்.

"எல்லாம் தனக்கு வந்தால் தெரியும்" என்பார்கள். இக்கூற்று முழுக்க முழுக்க உண்மை. செல்லையாவுக்கு கஷ்டம் என்றால் அதைப்பற்றி நாகலிங்கத்துக்கு என்ன கவலை? ஆனால், அதே கஷ்டம், தன் சகோதரி மகனுக்கு வந்து விட்டதும், என்ன சட்டதிட்டமெல்லாம் பேசுகிறார் அதே நாகலிங்கம்! கடைசியில் அவர் அகக் கண் திறக்கிறது.......

# ஒரு தேடரிய மருந்து

தக்காண பீடபூமியில் வெப்பமிக்க மா நிலங்கள் தமிழ்நாடும் ஆந்திரமும். இவற்றின் கிராமங்கள் தோறும் நாள் தவருமல் தேள் பூரான் கடிகளுக்கு ஆளாகி தவிப்பவர் ஏராளம். கடக ரேகையில் அமைந்துள்ள காரணத்தால், இப்பகுதியில் அடிக்கும் கொடிய வெப்பமும் கிராமப்புற வீடுகளில் வேய்ந்த ஓலைக் கூரைகள், வளைந்த நாட்டு ஓடுகள் முதலியன தருகின்ற அரவணைப்பும் இக்கிராமங்களை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் ஊர்வனவற்றின் உறைவிடமாக்கியுள்ளன. நஞ்சை முறிக்கும் திறனுடைய லெக்ஸின் (Lexin), எதிர் நஞ்சு (Anti-venom) போன்ற நவீன மருந்துகள், நம் கிராம ஏழைகளுக்கு எளிதில் கிட்டும் வாய்ப்பில்லை. வாய்ப்பினும் வாங்கும் வகையில்லை. இந்நிலையில், ஏழைகளின் கண்ணீர் துடைக்க வந்த சஞ்சீவிப் பேழையாக விளங்கும் கிளி மூக்குக் கொள்ளை என்ற செடியின் சிறந்த மருந்தாற்றலைப்பற்றி அனைவரும் தெரிந்து கொள்வது அவசியம்.

### அற்புத ஆற்றல் படைத்த செடி

பாரத நாட்டின் பழங்குடி மக்களான கோண்டர்கள் (Gonds) காலங்காலமாக காத்து வந்த ஏகமூலிகை இரகசியங்கள் என்னும் மருந்துகளில் ஒன்றே கிளி மூக்குக் கொள்ளை, இதனைத் தமிழில் புலிநகக் கொள்ளையென்றும், வடமொழியில் ஸாகநாஸா என்றும், தாவர மொழியில் க்ரொட்டலேரியாலேபர்னிஃபாலியா (crotolaria laburnifolia) என்றும் கூறுவர். இதன் மருந்து ஆற்றலைப் பல்லாண்டு காலமாக பரப்பிவந்த பெருமை, சென்னை உப்பிலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையே சாரும். இருப்பினும் இச்செடியின் விதைகளிலுள்ள க்ரொட்டாலேபர்னைன் என்ற காரப் பொருள் நம் உடலைத் தாக்கும் தேள், ஈ, பாம்பு நஞ்சுகளை அழித்து செயலழிக்கச் செய்யும் திறனுடையது என்ற உண்மையை பாண்டிச்சேரி மருத்துவக் கல்லூரி மருந்தியல் பிரிவில் ஆராய்ந்து உறுதி செய்த பிறகு தான், இச்செடியின் அற்புத ஆற்றல் முற்றிலும் வெளிப்பட்டது.

### தேள் கடித்தால் என்ன செய்ய வேண்டும்?

தேள்கடிக்கு இச்செடியின் விதைகளைத் (தேளின் பருமனைப் பொறுத்து) சமஅளவு 8 அளவு முதல் 16 மிளகு மணிகளுடன் ( pepper ) கலந்து சற்று தண்ணீர் விட்டு பசைபோல் அரைத்து தண்ணீர், பால் அல்லது தேநீருடன் உண்ண வேண்டும். சிறிது பசையைக் கடிவாயில் தடவவேண்டும். ஆகார கட்டுப்பாடுகள் ஒன்றும் கிடையாது. மருந்தின் அளவு சற்று மிகுந்து விட்டாலும் தொந்தரவோ ஆபத்தோ இல்லை. எனவே பாமரரும் இவ்விதையைப் பயமின்றிப் பயன்படுத்தலாம்.

# தேள் கடிக்கு

[திரு ரா. குமாரசாமி, விஞ்ஞான மந்திர் அதிகாரி, ஆரியக்கவுண்டன்பட்டி, சேலம் மாவட்டம்]

பூரான், சிலந்தி, நட்டுவக்காலி, ஜலமண்டலி, சீத மண்டலி போன்றவற்றின் கடிகளுக்கு மேற்சொன்ன முறையில் அவற்றின் பருமனுக்கு ஏற்றவாறு விதைகளைப் பயன்படுத்தி சிகிச்சை செய்யலாம்.

### விஷப்பாம்பு தீண்டினுல்?

நச்சுப் பாம்பு கடிகளுக்கு முதலில் முறைப்படி ஒரு உறுதியான கயிற்ருல் கடிவாயில் மேற்பகுதியில் கட்ட வேண்டும். விரியன் பாம்பு கடியா, நல்ல பாம்பு கடியா என்ற விவரத்தை முடிந்த அளவு யூகித்தல் வேண்டும். விரியன் நஞ்சுகள் இரத்த ஓட்ட மண்டலத்தைத் தாக்குவதால் (Cardiotoxic) அதிக நாடித் துடிப்பு, கண், காது, ஆசனம், வாய் துவாரங்களில் குருதி கசிதல், கடிவாயில் கடுமையான வலி, வீக்கம் தோன்றுதல், வாந்தி எடுத்தல், ஸ்மரணை அற்றுப்போதல், கண்மணிகள் அகல விரிந்து ஒளிக்கு உணர்ச்சி அற்றுப்போதல் முதலிய அறிகுறிகள் தென்படும். ஆயினும் உடல் பகுதிகள் மரத்துப் போவதில்லை (Paralysis). கடிவாயில் இரண்டுக்கு மேற்பட்ட பல தடங்கள்கூடத் தென்படலாம். விரியன் நஞ்சுகள் உடல் திசுக்கள் கெட்டு அழுகுதலைத் துரிதப்படுத்துகின்றன. நாகப்பாம்பு நஞ்சுகள் (Colubrid Poisons) நரம்பு மண்டலத்தைத் தாக்குவதால் (CNS) (NEUROTOXIC) உடல் பகுதிகள் படிப்படியாக மரத்துப்போதல், நாக்குத் தொண்டை வீங்கி செயலிழத்தல், வாயில் நுரை தள்ளுதல், தலை தொங்கல், மூச்சு பேச்சின்மை முதலிய அறிகுறிகள் தென்படும். கடிவாயில் 2 பற்தடங்கள் தென்படும். கடிவாய்சிவந்து லேசான எரிச்சல்தான் இருக்கும். பாம்பு நஞ்சுகளின் வீரியத்தைப் பொறுத்து, 60 முதல் 300 வரை விதைகளை சமஅளவு மிளகு மணிகளுடன் கலந்து பசைபோல் அரைத்து இரு கவளமாக பாலுடனே நீருடனே உண்ணவேண்டும். கடிவாயில்

பசையை சிறிது தடவவேண்டும். நோயாளி உறுப்புக்களை அசைக்காது படுத்திருக்கவேண்டும்.

இதுவரை விஞ்ஞான ரீதியில் சரியான மருந்து அளவுகள் (dose) இவ்விதையில் நிர்ணயிக்கப்படாத காரணத்தால், பாம்பு கடியைப் பொறுத்தமட்டில், மருத்துவ உதவி ஒன்றும் கிட்டாத இக்கட்டான சமயத்தில், முதலுதவி என்ற நிலையில் மேற்சொன்ன சிகிச்சையைப் பயன்படுத்தல் நலம்.

### செடி அமைப்பும்—உற்பத்தியும்

விதைகள் வியாபார ரீதியில் விற்கப்படுவதில்லை. எனவே ஒவ்வொரு பஞ்சாயத்து அலுவலகமும் பள்ளியும் மற்ற பொது நிலையங்களும் இச்செடியை வளர்த்து விதைகளைப் பொது மக்களுக்கு அளித்து உதவவேண்டும். ஒரு செடியின ஒரு மக சூலைக் கொண்டு சுமார் 200 முதல் 300 வரை தேள் கடியையும் 10 அல்லது 12 பாம்பு கடியையும் சமாளிக்க லாம். விதைகள் பல வருடம் கெடாமல் இருக் கின்றன. செடிகள் மஞ் சள் வண்ண மலர் விரித்து சுற்றுப்புறத்தை அழகூட்டுகின்றன. சுமார் 4 முதல் 6 அடி வரை உயரத்திலும் 2 அல்லது 3 அடி பக்கவாட்டிலும் வளர்கின்றன. இலைகள் 1 அங்குல நீளமும் முக்கூட்டு அமைப்பும் உடையன. தண்டில் ஒன்று விட்டு அமைந் திருக்கும் பூக்கள் மஞ்சள் நிறமானவை. அவரைப்பூ அமைப்புடையன. ½ அங்குல நீளமுடையவை. படகு அல்லி கிளி மூக்கு போன்ற அமைப்புடையது. காய் 1½ அங்குல நீளமானது. காய்ந்ததும் தவிட்டு நிறமாக மாறி உள்ளே விதைகள் விழுந்து சலசலக்கின்றன. ஒவ்வொரு காயிலும் 8 முதல் 16 விதைகள் காணப்படும். க்ரோட்டலேரியாவில் சுமார் 25 வகைகள் இருப்பதால் தெரிந்தவர்களிடம் இருந்து விதைகளைப் பெறுதலே நல்லது. ஆயினும் இலை, பூ, காய், விதை இவற்றின் அமைப்பைக் கூர்ந்து நோக்கி இச்செடியை அறிந்துவிடலாம்.

> கிராம மக்களுக்கு வைத்திய வசதிகள், புதிய பஞ்சாயத்து ஆட்சியில், பெருகிக்கொண்டே வருகின்றன. ஆனாலும், மருத்துவ மனைகளுக்கும், மருந்தகங்களுக்கும் உடனடியாக கிராம மக்கள் செல்ல இயலாமல் போய்விடலாம். தேள் கடி, பாம்புக்கடி போன்ற விஷயங்களில், உடனடியாக குணம் தரக்கூடிய, கையிருப்பிலே வைத்துக்கொள்ளக் கூடியதுமான, மிகவும் சுலபமான நிலையில் தயார் செய்துகொள்ளக் கூடியதுமான ஒரு மருந்தை, இக் கட்டுரை அறிமுகப்படுத்துகிறது. 'கிளிமூக்குக்கொள்ளை'' என்ற இந்தச் செடியை, பஞ்சாயத்து நிறுவனங்கள் பயிரிட்டு வளர்க்கலாம். இதனால், கிராம மக்களுக்குப் பெருதவியாக இருக்கும்.
>
> —ஆசிரியர்

இது ஒரு வகை மூலிகைச் செடியாதலால் பொதுவாக எந்த வகை மண்ணிலும் செழித்து வளரும் தன்மையது. இதுபோல் எப்பருவத்திலும் இதைப் பயிரிடலாம். ஆனால் சிறப்பாக நல்ல மழையும் மண் வளமும் உள்ள இடத்தில் செழிப்பாக வளர்கிறது.

நன்றாக விளைந்து காய்ந்த காய்களில் இருந்து சேகரித்த் விதைகளைத் தண்ணீரில் போடவேண்டும். நீரினடியில் மூழ்கிப் போன விதைகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். காற்றோட்டமான இடத்தில் திறந்த பாத்திரத்தில் விதைகளை 2 அல்லது 3 நாட்கள் ஊறவைத்தலின் மூலம் விதை முளைத்தலைத் துரிதப்படுத்தலாம். வருடத்தின் எப் பருவத்திலும் திறந்த வெளியில் பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட விதைகளை ஊன்ற வேண்டும். வரிசையில் செடிக்குச்செடி 4 அல்லது 5 அடி தூரமும் வரிசைக்கு வரிசை 6 அல்லது 7 அடி தூரமும் இட்டு ஊன்றுதல் நலம். அவசியமானால் கன்றுகள் 1 அடி உயரம் இருக்கும்போது பிடுங்கி நடலாம். இளங் கன்றின் தண்டு மிகவும் மெல்லியதாக இருப்பதால் எளிதாக ஒடிந்துவிடும். எனவே காற்றாலும் பறவைகள் விலங்குகளாலும் ஒடிந்து விடாமல் இருக்க ஒரு கொழுக் கொம்பை ஊன்றி அதில் கட்டி வைத்தல் நலம். கன்று காளிகள் இதன் இலைகளை உண்பதில்லை.

வருட முழுவதும் பூக்கள் தோன்றினாலும் கூட காய்கள் வைகாசி–ஆனி முதல் கார்த்திகை-மார்கழி வரை தான் உண்டாகின்றன. இக் காய்கள் நன்றாக முதிர்ச்சி அடைய 2 மாதங்கள் பிடிக்கின்றன. அவை நன்றாகக் காய்ந்து தவிட்டு நிறமானவுடன் விதைகள் உள்ளே விழுந்து சலசலக்கின்றன. இப்பருவத்தில் காய்களைச் சேகரிக்கவேண்டும். விதைகளில் உள்ள காரச்சத்து (Alkaloid) பலவருடங்கள் வீரியம் குன்றாமல் இருக்கிறது. ஓர் ஏக்கரில் சுமார் 1,600 செடிகள் வரை பயிரிடலாம்.

இச்செடியில் ஒருவகை புழுக்கள் சில பருவங்களில் தோன்றுகின்றன. இதன் உடல் நிறம் கருப்பும் வெண்மையும் கலந்து காணப்படுகிறது. இது ஒன்று முதல் ஒன்றேகால் அங்குலம் நீளம் வரை வளர்கிறது. இலைகளையும் மலர்களையும் இளங்காய்களையும் இன்று நாசம் செய்கிறது. இவை பெரும் அளவில் தோன்றும் போது 5 சதவீதம் பி.ஹெ.ஸி. (5% B.H.C.) என்ற மருந்தைப் பயன்படுத்தி அழித்துவிடலாம். மெல்லிய துணிப்பையில் B.H.C. பொடியைக்கட்டி இப்பையை ஒரு கோலின் நுனியில் தொங்கவிட்டு, தாக்கப்பட்ட பகுதியில் பொடியைத் தூவவேண்டும்.

தமிழ்நாட்டு விவசாயியின் அனுபவம்:

# நெல் தாளடியில் பருத்தி

"பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை தரிசாகக் கிடக்கும் நிலத்தில், பருத்தியைப் பயிரிட்டு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,100 சம்பாதிக்க முடியுமென்ருல், அந்த சந்தர்ப்பத்தை ஒவ்வொரு விவசாயியும் ஏன் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது?" என்று கேட்கிருர் திரு. வேணுகோபால்; அவருடைய கேள்விக்கு அவரே பதிலும் தந்து, அவ்வாறே பருத்தி சாகுபடியும் செய்து இவ்வாண்டு ரூ. 1,300 சம்பாதித்து விட்டார். தமிழ்நாட்டிலுள்ள விஷ்ணம்பேட்டையைச் சேர்ந்தவர்தான் திரு. வேணுகோபால்.

"பி.ஆர்.எஸ். 72" (PRS—72) பருத்தியை இவ்வாண்டு பயிரிட்டதால் எனக்கு ரூ. 1,300 லாபம் கிடைத்துள்ளது. பிப்ரவரி மாத தாளடிப் பயிருக்கும் ஜூன் மாத குருவைப் பயிருக்கும் இடையே, இது சாகுபடி செய்வதற்கு மிகவும் ஏற்றது. இக்காலங்களில் நிலம் பொதுவாக தாளடித் தரிசாகவே கிடைக்கும்" என்கிருர் திரு. வேணுகோபால்.

இவர் தாளடியில், அக்டோபர் முதல் பிப்ரவரி வரை சி. ஓ. 25 நெல் ரகத்தையும், குருவையில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) ஏ.டி.டி. 27 நெல் ரகத்தையும் பயிரிட்டு வருகிருர்.

"இராமசேவக் கூறியது போலவே, பி.ஆர்.எஸ். 72 பருத்தியை பிப்ரவரி முதல் ஜூன் மாதம் வரை பயிரிட விரும்பினேன்; அதனுல் நல்ல பயனே கிடைத்துள்ளது" என்று செழித்து வளர்ந்துள்ள பருத்திப் பயிர்களிடையே நின்று, அவற்றைத் தழுவி வெற்றிப்புன்னகையுடன் கூறுகிருர் இந்த விவசாயி.

சி. ஓ. 25 நெற்பயிர் அறுவடை செய்து முடிந்தவுடன், அந்த ஈர நிலத்திலேயே பி. ஆர். எஸ். 72 பருத்தி விதையை நட்டுவிடுகிருர். ஒரு ஹெக்டேருக்கு 30 கிலோ வீதம் விதை நடுகிருர். 45 சென்டி மீட்டர் இடைவெளியில் இவற்றை நடுகிருர்.

"பி. ஆர். எஸ். 72 பருத்திக்கு ஏதாவது கீழ் உரம் இட்டீர்களா?" என்று அவரைக் கேட்டபோது, "எந்தவித உரமும் போடவில்லை" என்று பதிலளித்தார். குருவைக்கும் தாளடிக்கும் அதிக அளவில் உரமிட்டிருந்ததால், பருத்திக்கென்று தனியாக உரமிட வேண்டிய அவசியமில்லை என்று தாம் கருதுவதாகவும் அவர் கூறினர்.

ஏற்கனவே அவர் குருவைப்பயிருக்காக ஒரு ஹெக்டேருக்கு 4,000 கிலோ பசுந்தாள் உரமும், 250 கிலோ அம்மோனியம் சல்பேட்டும், 250 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் போட்டிருந்தார்.

அதைத் தொடர்ந்து தாளடிப் பயிருக்கு 375 கிலோ அம்மோனியம் சல்பேட்டும், 250 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் இட்டார்.

பருத்தியை நட்டு மூன்று வாரங்களான பின், ஒரு ஹெக்டேருக்கு 70 கிலோ வீதம் யூரியா உரமிட்டார், திரு வேணுகோபால். ஆறுவது வாரத்தில் 175 கிலோ அம்மோனியம் சல்பேட்டும், 250 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் போடப்பட்டன.

'பில்டர் பாயிண்ட்' மூலம் ஏழு தடவைகள் நீர்ப்பாசனம் செய்தார்.

"பருத்தி பயிரிடுவதில், பயிர்ப் பாதுகாப்பு செய்வதுதான் ஒரு கஷ்டம்" என்கிருர் திரு வேணுகோபால். "ஏழு தடவை மருந்தடித்து, அல்லது மருந்து தூவிப் பயிர்ப் பாதுகாப்பு செய்யவேண்டும்; பயிரை நோய் அண்டாதவாறு பார்த் கொண்டுவிட்டால் போதும்; பிறகு வளமான சாகுபடி கிடைப்பது உறுதி" என்று திடமுடன் கூறுகிருர்.

அறுவடை செய்ததில், ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,900 மதிப்புள்ள 10 குவிண்டால் பருத்தி கிடைத்தது; இதற்கான செலவு ரூ. 800 மட்டுமே. கிடைத்த நிகர லாபம் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,100. அவருடைய மூன்று ஏக்கர்களிலும் (1·2 ஹெக்டேர்கள்) பி.ஆர்.எஸ். 72 பருத்தி விதைத்ததில், அவருக்குக் கிடைத்த லாபம் சுமார் ரூ. 1,300 ஆகும்.

(From "Intensive Agriculture" September, 1966.)

பஞ்சாப் மாநிலத்தில் கங்க்ரா மாவட்டத்தில் உள்ள ஒரு சிறிய கிராமமே ஜியா என்பது. இதன் மக்கள் தொகை 2,000. இந்த இரண்டாயிரம் பேர்களும், எழு பஞ்சாயத்து உறுப்பினர்கள் கொண்ட திரு ஜகதீஸ்ராம் சர்மா என்பவரின் தலைமையில் ஒன்று பட்டு, ஜியா கிராமத்தின் தோற்றத்தையே அடியோடு மாற்றிவருகின்றனர்.

கிராமத்தைச் சுற்றி எங்கு நோக்கிலும் பசுமையான வயல்கள், சுத்தமான சாலைகள், செங்கற்களால் கட்டப்பட்டு வரிசையாக அமைந்துள்ள வீடுகள், ஓடி ஆடி துள்ளித்திரியும் குழந்தைகளையெல்லாம் பார்க்கும் போது, ஜியா கிராமம் நாளுக்கு நாள்

இங்குள்ள விசாலமான பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடம், 5,000 ரூபாய் செலவில் மக்களாலேயே கட்டப்பட்டது. கிராமத்தை வந்தடைவதற்கு இரண்டு மைல் தூர சாலையைக் கடந்துதான் வரவேண்டும். அந்தச் சாலையை அமைத்ததும் இக் கிராம மக்களே. இவை தவிர, இரண்டு பாலங்கள், மூன்று பள்ளிக்கூடக் கட்டிடங்களையும் கட்டி முடித்திருக்கின்றனர்.

### இணைப்புப் பாலம்

இக் கிராமத்திற்கும், இதையடுத்துள்ள மற்றொரு கிராமத்திற்கும் போக்குவரத்து வசதியில்லாமல் இவ்விரு கிராமங்களும் துண்டிக்கப் பட்டேயிருந்தன. ஒரு தொங்கு பாலம்

**"சர்க்கரை, உப்பு இந்த இரண்டைத் தவிர வேறு எதையுமே நாங்கள் வெளியில் வாங்குவது கிடையாது" என்று பெருமையுடன் கூறுகிறார், ஜியா பஞ்சாயத்துத் தலைவர், திரு ஜகதீஸ்ராம் சர்மா; ஆம்...... அவர் கூறுவது முற்றிலும் உண்மையே.**

# இல்லாத குறையே இல்லை

முன்னேறிக்கொண்டு வருவது திட்டவட்டமாகத் தெரிகிறது.

### குறை நீக்கும் உறுப்பினர்

பஞ்சாயத்து உறுப்பினர்களில் ஒருவர் பெண் உறுப்பினர்; திருமதி புக்ரிதேவி என்ற அவர் எழுதப் படிக்கத் தெரியாதவர்; அவருடைய குறை அவ்வூர் குழந்தைகளுக்கும் ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதற்காக, கல்வியைப் பரப்புவதற்கு அவர் மேற்கொள்ளாத முயற்சிகளே இல்லை; அவற்றின் காரணமாக, கிராமத்தில் பள்ளி செல்லாத குழந்தைகளே கிடையாது எனலாம்.

கட்டி, இவ்விரு கிராமங்களுக்கும் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ரூ. 4,500 மதிப்புள்ள ஓர் ஓய்வு இல்லமும் இங்கு கட்டப்பட்டுள்ளது. இப் பஞ்சாயத்தைச் சார்ந்த கிராமங்களையெல்லாம் இணைக்கவேண்டுமானால், அதற்கு 13 மைல் நீள சாலைகள் அமைக்க வேண்டும்; அதற்கும் கிராம மக்களே ஒன்று சேர்ந்து, சிரமதானம் செய்து, 13 மைல் நீள சாலையை அமைத்து முடித்தனர். ஜியா, தாத் என்ற இரு கிராமங்களையும் இணைத்து தார்ச்சாலை போடுவதற்காக மூவாயிரம் ரூபாய் நன்கொடையும் அளிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து ஒரு பூந்தோட்டத்தையும் பராமரித்து வருகிறது. இதனுல் பஞ்சாயத்திற்கு நல்ல வருமானம் கிடைப்பதுடன், இது ஒரு அழகிய இடமாகவும் காட்சியளிக்கிறது. ஒரு கல் உடைக்கும் இடம் இங்கிருப்பதனுல், அதன் மூலம் பஞ்சாயத்திற்கு ரூபாய் இரண்டாயிரம் வருமானம் கிடைக்கிறது.

நெல், சோளம், பார்லி, கோதுமை, உருளைக்கிழங்கு, காய்கறிகளே இங்கு விளையும் முக்கியப் பயிர்கள்.

### இளைஞர் விவசாயிகள் மன்றம்

கிராம சேவக், திரு மதோராம் கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுகளாக இங்கு பணியாற்றி வருகிருர். நவீன முறைகள், ரசாயன உரங்களைப் பயன்படுத்தித் தீவிர முறையில் விவசாயம் செய்து வருவதன் மூலம் 25 சத வீதம் அதிக உற்பத்தி ஏற்பட்டுள்ளது. இங்குள்ள சில தீவிர விவசாயிகள், நவீன விவசாய முறைகளில் ஈடுபட்டு, உற்பத்தியைப் பெருக்கி சக விவசாயிகளுக்கும் அவர்கள் ஒரு வழிகாட்டியாக இருந்துவருகிறார்கள். இளைஞர் விவசாயிகள் மன்றம் கிராமத்திற்கு மதிப்பிடற்கரிய பல சேவைகளைச் செய்துள்ளது ; செய்து வருகிறது.

ஒன்று விவசாயத்திற்கெனவும், மற்ருென்று நெசவாளிகளுக்கெனவும், இரு கூட்டுறவு சங்கங்கள் செம்மையாக இயங்கி வருகின்றன.

கல்வியைப் பரப்புவதில்தான் ஜியா கிராமம் மிகுந்த நாட்டம் கொள்கிறது. ஆரம்பத்தில் இங்கு இரண்டு சதவீதமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருந்தனர் ; ஆனுல் இப்போது அது 30 சதவீதமாக உயர்ந்துவிட்டது. இரண்டு துவக்கப்பள்ளிகளும், ஓர் உயர்நிலைப் பள்ளியும் இங்குள்ளன. குழந்தைகளுக்குக் கல்வியறிவு அளிக்க எந்தவிதத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கின்றனர், ஜியா கிராமவாசிகள் ; திரு பாணி ராம் என்பவர் ஏழைதான் ; இருந்தாலும் தனக்கிருந்த ஒரே ஒரு வீட்டையும் அவர் பள்ளிக்கூடத்திற்காகக் கொடுத்துவிட்டார். நூலகமும், கிராம வானெலி மன்றமும் இங்கு இருக்கின்றன.

ஜியா கிராமத்தில் ஒரு பால்வாடியும், ஒரு மஹிள மண்டலியும் உண்டு. பால்வாடியில் இருபது குழந்தைகள் கவனிக்கப்படுகின்றன ; மண்டலியில் 15 உறுப்பினர்கள் இருக்கின்றனர். மண்டலியில் ஒரு தையல் நிலையம் துவக்கப்பட்டு, அதில் 25 சிறுமிகளுக்குத் தையல் பணியில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

### வற்ருத குடிநீர் வசதி

நீரூற்றுகள், கிணறுகள் தாம் இங்கு முக்கிய குடிநீர் ஆதாரம். இவை வற்றிப்போவதேயில்லை. குடிநீர் வசதி செய்வதற்காக ரூ. 1,35,000 மதிப்புள்ள ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் மக்களின் நன்கொடை ரூ. 6,000 ஆகும். ஆனுல் ஒரே ஒரு குறை ; இங்கு மின்சார வசதியில்லை. இன்னும் ஐந்தாண்டுகளில் மின்சார வசதி கிடைத்துவிடும் என்று எதிர் பார்க்கிருர்கள்.

**தஞ்சாவூர் மாவட்டம் :**

# சாலியமங்கலம் வழிகாட்டுகிறது

ஒரு குவிண்டால் நெல் விளைந்த ஒரு நிலத்திலிருந்து, இன்று $1\frac{1}{2}$ குவிண்டால் நெல் கிடைக்கிறது என்ருல் அதன் இரகசியம் என்ன ? குறுகிய கால பொறுக்கு விதைகளும், தீவிர விவசாயத் திட்டத்தின் நன்மைகளும், முறைகளும் ஒன்று சேரும் போது, இந்த 50 சத வீத அதிக விளைச்சல் கிடைக்கிறது.

இவற்றை முழுவதுமாக பயன்படுத்தி வெற்றி கண்டவர்கள் தஞ்சை மாவட்டம் சாலியமங்கலத்திலுள்ள 14 விவசாயிகள்.

சென்ற ஆண்டு ஜுன் மாதம்தான் இப் புதிய ரக ஏ டி.டி. 27 நெல் ரகம் இம் மாவட்டத்தில் புகுத்தப்பட்டது. அவர்களுடைய சராசரி மகசூல் ஏக்கருக்கு 3,297 பவுண்டுகளாகும் ; அதாவது ஒரு ஹெக்டேருக்கு இது சுமார் 3,700 கிலோவாகும். இங்கு மிக அதிக விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 5,500 பவுண்டுகளாகவும், குறைந்தது 1,875 பவுண்டுகளாகவும் இருந்தன.

### அனுபவத் தெளிவு

இவ்வாறு ஏற்றத்தாழ்வான மகசூலுக்குக் காரணம், இவ் விவசாயிகளெல்லாம் பலதிறப்பட்ட முறைகளைக் கையாண்டு விவசாயம் செய்ததே யாகும் என்று, விவசாய நிபுணர்கள் கூறுகின்றனர்.

[அடுத்த பக்கம் பார்க்க]

"பஞ்சாயத்து ராஜ்" "இண்டென்சிவ் அக்ரிகல்சர்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
**பக்கங்கள் :** 13 முதல் 16, மற்றும் 30 முதல் 33 வரை (8 பக்கங்கள்).
**Articles reproduced from "Panchayati Raj" on pages 13 to 16 and 31 to 33 and from "Intensive Agriculture" on page 30 (8 pages).**

# கண்டியின் கண்டுபிடிப்பு எங்கே?

அன்று மிகவும் புழுக்கமாக இருந்தது; கோடைக்காலம் ஆரம்பமாகி விட்டது. விவசாய வளர்ச்சி அதிகாரியும் நானும் "பாகீர் பாதா" என்ற ஒரு சிறிய கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தோம். 250 பேர்களே வசிக்கும் அந்த கிராமத்திற்கு நாங்கள் சென்றதற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. கலெக்டர் அவ்வூருக்கு அன்று வருகை தரவிருந்தார். அவரை வரவேற்க அக்கிராமத்தை தயார் செய்வதற்காகவே நாங்கள் அங்கு சென்றோம்.

"டாய்ச்சுங் நேடிவ் 1" என்ற அதிக மகசூல்தரும் விதைகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யப்பட்டிருந்த வயல் அன்று அறுவடையாகவிருந்தது; அதை நேரில் கண்டறிவதற்காகவே கலெக்டர் அங்கு வரவிருந்தார். பாகீர் பாதா என்ற இச்சிறிய கிராமம் ஒரிஸ்ஸா மாநிலத்தில், கட்டாக் மாவட்டத்திலிருக்கிறது.

**பரிசு பெற்ற இளைஞர் மன்றம்**

அக்கிராமத்திற்கு கலெக்டர் செல்வது இதுதான் முதல் தடவையன்று. சென்ற ஆண்டும், அதற்கு இரண்டாடுகளுக்கு முன்பும் இங்கு கலெக்டர் வந்திருக்கிறார். இக்கிராமத்திலுள்ள இளைஞர் மன்றம் பற்பல அரிய பணிகளை ஆற்றியுள்ளது. இளைஞர் மன்றங்களின் நற்பணிகள் பாராட்டப்பட்டு 1963-64-ம் ஆண்டில் இம்மன்றத்திற்கு ரூ. 1,500 பரிசளிக்கப்பட்டது.

கலெக்டர் வரப்போகிறார் என்ற செய்தியை நான் அறிவித்ததும், அவரை வரவேற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளில் கிராமவாசிகள் கவனம் செலுத்த துவங்கி விட்டனர். சிலர் தோரணங்களைக் கட்டினர்; சிலர் வளையங்களையும், 'ஆர்ச்சு'களையும் அமைத்தனர். வேறு சிலர் அறுவடைக்கு வேண்டிய கருவிகளை கொண்டுவந்து சேர்த்தனர். சாலைகளெல்லாம் சுத்தமாக்கப்பட்டன. கலெக்டர்களும் அவரது அலுவலர்களும் சரியாக 11 மணிக்கு கிராமத்தை வந்தடைந்தனர். இளைஞர் மன்றத் தலைவர் திரு. தர்மானந்த சாஹூ விருந்தினர்களை வரவேற்று, திரு. மோஹனி கண்டி என்ற ஒரு முற்போக்கு விவசாயியின் வயலுக்கு அவர்களை அழைத்துச் சென்றார்.

**வெறுத்தவர் விரும்பினார்**

திரு கண்டி என்பவர் எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்றார். இவர் முதலில் 'டாய்சுங் நேடிவ் I' விதையை பயிரிடவே மறுத்து விட்டார். ஆனால் வட்டார அதிகாரிகள் பலர் அவரைவிடாது வேண்டிக் கொண்டதன்பேரில், அவரும், அவரது நண்பர்களில் சிலரும் இவ்விதையை பயிரிட ஒப்புக்கொண்டனர். அவருக்குச் சொந்தமான 2 ஏக்கர் நிலம் முழுவதிலும்கூட இதைப் பயிரிட மறுத்து, 75 செண்ட் நிலத்திலேயே விதையிட்டார்.

அரை மணி நேரத்திலேயே அறுவடை முடிந்துவிட்டது; ஏக்கருக்கு 98 மணங்கு வீதம் மகசூலாயிற்று.

**மகிழ்ச்சி ஆரவாரம்**

எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர்; அவர்களெல்லோரையும்விட பெருமகிழ்ச்சியடைந்தவர் மோஹனி கண்டிதான்.

"பருவம் தவறி பெய்த பெருமழையினால் மகசூல் சற்று குறைந்துவிட்டது; இல்லாவிட்டால் இன்னும் விளைச்சல் கூடுதலாக இருந்திருக்கும்" என்று கூறினார் இளைஞர் மன்றத் தலைவர்.

"திரு. கண்டி அவர்களால் நாம் மிகவும் பெருமையடைகிறோம்" என்று கூறினார் வட்டார வளர்ச்சி அதிகாரி.

பாகீர்பாதா மக்களுக்கு தன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார், கலெக்டர்.

பக்கத்திலுள்ள திர்டால் வட்டாரத்தில் ஏக்கருக்கு 130 மணங்கு மகசூல் கண்டிருப்பதாக கூறினார், ஜில்லா பரிஷத் தலைவர். பாகீர்பாதா கிராமம் மேலும் முயன்று கூடுதல் விளைச்சலைக் காண வேண்டும் என்று விவசாயிகளை கேட்டுக் கொண்டார், அவர்.

—பிரசன்குமார் மிஸ்ரா

---

[முன் பக்கத் தொடர்ச்சி]

**சாலியமங்கலம் வழி காட்டுகிறது:—**

இவ்வுண்மை, திரு சி. ரங்கநாதன் என்ற விவசாயியின் அனுபவத்திலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இவருக்கு வரிசையாக நடவு நடப்பட்ட வயல்களிலிருந்து ஒரு ஏக்கருக்கு 5,500 பவுண்டுகளும், (அதாவது ஒரு ஹெக்டேருக்கு 6,614 கிலோ) சாதாரணமாக நடவு செய்யப்பட்ட வயல்களிலிருந்து ஒரு ஏக்கருக்கு 3,375 பவுண்டுகளும் (அதாவது ஒரு ஹெக்டேருக்கு 3,782 கிலோ) கிடைத்துள்ளன.

இது தவிர, திரு. ரங்கநாதன் கடந்த நான்கு ஆண்டுகளாகவே வயல்களுக்கு நல்ல முறையில் உரமிட்டு வருபவர்; அதனால் அவருக்கே மிக அதிகமாக விளைச்சல் கிடைத்தது. உரமிடப்படாத வயல்கள், முன்பெல்லாம் சரிவர கவனிக்கப்படாத வயல்களிலிருந்து கிடைத்த மகசூலெல்லாம் மிகவும் குறைவாகவே இருந்தன.

ஏ. டி. டி. 27 நெல் ரகத்தை உபயோகிப்பது விவசாயிகளிடையே பழக்கமாகிவிட்டால், அதனால் அவர்களுக்குப் பெரும் விளைச்சல் கிடைக்கும் என்று விவசாய நிபுணர்கள் திண்ணமாக எண்ணுகின்றனர்.

கிராமநலம் பகுதி 2 GRAMANALAM PART 2

# பஞ்சாயத்து அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.)


——— o ———

## கிராம மனித சக்தித் திட்ட வேலைகளுக்கு பஞ்சாயத்து தலைவர்கள் பணம் பெறுதல்—விளக்கங்கள்.

## Rural Manpower Programme—Implementation of—withdrawal of money by Presidents of Village Panchayats—Limits fixed for Self Pay Order—Enhancement in respect of works under Rural Manpower Scheme—Instructions issued.

துறைகள் மூலமாக எந்த வேலையும் நிறைவேற்ற, அதற்காக கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அதிகப்படியான பணம் தேவையாக இருக்குமானால், அவர்கள் பஞ்சாயத்து மூலமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி, ரூபாய் மூன்னூறுக்கு மேற்படாதவாறு முன் பணமாக ஒரு தொகையைப் பெற்று, ஒவ்வொரு பஞ்சாயத்தும், எல்லா வேலைகளையும் நிறைவேற்றலாம் என்று, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2329-ல் அரசாங்கம் உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. இந்த வரம்பை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ள முறையீடுகளையெல்லாம் பரிசீலனை செய்த பின்னர், இந்த வரம்பு ரூ. 300-ஆக இருக்க வேண்டுமென்று, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2528-ல் (இவ்வாணையின் தமிழாக்கத்தை "கிராம நலம்" ஜனவரி 1966 இதழ் பாகம் II. பக்கம் VI-ல் காண்க) அரசாங்கம் ஊர்ஜிதம் செய்தது.

2. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக உள்ளூரிலேயே திரட்டப்படும் தொழிலாளர்களுக்கு உடனுக்குடன் சம்பளம் வழங்குவதற்கும், திட்டத்தை முன்னதாகவே நிறைவேற்றி முடிப்பதற்கும், கிராம மனித சக்தித்திட்டம் செயலில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு இந்த உச்சவரம்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்று முறையீடுகள் வந்துள்ளன; கிராம மனித சக்தித் திட்டத்தின் விசேஷ அம்சங்களைக் கருத்தில் கொண்டு, இந்த நிதி வரம்பானது ரூ. 300-லிருந்து ரூ 500-க்கு (ரூபாய் ஐநூறு மட்டும்) உயர்த்தப்பட வேண்டுமென்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது.

இவ்வாறு உயர்த்தப்பட்ட தொகையானது, கீழ்க்கண்ட வரம்புகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) கிராம மனித சக்தித் திட்டம் செயலில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கு மட்டுமே இது பொருந்தும்.

(ஆ) ஒரு பஞ்சாயத்தில் எத்தனை விதமான வேலைகள் இருந்தாலும் இக்கையிருப்பு பணத்திற்குரிய உச்சவரம்பு ரூ. 500-ஆகத்தான் இருக்கும்.

(இ) முன் பணமாக பெற்ற இத்தொகையானது, பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலவழிக்கப்பட்டு விட வேண்டும்; அல்லது வேலைப் பட்டியல்கள் (Work bills) மூலம் சரி செய்யப்பட வேண்டும்; அல்லது சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களால், பஞ்சாயத்து யூனியன் கருவூலத்தில், தொகையைப் பெற்ற மாதத்திலிருந்து, மறு மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னால் திருப்பிச் செலுத்தப்பட்டு விட வேண்டும்.

(ஈ) நிறைவேற்றப்பட வேண்டிய எல்லா வேலைகளுக்குமாக ரூ. 500-க்கு மேற்படாத ஒரு தொகைக்கு, ஒரு தீர்மானம் மூலம் பஞ்சாயத்தின் அனுமதியை, தலைவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல் ஒன்று சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(உ) பஞ்சாயத்துக்களுக்கு பிறரால் கொடுக்கப்பட்ட சாமான்களுக்கு பணம் அளிக்கும் போது கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1398-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

(ஊ) இக் கையிருப்புத் தொகை பயன்படுத்துவது பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியால் (அவருடைய வருகையின் போது) சோதனையிடப்படும். கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் எல்லாத் தொகைகளும் சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதை கோட்டப் பஞ்சாயத்து அதிகாரியும்—பஞ்சாயத்துகளுக்கு வருகை தரும் போது—சரி பார்ப்பார்.

(எ) கையிருப்புத் தொகையைப் பெறுவதற்கான ஒவ்வொரு கொடுப்பு ஆணையுடன், இவ்வாணையுடன்

இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் ஒரு அறிக்கையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இந்த அறிக்கைகளை, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் சம்பந்தப்பட்ட யூனியன் பொறியாளர் அல்லது யூனியன் 'ஓவர்சியரு'க்கு அனுப்பி வைப்பார்; நடைபெற வேண்டிய வேலைகளுக்காக, இக் கையிருப்புப் பணம் சரியாகப் பயன் படுத்தப்படுகிறதா என்பதை யூனியன் பொறியாளர் அல்லது யூனியன் 'ஓவர்சியர்' கவனித்து வருவார்.

(ஏ) செலவழிக்கப்பட்ட சரியான தொகைகளுக்குப் பட்டியல்களை அளித்து அத்தொகையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒ) போதுமான நியாயம் இன்றி, பஞ்சாயத்துக்கள் நிதிகளி லிருந்து பணம் எடுக்கப்பட்டு, அல்லது அந் நிதிகள் பயன்படுத்துவதில் அதிக தாமதம் ஏற்பட்டிருக்கும் விஷயங் களெல்லாம், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளரால் மாவட்ட ஆட்சித் தலைவர், கிராம வளர்ச்சி நெறியாளர் ஆகியோருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

4. இவ் உத்தரவுகளெல்லாம், இவ்வாணை வெளியான தேதி (அதாவது 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ம் தேதியிலிருந்து) முதல் அமுலுக்கு வரும்.

* * *

துறைகள் மூலமாக வேலையை நிறைவேற்றுவதற்கு கையிருப்புப் பணம் பெற, கொடுப்பு ஆணையுடன் இணைக்கப்பட வேண்டிய தகவல்கள்:–

**இணைப்பு**

1. பஞ்சாயத்தின் பெயர்.
2. இணைக்கப்பட்டுள்ள கொடுப்பு ஆணையின் எண்.
3. தேவைப்படும் தொகை.
4. கையிருப்புத் தொகைக்கு அனுமதியளித்த பஞ்சாயத்து தீர்மானத்தின் எண்ணும், தேதியும்.
5. எவ்வேலைகளுக்குப் பணம் தேவைப்படுகிறதோ, அவை பற்றிய விவரங்கள்.
6. குறிப்புகள்.

தலைவர்................

பஞ்சாயத்து.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2077-ன் சுருக்கம்.)

---

## கிராம மனித சக்தித் திட்டம்—41 வட்டாரங்களுக்கு முன்மானியம் அளித்தல்— உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Rural Manpower Programme—Implementation of—1966–67—Sanction of advance grant of Rs. 40,000 to 41 Blocks—Orders—Issued.

இம்மாநிலத்தில் 72 பஞ்சாயத்து யூனியன்களில் கிராம மனித சக்தித் திட்டம் (Rural Manpower Programme) செயல்பட்டு வருகிறது. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1134-ன் (இவ்வாணையின் தமிழாக் கத்தை "கிராம நலம்" ஜூலை 1966-ம் ஆண்டு இதழ் பாகம் II, பக்கம் (III)-ல் காண்க) இணைப்பில் கண்டுள்ள 51 வட்டாரங்கள், ஒவ் வொன்றிற்கும், ரூ. 10,000 முன் மானியம் அளிக்கப்பட்டது. அன்ன வாசல் வட்டாரத்திற்கு ரூ. 10,000 முன் தொகையை, அவ்வட்டாரத் திற்கு அளிக்க வேண்டாமென்று, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவித்துள்ளதாக கிராம வளர்ச்சி நெறியாளர் கூறி யுள்ளார். எனவே, கிராம மனித சக்தி திட்டத்திற்குரிய செலவிற்காக 50 வட்டாரங்களுக்கு ரூ. 10,000 முன் மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. 1966–67-ம் ஆண்டில், கிராம மனித சக்தித் திட்டத்தை செயல்படுத்து வதற்காக, இந்திய அரசாங்க உணவு விவசாய, சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் ரூ. 65 லட்சத்தை ஒதுக்கி யுள்ளது. கிராம மனித சக்தித் திட்டம் சம்பந்தமாக, நிதியாண்டின் முடிவில் செலவை துரிதப்படுத்தும் நிலையைத் தவிர்ப்பதற்காக, பழைய, புதிய வேலைகளை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு, யூனியன்களின் நிதிகளைப் பயன்படுத்தி ரூ. 75,000 வரை செலவு செய்யலாம் என்று 64 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கிராம வளர்ச்சி நெறியாளர் உத்தரவுகள் பிறப்பித்துள்ளார்—கிராம வளர்ச்சி நெறியாளரின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதியிட்ட 84221 எச்-1 என்ற கடிதத்தைக் காண்க. மேலும் கிராம மனித சக்தித் திட்டத் தில் செலவைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான விளக்கங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பஞ்சா யத்து யூனியன் ஆணையாளர்கள், வரு வாய்க்கோட்ட அதிகாரிகள் ஆகியோ ருக்கு, கிராம வளர்ச்சி நெறியாளர் அனுப்பியுள்ளார்—கிராம வளர்ச்சி நெறியாளரின் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதியிட்ட 99663/66/ எச்-1 என்ற கடிதத்தைக் காண்க. அடுத்து, 1966–67-ம் ஆண்டில், கிராம மனித சக்தித் திட்டத்தை நிறைவேற் றுவதற்காக, இவ்வாணையின் இணைப் பில் கண்டுள்ள 41 வட்டாரங்களுக்கும், வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 40,000-க்கு அனுமதி வழங்கும்படி, கிராம வளர்ச்சி நெறியாளர் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. அதற்கேற்ப, இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள 41 பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றிற்கும், ரூ. 40,000-ஐ (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) முனமானியமாக அளிப்ப தற்கு அரசாங்கம் இப்போது அனுமதி வழங்குகிறது.

* * *

## இணைப்பு

ரூ. 40,000-ஐ முன்மானியமாகப் பெறும் 41 பஞ்சாயத்து யூனியன் களின் பட்டியல்.

### வட ஆர்க்காடு மாவட்டம்

1. செங்கம்
2. புதுப்பாளையம்
3. தண்டராம்பட்டு
4. தெள்ளார்
5. சோளிங்கர்

### தென் ஆர்க்காடு மாவட்டம்

6. சங்கராபுரம்
7. ரிஷிவந்தியம்
8. குறிஞ்சிப்பாடி

### செங்கல்பட்டு மாவட்டம்

9. பூண்டி
10. ஊத்துக்கோட்டை
11. லத்தூர்

### கோயம்புத்தூர் மாவட்டம்

12. தாளவாடி
13. அந்தியூர்
14. குண்டடம்
15. மூலனூர்

### கன்னியாகுமரி மாவட்டம்

16. முஞ்சிரா

### மதுரை மாவட்டம்

17. தொப்பம்பட்டி
18. ஒட்டன் சத்திரம்
19. பழனி
20. வேடசந்தூர்
21. டி. கல்லுப்பட்டி
22. கள்ளிக்குடி

### இராமநாதபுரம் மாவட்டம்

23. மண்டபம்
24. இராமநாதபுரம்
25. திருப்புல்லாணி
26. கமுதி
27. விருதுநகர்
28. திருச்சுழி

### தர்மபுரி மாவட்டம்

29. பருகூர்
30. ஊத்தங்கரை

### தஞ்சாவூர் மாவட்டம்

31. அறந்தாங்கி
32. பட்டுக்கோட்டை
33. தலைஞாயர்

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

34. குண்ணுண்டார் கோயில்
35. வேப்பூர்

### திருநெல்வேலி மாவட்டம்

36. ஓட்டப்பிடாரம்
37. புதூர்
38. கயத்தாறு
39. உடன்குடி
40. கடயம்
41. மேல நீலிதநல்லூர்

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 2-9-1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2110-ன் சுருக்கம்.)

---

## நகரப்பஞ்சாயத்துக்களில் வரி வசூலிப்பவர்களுக்கு பூரிப்புத்தொகை அளித்தல்

## Establishment—Town Panchayats—Bill Collectors—Payment of bonus for good Collection work—Orders in G.O.Ms No. 1995, Rural Development and Local Administration, dated 11—9—1962—Modified.

திறம்பட வரி வசூலிப்பவர்களுக்கு பூரிப்புத் தொகை (Bonus) அளிப்பது நகரப் பஞ்சாயத்துக்களில் மட்டுமே தொடர்ந்திருந்து வர வேண்டு மென்று, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1995-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டது. எந்த விகித அடிப்படையில் பூரிப்புத் தொகை அளிக்கப்பட வேண்டுமென்பதும் அவ் வாணையில் நிர்ணயிக்கப்பட்டது. வரி வசூலிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளோ ருக்கு ஊக்கம் அளித்து, வரி வசூல் வேலைகளை துரிதப்படுத்துவதற் காக, உத்தரவுகள் விரிவுப்படுத்தப்பட வேண்டுமா என்பதை அரசாங்கம் பரி சீலனை செய்தது. கேட்புத் தொகை யில் (Demand), 100 சதவீதமும், 95 சதவீதத்திற்குக் குறைவில்லாமலும் வரி வசூலிப்பவர்களுக்கு அளிக்கப் படும் பூரிப்புத் தொகையைத் தவிர்த்து, 97 சதவீதத்திற்கு மேல், ஆனல் 100 சதவீதத்திற்குக் குறை வாக, வரி வசூலிப்பவர்களுக்கும், ஒரு மாத சம்பளத்தில், நான்கில் மூன்று பங்கிற்குச் சமமான ஒரு தொகையை பூரிப்புத் தொகையாக அளிக்கலாம் என்று கிராம வளர்ச்சி நெறியாளர் சிபாரிசு செய்துள்ளார். கிராம வளர்ச்சி நெறியாளரின் சிபா ரிசை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, கேட்புத்தொகையில் 97 சதவீதத்திற்கு மேல், ஆனல் 100 சதவீதத்திற்குக் குறைவாக வரி வசூலிப்பு செய்பவர்களுக்கு, ஒரு மாதச் சம்பளத்தில் நான்கில் மூன்று பங்கிற்கு சமமான ஒரு தொகை யானது பூரிப்புத்தொகையாக அளிக்கப்பட வேண்டுமென்று அரசாங் கம் ஆணை பிறப்பிக்கிறது. இந்த சலுகை 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வரும்.

2. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1995-ல் உள்ள பத்தி 3-க்குப் பதிலாக, கீழ்க்கண்டவை பூர்த்தி செய்யப்படும்:—

3. கீழ்க்கண்ட விகிதங்களில் பூரிப்புத் தொகை அளிக்கப்படும்:—

| | |
|---|---|
| வரி வசூலிப்பவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கேட்புத் தொகையில் முழுவதையுமே வசூலித்து விடுபவர்களுக்கு. | ஒரு மாதச் சம்பளத்திற்கு சமமான பூரிப்புத் தொகை. |
| கேட்புத்தொகையில் 97 சதவீதத்திற்கு மேல், 100 சதவீதத்திற்கு குறைவாக வரி வசூலிப்பவர்களுக்கு. | ஒரு மாதச் சம்பளத்தில் நான்கில் மூன்று பங்கிற்கு சமமான பூரிப்புத் தொகை. |
| கேட்புத் தொகையில் 95 சதவீதத்திற்குக் குறைவில்லாமலும் 97 சதவீதத்திற்கு மேற்படாமலும் வரி வசூலிப்பவர்களுக்கு. | அரை மாதச் சம்பளத்திற்குச் சமமான பூரிப்புத் தொகை." |

இந்த ஆணையிலுள்ளவற்றை தங்கள் மாவட்டத்திலுள்ள எல்லா நகரப் பஞ்சாயத்துக்களின் கவனத்திற்கும் கொண்டு வருமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல தல நிர்வாகத்துறையின் 1966 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2052.)

---

## பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டிருப்பது பற்றிய அறிவிப்பு.

## Panchayat Unions—West Coimbatore Development District—Pollachi North and Pollachi South Panchayat Unions—Constitution of Panchayat Union Councils—Notification Under section 11 of the Madras Panchayats Act, 1958—Issued.

பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### பிற்சேர்க்கை

### அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத் (தமிழ்நாடு சட்டம் 35/1958) திலுள்ள விதி 11-ன், துணை விதி (1)-ன் கீழும், 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் தேதியிட்ட செயிண்ட் ஜார்ஜ் கோட்டை விசேஷ அரசிதழின் பிரிவு-2, பகுதி II-ல் 1-2 பக்கங்களில் வெளியிடப் பட்டுள்ள கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ம் தேதியிட்ட 1961-ம் ஆண்டு அறிவிப்பு எண் 11-2-686-ல், கோயம்புத்தூர் அபிவிருத்தி மாவட்டத்தில், பொள்ளாச்சி பஞ்சாயத்து யூனியனுக்கு, ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் ஏற்படுத்தப்படுவது சம்பந்தப்பட்ட வரையில் உள்ள அறிவிப்பிற்கு மாற்றங்களாகவும், கீழ்க்கண்ட பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் மன்றம் ஏற்படுத்தப்பட வேண்டிய தேதியாக, 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியை தமிழ்நாடு கவர்னர் அவர்கள் இதன் மூலம் நிர்ணயிக்கிறார்கள்.

1. பொள்ளாச்சி வடக்கு.
2. பொள்ளாச்சி தெற்கு.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண்2320-ன் சுருக்கம்.]

## ரூபாய், பைசாக்களை எண்களில் எழுதும் போது பைசாக்களை குறிப்பிடும் முறை:

## Ways and Means—Method of representing figures of Paise in amounts expressed in figures—Instruction—Isssued.

கணக்குச் சம்பந்தமான விஷயங்கள் அல்லது வேறு சந்தர்ப்பங்களில் பைசா, பைசாக்களை எண்களால் எழுதவேண்டியிருப்பின், புள்ளிக்குப் ( . ) பின்வரும் இரண்டு எண்களும் ( P ) என்ற எழுத்தால்— ரூ. 15,000·75 பைசா என்பது போல்—நன்கு தெளிவாக எழுதப்பட வேண்டும் என்று விளக்கங்கள் கொண்ட நிதித் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 834-க்கு, துறைத் தலைவர்கள், செயலகத் துறைகளின் கவனம் கொண்டுவரப்படுகிறது. மேற்கண்ட உத்தரவை மாற்றி, இந்திய அரசாங்கம் இப்போது ஒரு முடிவு செய்துள்ளது. அதன்படி, தசாம்ச முறையில் ரூபாய், பைசாக்களை சரியானபடி எழுதுவதானது, கீழ்க்கண்ட சான்றுகளின்படி இருக்க வேண்டும்.

(1) ஒரு நூற்று எண்பது ரூபாய், அறுபது பைசாக்கள்— ரூ. 180·60.

(2) அறுபது பைசாக்கள்—ரூ. 0·60 அல்லது 60 பைசாக்கள்.

(3) ஆறு பைசாக்கள்—ரூ. 0·06 அல்லது 6 பைசாக்கள்.

தசாம்ச முறையில், ரூபாய், பைசாக்களை குறிப்பிடும்போதெல்லாம், மேற்கண்ட திருத்தப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுமாறு எல்லா செயலகத் துறைகளும், துறைத் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(நிதித் துறையின் 18—3—1966 தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 30195)

---

## தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டு செயலாளரின் பதவிக்காலம்—போர்டின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## Madras State Khadi and Village Industries Board—Reconstituted with effect from 1-4-1966—Appointment of Secretary—Term of Office—Proposal of the Board—Approved.

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டின் செயலாளரான திரு வி. பத்மநாபன், மேலும் இரண்டு மாத காலத்திற்கு—அதாவது 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1966-ம் ஆண்டு மே மாதம் 31-ம் தேதி வரை-இந்த இரண்டு நாட்களையும் சேர்த்து தற்காலிகமாக, கதர், கிராமத் தொழில்கள் போர்டுக்கு செயலாளராக தொடர்ந்திருந்து வரவேண்டுமென்று, கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 31—ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 906-ல், அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது.

(2) திரு பத்மநாபன் போர்டின் செயலாளராக 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் மீண்டும் நியமிக்கப்பட வேண்டும் என்றும், அவர் 1969-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி வரை—அன்றுதான் இப்போதைய போர்டின் பதவிக்காலம் முடிகிறது-பதவியிலிருக்கலாம் என்றும், அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்வதென புதிதாக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டு, அதன் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் தேதியன்று நடந்த கூட்டத்தில் தீர்மானம் செய்துள்ளது.

(3) உணவு, விவசாயத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2782—ல் வெளியிடப்பட்டுள்ள 1960-ம் ஆண்டு தமிழ் நாடு கதர், கிராமத் தொழில்கள் போர்டு விதிகளிலுள்ள, விதி 3 (2)ன் கீழ், மேற்கண்டுள்ள பத்தி 2-ல் உள்ள போர்டின் சிபாரிசை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 1-6-1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1412-ன் சுருக்கம்.)

---

▼

## கிராமத் தொழில்கள் திட்டம்—கிராமத் தொழில்களுக்கான மாநில ஆலோசனைக் குழுவிற்கு நிலைக்குழு நியமனம்.

## Rural Industries Project—Standing Committee of the State Level Advisory Committee for Rural Industries—Reconstitution—Ordered.

கிராமத் தொழில்களுக்கான மாநில ஆலோசனைக் குழுவிற்கு ஒரு துணைக் குழுவானது, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1855-ல் அமைக்கப்பட்டது. இந்த நிலைக் குழுவானது, கிராம நல தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1390-ல் ஏற்படுத்தப்பட்ட கிராமத் தொழில்களுக்கான மாநில ஆலோசனைக் குழுவின், ஒரு துணைக் குழுவேயாதலால், மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலமானது 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி அன்று முடிவடைந்தபோது, இந்நிலைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலமும் அன்றேடு முடிவடைந்ததுவிட்டது. 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல், மாநில ஆலோசனைக் குழுவானது கிராம நல தல நிர்வாகத் துறையின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1451-ன் இணைப்பிலுள்ள உறுப்பினர்களைக்கொண்டு மீண்டும் அமைக்கப்பட்டது.

(2) எனவே இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள உறுப்பினர்களைக்கொண்டு, 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல், கிராமத் தொழில்களுக்கான மாநில ஆலோசனைக் குழுவிற்கு, ஒரு நிலைக்குழு நியமிக்கப்படுகிறது என்று அரசாங்கம் இப்போது ஆணைப் பிறப்பிக்கிறது.

(3) கிராமத் தொழில்களுக்கான மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் முடிவடையும் போது, இக்குழுவின் பதவிக் காலமும் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி அன்று முடிவுறும். இக் குழு இரு மாதங்களுக்கு ஒரு முறையோ, அல்லது தேவைப்படின் இன்னும் சீக்கிரமாகவோ கூடும். கிராமத் தொழில்கள் திட்டங்கள் நிறைவேற்றப்படுவது சம்பந்தமாக, அரசாங்கத்திற்கு இக்குழு ஆலோசனைக் கூறும்.

### இணைப்பு

கிராமத் தொழில்களுக்கான மாநில ஆலோசனைக் குழுவிற்கு மீண்டும் அமைக்கப்பட்ட நிலைக்குழு உறுப்பினர்களின் பட்டியல்.

(1) அரசாங்கக் கூட்டுச் செயலாளர், கிராம நல தல நிர்வாகத் துறை—தலைவர்.

(2) தலைவர்கள், ஓமலூர், நாங்குநேரி, ஸ்ரீ பெரும்புதூர், திட்டக் குழுக்கள்.

(3) தொழில், வணிகத் துறை நெறியாளர், சென்னை.

(4) அரசாங்கச் செயலாளர், நிதித் துறை அல்லது அவரது பிரதிநிதி.

(5) அரசாங்கச் செயலாளர், தொழில், தொழிலாளர் நலம், வீட்டு வசதித் துறை, அல்லது அவரது பிரதிநிதி.

(6) அரசாங்கத் தொழில் ஆலோசகர், தொழில், தொழிலாளர் நலம், வீட்டு வசதித் துறை.

(7) செயலாளர், மாநில கதர், கிராமத் தொழில்கள் போர்டு, சென்னை.

(8) தொழில், வணிகத் துறை கூட்டு நெறியாளர், கிராமத் தொழில்கள் திட்டம், சென்னை.

(9) நெறியாளர், சிறு தொழில்கள் சர்வீஸ் இன்ஸ்டிடியூட், சென்னை.

(10) அரசாங்கத் துணைச் செயலாளர் (திட்ட வேலைகள்), கிராம நல தல நிர்வாகத் துறை—கூட்டுநர் (Convenor).

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 6–7–1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1677-ன் சுருக்கம்.)

---

## பயிர் விளைச்சல் போட்டி—நடுவர் குழுக்களின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டு, நிர்ணயிக்கப்படுகிறது.

## Agriculture—Crop yield Competition—Harvest at various level—Enlargement and fixation of term of office of Judging Committees—Proposals—Accepted—Orders—Issued

உணவு, விவசாயத்துறையின் 1960–ம் ஆண்டு போட்டி விதிகளிலுள்ள விதி 13-க்கு, மேற்கண்ட நவம்பர் மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று அரசாங்கம் எண் 133457-ல் அங்கீகரிக்கப்பட்டுள்ள பயிர் விளைச்சல் ஆணைப் பிறப்பிக்கிறது :—

## திருத்தம்

(i) பயிர் விளைச்சல் போட்டி விதிகளிலுள்ள 13-வது விதியில் இப்போதுள்ள நடுவர் குழுக் (Judging Committees) களுக்குப் பதிலாக, கீழ்க்கண்டவை இட்டு நிரப்பப்படும்:—

**கிராம நிலை**

1 பஞ்சாயத்துத் தலைவர் அல்லது பஞ்சாயத்தால் நியமிக்கப்பட்ட ஒருவர். (பஞ்சாயத்து பிரதிநிதி இல்லாவிடில், மேலும் ஒரு தீவிர விவசாயியை சேர்த்துக் கொள்ளவேண்டும்.)

2. கிராம பள்ளி ஆசிரியர். (கிராமத்தில் பள்ளிக் கூடம் இல்லாவிட்டால், பள்ளிக்கூட ஆசிரியர் இடத்தில், கூடுதலாக இன்னொரு தீவிர விவசாயி இருப்பார்.)

3. கிராம சேவக், களப்பணியாளர் (Fieldman) அல்லது செயல்முறை களப்பணியாளர் (Demonstration Maistry).

4, 5. இரண்டு தீவிர விவசாயிகள்.

**வட்டார நிலை**

1, 2, 3 மற்றும் 4. பஞ்சாயத்து யூனியன் மன்றத்திலிருந்து நான்கு பிரதிநிதிகள்.

5. வட்டார அபிவிருத்தி அதிகாரி அல்லது அவரது பிரதிநிதி.

6. வட்டாரத்தின் விவசாய வளர்ச்சி அதிகாரி.

7. ஓர் உதவியாளர். அதாவது:—பயிர் பாதுகாப்பு உதவியாளர் அல்லது எண்ணெய் வித்து வளர்ச்சி உதவியாளர் அல்லது மாவட்ட விவசாய அதிகாரியின் கீழ் வேலை செய்யும் வேறு எந்த ஒரு பயிர் வளர்ச்சி உதவியாளர்.

8, 9. இரண்டு தீவிர விவசாயிகள்.

**விவசாய 'டிமான்ஸ்டிரேடர்' (Agricultural Demonstrator) விவசாய வளர்ச்சி அதிகாரியின் ஆட்சி வரம்பு:**

1. தாசில்தார் அல்லது அவரது பிரதிநிதி.

விவசாய 'டிமான்ஸ்டிரேடர்'.

3, 4 மற்றும் 5. பல்வேறு கிராமங்களிலிருந்தும் தீவிர விவசாயிகள்.

**மாவட்ட நிலை:**

1. மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது அவரது பிரதி நிதி

2. சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அதிகாரி.

3. சம்பந்தப்பட்ட மாவட்ட விவசாய அதிகாரி; ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்ட விவசாய அதிகாரிகள் இருப்பின், மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப் பட்ட ஓர் அதிகாரி.

4, 5, 6, 7 மற்றும் 8. மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்பட்ட ஐந்து தீவிர விவசாயிகள்.

9, 10. மாவட்ட வளர்ச்சி மன்றத்திலிருந்து இரண்டு பிரதிநிதிகள்.

**மாநில நிலை:**

1. கிராம வளர்ச்சி நெறியாளரின் ஒரு பிரதிநிதி.

2. விவசாய நெறியாளரின் ஒரு பிரதிநிதி—சம்பந்தப்பட்ட பிராந்திய விவசாய துணை நெறியாளர்.

3, 4, 5, 6, 7 மற்றும் 8. மாநில விவசாயிகள் மன்றத்தினால் நியமிக்கப்படக்கூடும் விவசாயிகளான பிரதிநிதிகள் 6 பேர்கள்.

9. போட்டியில் அறுவடைக்கு வரும் வயலைச் சார்ந்த பகுதியின் பஞ்சாயத்து யூனியன் மன்ற தலைவர் அல்லது உபதலைவர்.

10. சம்பந்தப்பட்ட பிராந்திய விவசாய துணை நெறியாளரின் ஆட்சி வரம்பிற்குள் தலைமையிடத்தைப் பெற்று, விவசாய துணை நெறியாளர் தரத்தைப் பெற்றுள்ள, விவசாயத்துறையைச் சேர்ந்த எந்த ஒரு அதிகாரி அல்லதுபிராந்திய விவசாய துணை நெறியாளரால் நியமிக்கப்பட்ட எந்த ஒரு அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரி

(ii) பயிர் விளைச்சல் போட்டி விதிகளிலுள்ள விதி 13-ன் முடிவில், கீழ்க்கண்ட குறிப்பு சேர்க்கப்படும்:—

குறிப்பு.—மேற்கண்ட குழுக்களானது 1966–67-ம் ஆண்டு முதல் மூன்றுண்டு காலத்திற்கு தொடர்ந்திருக்கும்.

(விவசாயத்துறையின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 142946-ன் சுருக்கம்.)

—(o)—

## பொற்கொல்லர்களின் குழந்தைகள், அவர்களைச் சார்ந்தவர்களுக்குக் கல்விச் சலுகைகள்.

## Education—Educational concessions to childre and dependents of goldsmiths—Eligibility for fresh awards—Government of India decision—Communicated.

தங்கக் கட்டுப்பாடு உத்தரவினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களின் குழந்தைகள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சில கல்விச் சலுகைகள், உபகாரச் சம்பளங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது—1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் (கல்வி) 1044, மற்றும் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் (கல்வி) 1764. இவ்விதச் சலுகைகளை பயன்படுத்தி ஏற்கனவேயே படித்துக்கொண்டு வருபவர்கள் விஷயத்தில் இந்தக் கல்விச் சலுகைகளையும், தொழில் நுட்பப் பயிற்சிகளையும் 1966-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குப் பிறகும் கூட நீடிக்குமாறும், 1966-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குப் பிறகு கல்விச் சலுகைகளையும், தொழில் நுட்ப பயிற்சிகளையும் ஒட்டி புதிய மனுக்களை வரவேற்கக் கூடாது என்றும், இப்போது இந்திய அரசாங்கம் கூறியுள்ளது. மேற்கண்டவாறு இந்திய அரசாங்கம் கூறியுள்ளதாலும், இந்திய அரசாங்கத்தின் முழு உதவியைக் கொண்டே இத்திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாலும், மேற்கூறப்பட்டுள்ள ஆணைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள சலுகைகளும், உபகாரச் சம்பளங்களும், 1966-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதிக்குப் பிறகு புதிதாக அனுமதிக்கக்கூடாது என்று அரசாங்கம் ஆணைப் பிறப்பிக்கிறது. இருப்பினும், ஏற்கனவேயே படித்துக்கொண்டிருப்பவர்கள் விஷயத்தில், அவர்கள் அந்த குறிப்பிட்ட பயிற்சியை முடிக்கும் வரை, இந்த உபகாரச் சம்பளங்களும், சலுகைகளும் அவர்களுக்குத் தொடர்ந்து அளிக்கப்படலாம்.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 1966ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 682-ன் சுருக்கம்.)

---

## அரசாங்கத்துறைகளினிடையே ஏற்படும் அசம்பாவிதங்களின் பேரில் நடுநிலை தவறாத விசாரணை நடத்துதல் பற்றி உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Law and Order—Incidents involving more than one department of Government—Impartial enquiry—Procedure, etc.—Orders issued.

சமீபத்தில் ஓர் உள்ளூர்ப் பிரச்னையின் பேரில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றில், அரசாங்கத்தின் இரு துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக்கொண்டனர். இதனால், அப்பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட இரு துறைகளின் கௌரவமும் பாதிக்கப்பட்டு விட்டதெனக் கருதப்பட்டு, இரு துறைகளையும் சார்ந்த அதிகாரிகளிடையே நிலவி வந்த சுமுகமான உறவும் கெட்டு விட்டது. இச்சம்பவத்தில் நேரிடையாகப் பாதிக்கப்பட்ட ஒரு துறையைச் சார்ந்த உயர்ந்த அதிகாரி ஒருவர், அச்சம்பவத்தின் பேரில் ஒரு விசாரணை நடத்தி, அதற்குரிய அறிக்கையையும் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அவ்வறிக்கையில், அவர் அவ்விரு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளின் நடத்தையின் பேரில் தன்னுடைய அபிப்பிராயத்தையும் கூறி, அவரது துறைக்கு எதிராக உள்ள துறையைச் சார்ந்த அதிகாரியின் பேரில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து, குறிப்பாக என்ன நடவடிக்கையெடுக்கலாம் என்றும் சிபாரிசு செய்துள்ளார்.

2. அந்த அதிகாரியின் கருத்துக்களுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்த போதிலும், அவரது சிபாரிசுகளின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் தயங்குகிறது ; ஏனெனில் நிகழ்ந்த சம்பவத்தின் பேரில் இரு துறைகளையும் சாராத ஒரு நடுநிலை அதிகாரியால் நடத்தப்பட்ட ஒரு விசாரணையின் முடிவாக அந்த சிபாரிசுகள் இருக்கவில்லை என்பது தான். எனவே, இனிமேல் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அரசாங்கத்துறைகளிடையே, அவற்றின் கௌரவத்தை பாதிக்கக்கூடிய அளவில் நிகழும் எந்தச் சம்பவங்களிலும், அச்சம்பவங்களில் ஈடுபடாத வேறொரு துறையைச் சார்ந்த, அதிகாரியால், நடுநிலை தவறாத விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்கிறது. நிகழ்ந்த சம்பவத்தைக் கருத்தில் கொண்டு, அதன் தரமறிந்து, அதன் பேரில் ஒரு விசாரணையை, எந்த அதிகாரி—வருவாய்கோட்ட அதிகாரியா அல்லது மாவட்ட வருவாய் அதிகாரியா—நடத்த வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவரே தீர்மானிக்க வேண்டும் என்று அரசாங்கம் மேலும் முடிவு செய்கிறது.

3. மேற்கண்டவாறு ஏற்படும் அசம்பாவிதங்களையெல்லாம் துறைத் தலைவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உடனே தெரிவிக்க வேண்டும். இது பற்றி அறிந்தவுடனேயே, அதன் பேரில் வருவாய்க் கோட்ட அதிகாரி அல்லது மாவட்ட வருவாய் அதிகாரியால்

துரிதமாக விசாரணை செய்யப்பட, மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உடனே வழிவகைகள் செய்ய வேண்டும். இம் மாதிரியான சம்பவத்தில் வருவாய்த்துறையும் ஈடுபட்டிருந்தால், அச் சம்பவத்தின் முக்கியத்துவம், தரம், ஈடுபட்டுள்ள அலுவலர்களின் தகுதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, அச்சம்பவத்தின் பேரில், அந்த கோட்டம் அல்லது வேறொரு கோட்டத்தைச் சார்ந்த வருவாய்க்கோட்ட அதிகாரி, அல்லது மாவட்ட வருவாய் அதிகாரியில், எவரால் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் முடிவு செய்வார். இருந்த போதிலும், வருவாய்த் துறையையே சார்ந்த அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி (Gazetted Officer) சம்பந்தப்பட்டுள்ள கடுமையான சம்பவங்களின் பேரில் எந்த அதிகாரி (அதாவது மாவட்ட ஆட்சித்தலைவர் அல்லது வருவாய்த்துறைக் கழக உறுப்பினர் ஒருவர்) விசாரணை நடத்த வேண்டும் என்பது பற்றி அரசாங்கம் முடிவு செய்ய அச்சம்பவம் பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்கு தகவல் அனுப்ப வேண்டும்.

4. விசாரணையின்போது, சம்பவத்தில் ஈடுபட்டுள்ள அல்லது பழி சுமத்தப்பட்டுள்ள அதிகாரிகள், அவரவர்களுடைய வழக்குகளை—அவரவர்களால் சாட்சிகள் எவரேனும் குறிப்பிடப்பட்டிருப்பின் அவர்களுடனும்—முறையிட்டுக் கொள்ள போதிய சந்தர்ப்பத்தை விசாரணை செய்யும் அதிகாரி (வருவாய்க்கோட்ட அதிகாரி அல்லது மாவட்ட வருவாய் அதிகாரி) அளிக்க வேண்டும். இவ் விசாரணையானது, ஏறக்குறைய, உண்மைகளைக் கண்டு பிடிக்கக் கூடிய வகையில் இருக்க வேண்டுமென்பது மட்டுமின்றி, தேவைப்படின், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினிடையே பொறுப்புக்களை பகிர்ந்தளிக்கும் முறையிலும் இருத்தல் வேண்டும். எவ்வளவு சீக்கிரமாக விசாரணை நடத்தி முடிக்க முடியுமோ, அவ்வளவு துரிதமாக விசாரணை நடத்தி முடித்த பிறகு, தன்னுடைய திட்டவட்டமான முடிவுகளையும், சிபாரிசுகளையும் கொண்ட ஓர் அறிக்கையை விசாரணை செய்த அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அரசாங்கத்திற்கு அவ்வறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பும்போது, அதில் தன்னுடைய குறிப்புகளையும் சேர்த்து அவர் அனுப்புதல் வேண்டும். அரசாங்கம் அவ்வறிக்கையை பரிசீலனை செய்து, நிகழ்ந்த சம்பவத்தில் குற்றம் செய்திருந்த அதிகாரியின் மீது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி முடிவு செய்யும்.

(பொதுத் துறையின் 5—4—1966 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 810-ன் சுருக்கம்.)

---

## பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வு—சில விதி விலக்குகள்.

## Examination—Panchayat Development Account Test—Exemption from passing the test.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்—

(அ) தல நிர்வாக அலுவலர்களுக்குரிய கணக்குத் தேர்வு (Account Test for Employees of Local Bodies), நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு (Account Test for Executive Officers) ஆகியவற்றில், தேர்ச்சியடைந்துள்ள ஒருவருக்கு, பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வில் (Panchayat Development Account Test) வெற்றி பெறுவதினின்றும் விலக்கு அளிக்கக்கூடுமா என்றும்,

(ஆ) 1965-ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்ற அடித்தள அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு பாகம் I, II (Account Test for Subordinate Officers, Parts I and II) அல்லது அடித்தள அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு, பாகம் 1, மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு ஆகியவற்றில் பங்கு பெற்று, தேர்ச்சி பெற்றுள்ளவர்கள், 1965-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், முதலாவதாக, நடைபெற்ற பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்விலும் தேர்ச்சி பெறவேண்டிய தேவையில்லையா என்றும்,

விளக்கங்கள் கோரியுள்ளார்.

(2) மேற்கண்ட பத்தி (1)–ல் கண்டுள்ள விஷயங்களை அரசாங்கம் பரிசீலனை செய்து, கீழ்க்கண்டவாறு உத்தரவுகள் பிறப்பிக்கிறது.—

துணைப்பத்தி (அ) : தல நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்விலும், நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்விலும், தேர்ச்சியடைந்துள்ளவர்கள் பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வில், தேர்ச்சியடைய வேண்டியதில்லை; ஏனென்றால், தல நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்விற்கும், நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்விற்குமுள்ள பாடங்களெல்லாம் "பஞ்சாயத்து யூனியன்களில் கணக்குகள் பராமரிப்பு பற்றிய கையேடு" (Manual of Instructions for the Maintenance of Accounts of Panchayat Unions) தவிர்த்து, ஏனைய பாடங்களெல்லாம் — பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்விற்கு வகுக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்களிலும் இருக்கின்றன.

துணைப்பத்தி (ஆ) : 16-1-1965-க்கு முன்பு—அதாவது கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 101—வெளியான தேதிக்கு முன்பு—கணக்குத் தேர்வுகள் சிலவற்றில், வெற்றியடைந்துள்ளோர் மட்டுமே, பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வினின்றும் தேர்ச்சிப்பெறத் தேவையில்லை என்று, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜுன் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்கக் குறிப்பாணை எண் 42921-ல் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், 1965-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற கணக்குத் தேர்வுகள் சிலவற்றில் தேர்ச்சியடைந்தோர் எல்லோருக்குமே பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறுவதினின்று விலக்களிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது; ஏனெனில், கணக்குத் தேர்வுகள் சிலவற்றில் தேர்ச்சி பெறுவதானது, பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத்தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு சமமானதே என்று கருதப்படுவதும், முதல் பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வானது, 1965-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில்தான் நடைபெற்றது என்பதுமேயாகும். எனவே, கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 101-க்குப் பின்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

"கிராம நல தல நிர்வாகத்துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 101-ல் (பிறகு திருத்தப்பட்டபடி) உள்ள பத்தி 6-ல், கடைசியாக இப்போதுள்ள துணைப்பத்திக்குப் பதிலாக கீழ்க்கண்டவை இட்டு நிரப்பப்படும்.

"1965-ம் ஆண்டு மே மாதத்தில் அல்லது அதற்கு முன்பாகவே, ஒருவர், அடித்தள அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு பாகம் I, II, அல்லது அடித்தள அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு பாகம் I மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு அல்லது தல நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வு, மற்றும் நிர்வாக அதிகாரிகளுக்குரிய கணக்குத் தேர்வுகளில், தேர்ச்சியடைந்திருந்தால், அவர் பஞ்சாயத்து வளர்ச்சி கணக்குத் தேர்வில் தேர்ச்சிபெறவேண்டியதில்லை."

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 21—5—1966 தேதியிட்ட அரசாங்க குறிப்பாணை எண் 173478)

---

## 1966-ம் ஆண்டு தமிழ்நாடு விவசாய வருமானவரி திருத்தச் சட்டம் அமுலுக்கு வரும் தேதி

## Act—The Madras Agricultural Income-Tax (Amendment) Act, 1966—Date of coming into force of the Act—Notification—Issued.

கீழ்க்கண்ட அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### அறிவிப்பு

1966-ம் ஆண்டு தமிழ்நாடு விவசாய வருமானவரி (திருத்தச்) சட்டத்திலுள்ள (தமிழ்நாடுச் சட்டம் 7/1966), பிரிவு 1-ன், உட்பிரிவு 2-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ்நாடு கவர்னர் அவர்கள், இச் சட்டம் அமுலுக்கு வரும் தேதியாக 1966-ம் ஆண்டு மே மாதம் 13-ந் தேதியை இதன் மூலம் குறிப்பிடுகிறார்கள்.

(வருவாய்த்துறையின் 1966ம் ஆண்டு மே மாதம் 12ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1640—ன் சுருக்கம்.)

## பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு வேண்டுகோள்

புதிய பஞ்சாயத்து ஆட்சி, தமிழ்நாட்டில் திறம்படச் செயலாற்றி வருகிறது. பஞ்சாயத்து ஆட்சிப் பொறுப் பேற்றிருக்கும் மக்கள் தலைவர்கள், கிராம வளர்ச்சிப் பணிகளில் காட்டும் ஆர்வமும் அக்கறையும் பாராட்டுதலுக் குரியது. தங்களுடைய பொறுப்பை நிறைவேற்றுகையில், நிர்வாக ரீதியில் சில சந்தேகங்கள், அவர்களுக்கு ஏற்படலாம்.

உதாரணமாக, கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் பூர்த்தியாகாமல் இருக்கும் வேலைகள் பற்றியும், நான்காவது திட்டத்தின் முதலாண்டான நடப்பாண்டில் மேற்கொள்ளவேண்டிய வேலைகள் பற்றியும் பலவிதமான சந்தேகங்கள், சில சமயங்களில் தவறான கருத்துக்கள் கூட, சில பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு ஏற்படலாம். கிராம வேலைகள் திட்டம் பற்றிய தெளிவான விளக்கங்கள் அடுத்த இதழில் அளிக்கப்படும்.

'கிராம நலத்தி'ல் 'கேள்வியும்-பதிலும்' என்ற தொடரில், தொடர்ந்து, பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எழுப்பும் வினாக் களுக்கும், சந்தேகங்களுக்கும் பதிலும் விளக்கமும் அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, பஞ்சாயத்து ஆட்சி நிர்வாகம் சம்பந்தமாக தங்களுடைய சந்தேகங்களையும், வினாக்களையும் பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தெளிவாக எழுதி அனுப்பினால், அதற்கான விளக்கமும் பதில்களும் 'கிராம நலம்' மூலமாக அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர்,
'கிராம நலம்'
சென்னை-9.

## "கிராம நலம்" சந்தாதாரர்களுக்கு :

கீழ்க்கண்டுள்ள சந்தா எண்களுடைய "கிராம நலம்" சந்தாதாரர்களின் ஆண்டு சந்தா, 1967-ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் முடிவடைகிறது. "கிராம நலம்" இதழ்களைத் தொடர்ந்து பெறுவதற்கு, இந்தச் சந்தா எண்களுடைய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிட்டு, ஆண்டு சந்தா ரூ. 2 வீதம், சந்தாத் தொகையை "கிராம வளர்ச்சி நெறியாளர், செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு, மணியார்டர் மூலம் அனுப்பக் கோரப்படுகிறார்கள். சந்தா எண், "கிராம நலம்" இதழ்கள் அனுப்பப்படும் மேல் உறையில் சந்தாதாரரின் முகவரிக்குமேல் பொறிக்கப் பட்டிருக்கிறது:

சந்தா எண்கள் :

13613
14053
28756
29281 முதல் 29411 வரை
29413 முதல் 29447 வரை
29703
29756

## இந்த இதழில்


| | பக்கம். |
|---|---|
| எழுத்தறிவிக்கும் பணியில் ஏறு நடை போடும் பாரதம் | 2 |
| தமிழ்நாட்டில் விவசாய உற்பத்திப் பெருக்கம் | 3 |
| கூட்டலும் பெருக்கலும் | 7 |
| மணல் பரப்பு நெல் விளையும் வயலாகுமா ? | 11 |
| இப்படியும் ஒரு பஞ்சாயத்து | 15 |
| நரிக்குறவர்களின் நல்வாழ்வு | 17 |
| முன் வினை முந்தி வர (சிறு கதை) | 26 |
| நெல் தாளடியில் பருத்தி | 30 |


## அடுத்த இதழில்...

புயலும் அமைதியும் ('அமைதி அரங்கம்' பற்றிய சிறப்புக் கட்டுரை)

மரங்களின் பராமரிப்பு—பஞ்சாயத்து நிறுவனங் களின் பொறுப்புகள்
(திரு எஸ். சுப்பையன்)

பஞ்சாயத்து உணவு உற்பத்தித் திட்டம்
[திரு A. வெங்கட்ராமன்]

பிணி தீர்க்கும் அரும்பணி....

சமுதாயப் பொங்கல் ...


**வெளியிடுபவர் :**
திரு கா. திரவியம், ஐ.ஏ.எஸ்.

**ஆசிரியர் :**
திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.


Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9



உலக சமாதானம் உருவாக, இந்தியா, எகிப்து,
யூகோஸ்லேவியா நாட்டுத்தலைவர்களின் கூட்டு முயற்சி-
டெல்லியில் - அக்டோபர், 24-
[திருமதி இந்திரா காந்தி, திரு 'நாசர்', திரு 'டிட்டோ']

# தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்கள்

REGD.NO.M.7277
© தமிழ் நாடு அரசாங்கம்
1966.




விளக்கம்

அபிவிருத்தி மாவட்டம் ——
மாவட்ட எல்லை ------

| வரிசை எண் | மாவட்ட பெயர்கள் | ப.யூ. | கி.ப. | ந.ப. |
|---|---|---|---|---|
| 1 | வட ஆர்க்காடு | 36 | 1575 | 27 |
| 2 | தென் ஆர்க்காடு | 34 | 1738 | 23 |
| 3 | செங்கல்பட்டு | 27 | 1210 | 26 |
| 4 | கோயம்புத்தூர் | 41 | 787 | 65 |
| 5 | கன்னியாகுமரி | 9 | 1 | 45 |
| 6 | மதுரை | 34 | 849 | 45 |
| 7 | நீலகிரி | 4 | 28 | 20 |
| 8 | ராமநாதபுரம் | 32 | 1295 | 26 |
| 9 | சேலம் | 35 | 732 | 42 |
| 10 | தர்மபுரி | 16 | 585 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 36 | 1593 | 31 |
| 12 | திருச்சி | 39 | 1220 | 38 |
| 13 | திருநெல்வேலி | 31 | 818 | 55 |
| | மொத்தம் | 374 | 12431 | 454 |

12885

ப.யூ. பஞ்சாயத்து யூனியன்கள்.
கி.ப. கிராமப்பஞ்சாயத்துக்கள்.
ந.ப. நகரப்பஞ்சாயத்துக்கள்.

பஞ்சாயத்து நகரமைப்புகள் [TOWNSHIPS] } 14